
www.tamilarangam.net

# எரிமலை



கார்த்திகை 1994










தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**நாங்கள் தினசரி பேப்பரில் படிக்கும் போது உள்நாட்டுப் போர் என்றும், பிரிவினைவாத சண்டை என்றும்தான் நம்பியிருந்தோம்.**

# அக்கறைப்பூக்கள்

## போராட்டத் தூரிகை

எரிமலை ஆசிரியருக்கு,

எரிமலை இதழ் போராட்டத் தூரிகையாய் உருப்பெற்று வலம் வருகின்றது.

போராட்டக் குறிப்புக்களை உண்மையாய் தெளிவாய் விளக்கும்

இதழாய் எரிமலை அமைந்துள்ளது.

தமிழனும் அவனது போராட்டமும் வெளிச்சம் பெறாமலேயே

மறைத்தும் மறந்தும் போன செய்திகள் ஏராளம் - இனி

அந்நிலை வேண்டாம் நம் போராட்டங்கள் வெளிச்சம் பெற வேண்டும்.

நம் போராட்டங்கள் நியாயம் பெற வேண்டும்

இதனை ஆற்றுவதற்கு எரிமலை வேண்டும்.

எரிமலை கொள்கை இதழ்; இதனை கொள்கையுள்ளோரே

பேணவேண்டும். படித்து விட்டு துக்கியெறியும் இதழ் அல்ல.

இது நம் சரித்திரத்திற்கான சான்று.

ஆகவே எரிமலை வாசகர்கள் இதழினைப் பத்திரப்படுத்தி

எதிர்கால சந்ததிக்கு சரித்திரமாய்க் காட்டவேண்டும்

இனியொரு வளம் படைப்போம்!

இனியொரு வாழ்க்கை செய்வோம்!

சி.அருணாசலம்

பகாவ், மலேசியா.

பெருமதிப்பிற்குரிய 'எரிமலை' ஆசிரியர் குழுவிற்கும் அதில் பணிபுரியும் ஏனைய தமிழ் நெஞ்சங்களுக்கும், எனது கனிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாங்கள் அனுப்பிய எரிமலை இதழ் கிடைக்கப்பெற்றேன். உங்களது துரிதமான சேவைக்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்கள்.

'எரிமலை' முகப்பு அட்டை, ஒரு விடியலுக்காக காத்துக்கொண்டிருக்கும் விடுதலை வீரனின் தியாக உணர்வை மிக அழகாக சித்தரிக்கின்றது. மற்றப்படி அதில் உள்ள அனைத்து ஆக்கங்களும் நெஞ்சில் நீங்கா இடம்பெற்றுவிட்டன. அமரர் கிட்டண்ணாவை நினைக்கும் பொழுதுதான் மனம் வேதனைக்குள்ளாகிறது. அன்னாரின் லட்சியக் கனவுகள் ஒருநாள் தமிழீழத்திற்கு வெற்றி மாலை சூட்டும் என்பது நிச்சயம். கிட்டண்ணா அவர்களுக்கு எனது கண்ணீர் அஞ்சலி!

நான் குறைந்தது எட்டு வருட காலமாக விடுதலைப் புலிகளின் வீரப் போராட்டத்தையும் எனது மரியாதைக்குரிய தேசியத் தலைவர் திரு. பிரபாகரன் அவர்களையும் அவர்களது சகாக்களையும் என் உயிரினும் மேலாக நேசித்து வருகிறேன். எதிரிகள் சூழ்ச்சிக்காரர்களாக இருந்து செயற்பட்டாலும் விடுதலைப் புலிகள் சூரர்களாகவே திகழ்கிறார்கள். இவர்களை என்னவென்று பாராட்டுவது. அந்த வகையில் விடுதலைப் புலிகளின் ஞாபகச் சின்னமாக ஒரு புலிப்படம் ஒன்றினை சிங்கப்பூரில் வாங்கினேன். கிட்டத்தட்ட ஐந்து வருடங்கள் அதைப் பாதுகாப்பாக வைத்திருந்தேன். இன்று என் நினைவுப் பொருளாக இந்தப் புலிப்படத்தை உங்கள் இயக்கத்திற்கு அன்பளிப்பாக அனுப்பி வைக்கிறேன். அதைத் தயவுசெய்து பெற்றுக்கொள்ளுமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

உங்களது இயக்கப்பணி மேலும் வளமுடன் திகழவேண்டுமென்பதே என் பிரார்த்தனை.

ராஜேந்தர்

மலேசியா

எரிமலை ஆசிரியர் அவர்கட்கு,

என் முத்தமிழ் வணக்கங்களும் பாராட்டுக்களும்!

தங்களது மாத இதழை தவறாமல் படித்துவரும் வாசகர்களில் நானும் ஒருவன்.

ஆசை துறந்தாய் பாசம் துறந்தாய்

களத்தில் உன் உடல் மறைந்தாலும்

கல்லறை கூட உன் புகழ் சுமந்திருக்கும்

உன் மறைவு ஈழத்தின் புகழ் சுமந்திருக்கும்

எரிமலை வானளாவ என் வாழ்த்துக்கள்.

நன்றி

எம். டெனிஸ்

பாரிஸ்.

மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம்.

உங்கள் வெளியீடான 'எரிமலை' இதழை எனக்கு ஒருவர் கொடுத்தார். படித்துப் பார்த்தேன். இலங்கையில் நடக்கும் அவலங்களைக் கண்டேன்.

நாங்கள் தினசரி பேப்பரில் படிக்கும் போது உள்நாட்டுப் போர் என்றும், பிரிவினைவாத சண்டை என்றும்தான் நம்பியிருந்தோம். ஆனால் படிக்கும் போது என் கண்கள் கலங்கின. ஆவணியில் வெளியான எரிமலையில் நான் பல செய்திகளை தெரிந்துகொண்டேன்.

அதில் குறிப்பாக 'சீதன அரக்கனுடன் ஒரு சொற் போர்'- இது பெண்களுக்காக, 'உலைக்களம்'- இது நாட்டு நட்புறவுக்காக, 'இளைஞர் சமுதாயம் துடிப்புடன் எழவேண்டும்'- இது இளைஞர்களுக்காக, 'நிமிர்ந்த பனை' வீரர்களுக்காக, 'உளவியல்'- மக்களுக்காக, 'நெருப்பு'- இது தமிழர்களுக்காக, 'தீயைப் பொசுக்கிய தியாகம்' இது வருங்கால இளைஞர்களுக்காக... இப்படியாகப் பல செய்திகள் என்னைக் கவர்ந்தன.

ஆகவே எனக்கு எரிமலை பிரதியை மாதந்தோறும் அனுப்பிவைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். அனுப்பும் போது நம்முடைய தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் கையெழுத்திட்ட புகைப்படத்தையும் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அன்புடன்

இராதாகிருஷ்ணன்

தாரமங்கலம், சேலம், தமிழ்நாடு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நள்ளிரவில் காதிலெழும் நாதமணிப் பேரொலியில்
நாளையொரு பூமலர்ந்திடும்
நல்லசுட ரேற்றிவைத்து நாங்கள் தொழும்போதினிலே
நம்பு; பகை வீடெரிந்திடும்.
பள்ளிகொள்ளும் வீரரது கல்லறையிற் கண்சொரிந்து
பன்னிரண்டு மணியடிக்கப் பார்த்திருந்து நீவணங்கு
பாதை தெளிவாய்த் தெரிந்திடும்.
உள்ளமுருகின்ற உணர்வோடுவொரு நொடிப்பொழுது
உற்றுணர; விழிசொரிந்திடும்.
உத்தமர்கள் துயிலுமிடம் ஓடியவர் காலடியில்
ஊர்திரள; இருள் விடிந்திடும்.
தெள்ளுதமி ழாலவர்கள் செய்தபெரும் ஈகமதைத்
தேசமெங்கும் பாடு தினமே
தேக மழிந்தாலுமவர் தேசமழியவில்லை யெனச்
செப்பு; தமிழீழஇனமே!

- மாலிகா -

## இதழின் உள்ளே

★ ஜனனமும் மரணமும் விடுதலைக்காக - 05
★ இலட்சிய உறுதியில் இரும்பு மனிதர்கள் - 06
★ விடுதலையின் பேரொளியாய் ஒளிரும் சுடர்கள் - 19
★ எதிரியின் கோட்டைக்குள் ஒரு அதிரடி - 21
★ வல்லமை தாராயோ - சிறுகதை - 26
★ கதவுகள் திறக்கும் காவலரண்கள் கைகுலுக்கும் பேசலாம்.... - 30
★ கவிஞர் இ. முருகையனுடன் நேர்காணல் - 32
★ ஐரோப்பாவில் தீவிர தேசியவாதத்தின் வளர்ச்சி? - 40
★ தமிழர் நீட்டும் நட்புக்கை - புதிய அரசாங்கம் நம்பிக்கை தருமா? - 41

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# எரிமலை

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

பதின்மூன்றாம் ஆண்டு
கார்த்திகை 1994

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrénées,
75020 Paris.
Tel: 43 58 11 42


## முட்கள் நிறைந்த சமாதானப் பாதை

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், சிறீலங்கா அரசாங்கத்துக்கும் இடையில் பேச்சுவார்த்தை ஆரம்பமாகிவிட்டது. இதுவே, சமாதானத்தை நோக்கிய பாரிய கால்வைப்புத்தான். போரை முடிவுக்கு கொண்டுவந்து சமாதானத்தை ஏற்டுத்துவதற்கும், இனவாதத்திற்கு எதிராகவும் சிங்கள மக்களிடமிருந்து குறைந்தபட்ச அங்கீகாரத்தையே பிரதமர் சந்திரிகா பெற்றிருந்தார். பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் சந்தர்ப்பவாத அரசியல், சமாதான முயற்சிகளுக்குத் தனது எதிர்ப்பைக் காட்ட தருணம் பார்த்துக்கொண்டிருக்கிறது. இராணுவம் ஏற்கனவே தனது அதிருப்தியை, வெளிப்படுத்தி, முட்டுக்கட்டைகளை இட்டுவருகிறது. இந்தியா விடுதலைப் புலிகளைப் பழிவாங்கும் நோக்கை மறைத்து வைத்துக்கொண்டு, சமாதானப் போக்கைத் தடைசெய்யமுடியாமல் தடுமாறுகிறது. இத்தகைய ஒரு நெருக்கடியான நிலையில், ஜனாதிபதித் தேர்தலில், வெற்றிபெறுவேன் என்ற நம்பிக்கையில், திட்டவட்டமான அங்கீகாரம் தனக்குக் கிடைக்கும் என்ற உறுதியில், பிரதமர் சந்திரிகா, விடுதலைப் புலிகளின் சமாதானப் பேச்சுவார்த்தை அறைகூவலுக்கு இணங்கியிருப்பது பெரிய விடயம்தான். விடுதலைப் புலிகளால் அகலத் திறந்து வைத்திருந்த சமாதானக் கதவினூடு துணிவுடன் நுழைந்து, விடுதலைப் புலிகளதும், தமிழ் மக்களதும் அன்புக் கரங்களைக் கைப்பற்ற முனைந்தது அசாத்திய தன்னம்பிக்கையான செயலே.

நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாணத் தீர்மானித்துள்ளதாக, இரு சாராரும் முதற்கட்டப் பேச்சுவார்த்தையின் பின்னர் வெளியிட்ட கூட்டறிக்கை தெரிவிக்கிறது. ஆரம்பப் பேச்சுவார்த்தைகளில் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் குறித்தே ஆராயத் தீர்மானித்துள்ளனர். அடிப்படைப் பிரச்சினைகளை, இரு சாராரும், தங்கள் தங்கள் இறுகிய நிலைப்பாடுகளில் இருந்தவாறே பேசுவதென்றும், படிப்படியான நல்லெண்ணச் செயல்பாடுகள் மூலம் சமாதானத்தை நோக்கி நகர்வதென்றும் முடிவுசெய்துள்ளனர். நீதியான தீர்வொன்றுக்குத் தடையாக, சிங்கள இனவாதிகள், பௌத்த பீடம், இராணுவம், அரசியல்சட்டம் என்பன வெளிப்படலாம் என்பது ஒருபுறம் இருக்க, புதிய அரசாங்கத்தின் கொள்கை வகுப்பாளர்கள், திட்டமிடலாளர்கள் தமிழ் மக்களினது அடிப்படை அபிலாஷைகளை, யதார்த்த உண்மைகளை, பாரதீனப்படுத்தமுடியாத உரிமைகளைக் கருத்தில்கொண்டு செயல்படுவர் என்பதும் கேள்விக்குறியே. தமிழீழ விடுதலைப் புலிகளை, தமிழீழ மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக அங்கீகரிக்காமை, வடக்கு, கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை அங்கீகரிக்காமை, தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமென்பதை அங்கீகரிக்காமை ஆகியவை அரசாங்கத் தரப்பில், தொடர்ந்து இளகாத இறுகிய நிலைகளாக இருக்குமா என்ற ஐயம் எப்போதும் இருக்கவே செய்கின்றது. தமிழ் மக்களையும், விடுதலைப் புலிகளையும் பிரித்துப் பார்த்துப் பேசும் போக்கு, பிரதமர் சந்திரிகா முதற்கொண்டு, அரசாங்கப் பேச்சுவார்த்தைப் பிரதிநிதிகள் வரை வெளிப்பட்டுள்ளது. முதற்கட்டப் பேச்சுவார்த்தையின் பின்னரான கூட்டறிக்கையில், தமிழ்த் தேசியப் பிரச்சினை என விடுதலைப் புலிகள் தரப்பு தெரிவிக்க, மற்றது ஒரே தேசியக் கொள்கையை வலியுறுத்தியுள்ளது. தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக, அரசாங்கத்துடன் சமஅடிப்படையில் பேசித் தீர்வு காணுவதாக விடுதலைப் புலிகளின் பக்கம் கருதுகையில், விடுதலைப் புலிகள் உட்பட்ட, சம்பந்தப்பட்ட அனைவருடனும் கலந்தாலித்து பிரச்சினையைத் தீர்த்தல் என்ற கருதுகோளை அரசாங்கத் தரப்பு வைத்துள்ளதாகத் தெரிகிறது. மேலும், பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தால், இராணுவ ரீதியாகத் தீர்த்தல் என்பது பலதடவை அரசாங்கப் பிரதிப் பாதுகாப்பமைச்சரால் சொல்லப்பட்டுள்ளது. இத்தகைய நிதர்சன நிலைமைகளையும், கடந்தகால வரலாற்று அனுபவங்களையும் கருத்தில்கொண்டே, சமாதானப் பாதையில் அளவுகடந்த ஆர்வத்துடனும், அதேவேளை, ஆழமான கவனத்துடனும் விடுதலைப்புலிகள் காலடி எடுத்துவைத்துள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜனனமும் மரணமும் விடுதலைக்காக!



## கார்த்திகை 27 மாவீரர்நாள்

எம் மண்ணுக்கு வீரம் விளைந்துவிட்டது என்பதை உரத்த குரலெடுத்து உலகுக்குச் சொல்லிய நாள்.

அடக்கிவைத்து, எம்மை இனியும் ஆளமுடியாதென்று அந்நியருக்கு அறைகூவல் விடுத்தநாள்.

உயிர்கொடுத்தே உரிமையைப் பெறமுடியும் என்பதை முதற் சாவு மூலம் முரசறைந்த நாள்.

ஆம்! மாவீரர்நாள்- தமிழீழத்தின் தேசியநாள்.

சத்தியநாதன் என்ற லெப். சங்கர், விடுதலைப்புலிகள் இயக்கத்தின் போராட்ட வரலாற்றில் முதற் சாவை இன்றுதான் சந்தித்தான்.

ஒரு காலத்தில் எதிரி எட்டி எட்டி உதைக்கவும், உதைத்த கால்லுக்கு முத்தமிட்டுக் கிடந்தது எங்கள் இனம்.

காலிமுகத்திடலிலும், கச்சேரி வாசலிலும் ஆயுதமற்று அறப் போர் செய்த எங்கள் இனத்தை குண்டாந் தடியாலும், துப்பாக்கிப்பிடியாலும் தாக்கித் தூக்கியெறிந்தது சிங்களப் பேரினவாதம்.

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக் களப்புக்கு பஸ்ஸில் புறப்பட்டால் பத்து இடத்திலாவது தமிழரை இறக்கி 'நீங்கள் யார்?' என்று கேட்பது போல அடையாள அட்டை பார்ப்பார்கள். வரிசையில் நிற்க வைத்து கேள்விகள் கேட்பார்கள். எங்கள் தங்கைகளைத் தடுத்து வைத்து, 'குண்டு கொண்டு போகின்றாயா?' என்று இரட்டை அர்த்தத்தில் பரிகசிப்பார்கள்.

இத்தனையையும் கூனிக்குறுகிப் பொறுத்துக் கொண்டு என்ன செய்வது என்று வழிதெரியாது இருளில் கிடந்தது எங்கள் இனம்.

கார்த்திகை 26 ஆம் நாள் இவற்றையெல்லாம் இல்லாமல் செய்யும் வழிகாட்டவென்று வல்வைக் கடற்கரையில் ஒரு பிள்ளை விழிதிறந்தது.

கார்த்திகை 27 ஆம் நாள் இவற்றையெல்லாம் இல்லாமற் செய்ய இரத்தம் சிந்தாமல், உயிரை விலைகொடுக்காமல் விடிவில்லை என்பதைக்கூறி ஒரு பிள்ளை விழி மூடியது.

இங்கு ஜனனமும், மரணமும் விடுதலைக்கான விளைபொருட்களாயின.

இன்று பல்லாயிரக்கணக்கான மாவீரர்கள், தமிழீழ விடுதலையென்னும் தங்கள் கனவுகள் நனவாகும் என்ற நம்பிக்கையில், சுதந்திரம் பெறும் நாளில் எங்கள் தலைவன் ஏற்றப்போகும் தேசியக்கொடி காற்றில் அசையும் காட்சியைக் காண்பதற்காக கல்லறைக்குள்ளே கண்மூடிக் காத்திருக்கின்றார்கள்.

ஒவ்வொரு மாவீரர் நாட்களிலும் நள்ளிரவில் கேட்கும் நாதமணிச் சத்தம், 'விடுதலை பெற்றது தமிழீழம்' என்பதை தங்களுக்கு வந்து சொல்லுமென்று எதிர்பார்த்துக் கொண்டும், தங்கள் கல்லறையில் நாங்கள் ஏற்றும் நெய்விளக்குச் சுடரில் தமிழீழத்தின் வரைபடத்தையே கண்டு களிப்படைந்து கொண்டுமிருக்கின்றனர்.

மாவீரர் துயிலும் இல்லங்கள், மாவீரர்கள் புதைந்த இடங்களாக நாம் எண்ணக்கூடாது. தமிழீழம் என்று கிடைக்குமென்று ஏங்குபவர்கள் தூங்குமிடங்களாக கொள்ளுவோம்.

அந்தப் புனித இடத்தில் பூக்களை வைப்பது மட்டுமல்ல எங்கள் கடமை. கூப்பிய கரங்களுடன், விழிசொரிவது மட்டும்தான் எங்கள் பணியாகக் கொள்ளல் ஆகாது.

தமிழீழத்தைப் பெற்று, மாவீரர்களின் தாளடியில் வைப்பதே நாங்கள் அவர்களுக்குச் செய்யும் வரலாற்றுக் கடமையாகும்.

அலங்கார வளைவுகள், அர்த்த ராத்திரியில் நெய்விளக்குகள், கண்ணீர் மாலைகள் எல்லாம் சம்பிரதாயச் சடங்குகளாக மாறக்கூடாது.

அடுத்த மாவீரர்நாள் விடுதலை பெற்ற மண்ணில் என்று நாங்கள் ஒவ்வொருவரும் சபதமேற்றுக் கொள்ளவேண்டும். இதையே இலக்காகக் கொண்டு நாங்கள் நகரத் தொடங்க வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலட்சிய உறுதியில் இரும்பு மனிதர்கள்

படையியலின் மையநோக்கம் வெற்றி.

வெற்றியின் அடைவு வழி போர்.

போரின் மூலக்கூறுகளுக்குள் முதன்மையானதாக அமைகின்றது வேவு.

போரிற்கான செயற்பாடுகளுக்குள் இன்றியமையாத ஒரு பாத்திரம் வேவுப்பணிக்கு உண்டு.

சண்டையொன்று முடியும் போது, முழு வெற்றி பெற்றதாக அது நிறைவாகக்கூடிய வகையில், அதனுடைய ஆரம்பத்தை அமைத்து விடவேண்டிய பெரும் பொறுப்பு வேவுவீரர்களையே சாருகின்றது.

வேவுத் தரவுகளில் இருந்து விடும் சிறு தவறும்கூட, நடவடிக்கையின் போது படுதோல்வியைத் தந்துவிடும் என்பது ஒருபுறம் போக, பெருத்த உயிரிழப்பையும், போராட்டத்தில் பின்னடைவையும்கூட அது ஏற்படுத்திவிடக்கூடும்.

எனவேதான், யுத்தத்தில் அதிக பெறுமதியானவனாக ஒரு வேவு வீரன் திகழ்கிறான். போர் சார்ந்த பணிகளில் ஈடுபடுகின்றவர்களுள் வேவு வீரர்கள் முக்கியத்துவம் பெறுகிறார்கள்.

இதன் காரணமாகவே 'படையியல் விஞ்ஞானத்'தின் (Military Science) கற்கைநெறிகளுக்குள், பிரதானத்துவம் மிக்க ஒரு பாடத்திட்டமாக 'இராணுவ வேவு' (Military Reconnaissance) புகட்டப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் படைவீரர்கள் வெற்றிக் கொடிகளை நாட்டிய தாக்குதல்களிலெல்லாம், அந்த வெற்றிகளைப் பரிசளித்த பெருமை, எங்களது வேவு வீரர்களையே சாருகின்றது.

எவ்வளவோ சிரமங்களுக்கு மத்தியில்- எத்தனையோ சிக்கல்களுக்கு இடையில்- தாங்கிக்கொள்ள முடியாத துன்பங்களோடுதான், வேவுகாண் பணியை அவர்கள் செய்கின்றார்கள்.

வாழ்வுக்கும் சாவுக்கும் இடைப்பட்ட அந்தப் போரியல் பணி, அவர்களுடைய அபாயகரமான வாழ்வு. முற்றிலும் வேறுபாடான அந்த அனுபவத்தை மற்றவர்களால் பரிபூரணமாகப் புரிந்துகொள்ள முடியாது. அந்த உணர்வுத் தன்மை சற்றும் குறையாமல் அதனை எடுத்து விளக்குவதுகூட கடினமானது.

எத்தகைய இடர்பாடுகளுக்கு நடுவில் நின்று, எத்துணை மனத் துணிவோடு அந்தப் பணியில் அவர்கள் ஈடுபடுகின்றார்கள் என்பதனை, வார்த்தைகளால் கொடுக்கப்படும் வடிவத்திற்குள் முழுமைப் படுத்திவிடவும் முடியாது.

எங்களது வேவுகாண் வீரர்களது ஒவ்வொரு பயணமும், மரணத்தின் சாம்ராஜ்ஜியத்தை நோக்கியது. 'திரும்பி வருவேன்' என்ற எண்ணம் அவர்களிடத்தில் இருக்காது; ஆனால் 'திரும்பி வர வேண்டும்' என்ற உறுதிப்பாடு இருக்கும்.

தங்களது கையில் ஒரு போர்ச் சாதனை மட்டுமல்ல, எங்கள் அன்புக்கினிய மக்களின் எதிர்காலமும் உள்ளது என்பதை அவர்கள் அறிவார்கள்.

வேவுகாண் பணியானது, அசாதாரணமான ஒரு படையியல் தொழிற்பாடு. போர்வீரர்களாக இருக்கின்றவர்களிலும்கூட, எல்லோராலும் அந்தப் பணியில் ஈடுபடமுடியாது. அது எங்களது போராளிகளாக இருப்பினும்கூட.

கண்துஞ்சாது, பசிநோக்காது, மெய்வருத்தம் பாராது, வெயில், மழை, பனி, குளிர் பொருட்படுத்தாது; மைல் கணக்காக நடந்தும், நாட்கணக்காக கிடந்தும், கருமமே கண்ணாகச் செயற்படவேண்டிய மிகக் கடுமையான ஒரு வாழ்வு முறைக்குள்- ஓய்வற்று இயங்கித் தொடர்ச்சியாக நின்றுபிடிக்கக்கூடிய உடலுறுதியும், உளவுறுதியும் இருக்க வேண்டும்.

சருகு நெரிபடும் சத்தத்திற்கும் 'சடசடக்கத்' தயாராக- ரவைச்சங்கிலிகள் பொருத்திய இயந்திரத் துப்பாக்கிகளுடன் நிமிடத்திற்கு நிமிடம் வெளிச்சம் பாய்ச்சித் தேடிக்கொண்டு திரியும் சிப்பாய்களுக்கு முன்னால்- அவர்களது கண் பார்வை எல்லைக்குள் நெருங்கி- வேவு பார்க்கும்போதும்- பதறப் படாமல், தடுமாறாமல்- நுணுகிக் கவனிக்கக்கூடிய கூர்மையான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவதானிப்புத்திறன் (Power of Observation) இருக்கவேண்டும்.

பகைவனுடைய கண்களுக்குள் சிக்கிவிடும் ஒரு நிலைமை ஏற்பட்டு விடுமானால், அவன் காண்பதற்கும் அவனது துப்பாக்கி வெடிப்பதற்கும் இடையில் உள்ள சில கணங்களுக் குள்ளேயே, மின்னல் வேகத்துடனும் மிகச் சரியானதாகவும் முடிவெடுத் துச் செயற்பட்டுவிடவேண்டிய சாதுரியம்மிக்க புத்திக்கூர்மை (Ingenious Intelligence) இருக்க வேண்டும்.

நீட்டிக்கொண்டிருக்கும் சுடு குழல்களின் எதிரில் நிலவுகின்ற- எதிரியின் உச்சநிலைப் பாது காப்பு ஏற்பாடுகளைக் கடந்து சென்று, மரணத்தின் குகைக்குள் வேவு பார்த்துவிட்டுத் திரும்பிவந்து, பார்த்தவற்றைச் சொல்லுகின்ற வேளையில்- முக்கியமில்லாத ஒன்றைத்தன்னும் மறந்து விட்டிருந் தாலோகூட, அல்லது தரவு ஒன்று முழுமைப்படாமல் சின்னத் தகவல் தன்னும் இல்லாமலிருந்தாலோ கூட- தெளிவாகப் பார்த்து வரத் திரும்பவும் அனுப்பும் போதும் அந்தத் தேவையின் அவசியத்தை உணர்ந்து- மனஞ்சலியாமல், முகஞ் சுழியாமல்- அடுத்த இரவும் அந்த மரணத்தின் குகை நோக்கி நடக்கின்ற சகிப்புத் தன்மையும், தெளிந்த மனமும் இருக்கவேண்டும்.



வர்ணித்துச் சொல்ல முடியாத பயங்கரமான- அந்தப் பதற்றம் நிறைந்த படைத்தளச் சூழ்நிலைக் குள்ளும், கண்ணால் காணும் அத்தனையையும் அத்துப்படியாக மனனஞ் செய்து, பகைவீட்டின் ஒவ்வொரு அங்குலத்தையும், பகை வீரரின் ஒவ்வொரு அசைவையும் துல்லியமாக மனதில் பதித்து வந்து, திட்டம் வகுக்கும் தளபதிகளிடம் அவற்றை அப்படியே ஒப்புவிக்கக் கூடிய நினைவாற்றல் சக்தி (Memory Power) இருக்கவேண்டும்.

படை நடவடிக்கைக்கான திட் டம் தீட்டப்படும் போது- தளத்தின் அகநிலைச் சாதகங்களையும் பாத கங்களையும் கருத்தில் வைத்து- தீர்மானிக்கப்படுகின்ற தாக்குதல் வழிமுறைகளின் சாத்தியங்களையும் அசாத்தியங்களையும் பற்றிக் கணிப் பீடு செய்து எடுத்து விளக்கக்கூடிய நுண்ணிய படையியல் அறிவு (Military Knowledge) இருக்க வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக-

இன்னதுக்கு என்று இல்லாம லெல்லாம் சுடுகின்ற எதிரியின் ரவைகள் துளையிட்டுவிடும் ஒரு நிலையோ, அல்லது பொறிவெடியில் சிக்கி உடலுறுப்பொன்று பிய்பட்டு ரத்தம் பீறிடுகின்ற ஒரு நிலையோ, ரணவேதனையோடு உருவாகிடினும் துடித்துப் பதகளிக்காமல்- தான் குழம்பி, எதிரியையும் குழப்பி, காரியத்தைக் கெடுத்துவிடாமல்- கூடவந்த தோழன் வேவு பார்த்துச் செல்வதற்கு ஒத்துழைத்து, அமைதி யாகத் தனது உயிரை அழிக்கக் கூடிய தற்கொடை மனப்பாங்கு இருக்கவேண்டும்.

இத்தகைய இயல்புகள்தான் ஒரு வேவு வீரனுக்குரிய பண்புகளாக உள்ளன. இந்தத் தனித்துவமான தன்மைகளால் நிறைவு பெற்றவர் களாலேயே, வேவுப் படைவீரர்க ளாகப் பணிபுரிய முடியும். எங்களது வேவுப் புலிகள் இப்படியானவர் கள்தான்.

அவர்களுடைய கதைகளைக் கேட்டுப் பாருங்கள். உங்களது இதயங்கள் கண்ணீர் விட்டுக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

குமுறும். அவர்கள் ஒவ்வொருவருமே சொல்லொணாத் துயரங்களின் சொந்தக்காரரர்கள். பெரிய பெரிய சோகங்களை அவர்கள் சுமந்துகொண்டு திரிகின்றார்கள். அவர்களுடைய வாழ்வு அப்படியானது.

பகைவனின் மடிதான் அவர்களின் வாழ்விடம். அவனுடைய அரண்களின் ஊடுகளுக்குள்தான் அவர்கள் தூங்கி விழித்தார்கள். எப்போதும் என்னவும் நடக்கலாம்; எங்கேயும் எப்படியும் நடக்கலாம். வெடி கொளுவி வீழ்வான் நண்பன். "காயம் பட்டதா என் தோழா......." என்று அள்ளி எடுத்து ஓடிவர அங்கு முடியாது. எங்களுடைய கையில் உள்ள தளமென்றால் கதையே வேறு. உடல்களை மீட்பதற்காகவே உயிர்களைக் கொடுக்கும் வகையில் வளர்க்கப்பட்டவர்கள் அல்லவா நாங்கள். ஆனால், அங்கு...? எங்களால் எதுவுமே செய்ய இயலாது. காயப்பட்டு வீழும் தோழனும், தான் காப்பாற்றப்பட வேண்டும் என எண்ணவே மாட்டான்; அப்படியெந்த எதிர்பார்ப்பும் அவனிடம் இருக்காது. சாவுக்குழிக்கு மேலாக கம்பியில் நடக்கும் எங்கள் வேவு வீரர்களிடம் இருக்கும் ஒரே ஒரு நம்பிக்கை 'சயனைட்' மட்டும்தான்.

கட்டுவனுக்குப் பக்கத்தில்-

பகைவனது நடு முற்றத்தில்- அவன் எதிர்பாராமல் எதிர்ப்பட்டுவிட்ட ஒரு காலைப் பொழுது. துப்பாக்கிகள் தீ உமிழ்ந்தபோது சன்னங்கள் தையலிட்டுச் சரிந்தான் ஒரு தோழன். கூச்சலிட்டபடி பகைவன் பாய, பற்களுக்கிடையில் சயனைட்டை நெரித்துக் கொண்டு கூடவந்த தோழனைப் பார்த்து விழுந்தவன் கத்தினான், "சுட்டுப்போட்டு நீ ஓடித் தப்படா!" 'சுடச்சொன்னது தன்னையா....? ஆமியையா.....?' இவன் யோசிக்க முன்னரே சோர்ந்துபோய், கண்கள் மேலே செருகியவனைக் கைவிட்டு விட்டு- ரவை மழையில் நனையாமல்- தப்பிவந்த ஒரு வேவு வீரன்,



கரும்புலி மேஜர் கெனடி (நிலவன்)
ஜெசுமி பெர்னாண்டோ
மன்னார் 13.09.1971

"அம்மா! நான் உங்கள் பிள்ளைதான்; ஆனால், தமிழீழத் தாய்மார்கள் எல்லோருக்கும் நான் ஒரு பிள்ளை....

..... அம்மா! என்னுடைய ஆசை, மக்கள் மகிழ்ச்சியாக சுதந்திரமாக வாழவேண்டும் என்பதுவே. அதனால்தான் உயிரைப் பெரிதாக நினையாமல் நான் போராடப் போனேன்.

அதனால், எனக்காக நீங்கள் கவலைப் படாதீர்கள்; நீங்களும் சந்தோசமாக இருக்க வேண்டும்.

..... எனது மண் 'சுதந்திரமடைய வேண்டும். அது நடைபெறவேண்டுமானால் மக்கள் எல்லோருமே தாயகத்துக்காக உயிரைக் கொடுக்கவும் தயாராகக் கிளர்ந்தெழ வேண்டும்.

இதுதான் எனது கடைசி விருப்பம்."

*(கெனடி வரைந்த கடைசி மடலிலிருந்து...)*

அடுத்த பயணம் புறப்பட, தான் தயாராகிக்கொண்டிருந்தான்.

ஒரு வேவு வீரனுக்கு அவதானம் மிக முக்கியமானது. எடுத்து வைக்கிற ஒவ்வொரு அடியிலும், இழுத்து விடுகின்ற ஒவ்வொரு மூச்சிலும் மிகுதியாக இருக்கவேண்டியது அது. ஏனெனில் நிறைய எதிர்பார்ப்புகளுடன் உள்ளே அனுப்பப்பட்டவனான அவன், தன்னைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளான். தான் காயப்பட்டு விடாமல், தனது உடலோ, உயிரோ சேதப்பட்டுவிடாமல் தன்னைக் கொண்டுவந்து சேர்க்கவேண்டியது, அவனது கடமையுமாகும். தெரியாத்தனமாக இழைத்துவிடுகின்ற சிறு தவறும்கூட- அவன் திரும்பிச் செல்வதற்கு இருக்கிற கடைசி வாய்ப்பையும் இல்லாமல் செய்துவிடும். அவதானமின்மையால் நடந்துவிடும் எந்தவொரு கவலையீனப் பிழையும், வேறு எதையுமல்ல உயிரையே அழிக்கும்.

தச்சன்காட்டுச் சந்திக்கருகில், சிங்களக் காவலரண்களுக்கு முன்பாக இன்னொரு இரவு. சத்தமின்றி காலை வைத்து ஆமைகளாய் அசைந்தபோது, 'காலில் தட்டுப்படுவது கல்லோ.... மரத்துண்டோ....' என அலட்சியப்படுத்த, முழங்கியது மிதிவெடி. பத்து யாருக்கு முன்னால் இருந்து 'நாயோ... பூனையோ...' என நினைத்து 'ரோச்' அடித்த பகைவீரன்- திகைத்து, துப்பாக்கி தூக்கி, தேர்வு நெம்பு தட்டிச் சுடுவதற்கு முன்னர், "என்னைச் சுட்டுப்போட்டு நீ தப்பி ஓடு மச்சான்...!" என்றவனை, உடலும் உள்ளமும் நடுங்கச் சுட்டு வீழ்த்திவிட்டுத் தப்பித்து மீண்ட இன்னொரு வேவு வீரன்,

கதையைக் கண்ணீரோடு சொல்லிக்கொண்டிருந்தான்.

சேந்தான்குளம் சந்தியடியில் ஒரு அதிகாலை. காவலரண்களுக்கு அருகாகப் பதுங்கிக் கொண்டிருந்தான் ஒரு வேவுப் புலி. காவல் உலா சுற்றிக்கொண்டு வந்த படைப்பிரிவு ஒன்றிலிருந்து எவனோ ஒரு சிங்களப் படையாள் எதேச்சையாக 'ரோச்' அடித்தான். வெளிச்சம் சரி நேராகத் தெறித்து அவனிலேயே பட்டது. உறுமத் தொடங்கின துப்பாக்கிகள்; தாவிப் பாய்ந்தான் எம்வீரன். தலைதெறிக்க ஓடத்தொடங்கினான். எதிரியின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காணிக்குள்ளேயே ஒரு கலை பாடு. விடயம் என்னவென்றால், ஏற்கனவே இரு நாட்களாக அவனுக்குச் சீரான சாப்பாடு இல்லை. கலைத்துக் கலைத்து சுட்ட பகைவனுக்குத் தப்ப அவன் இளைத்து இளைத்து ஓடினான். உடல் ஒத்துழைக்க மறுத்தது, கால் சோர்ந்து கொண்டுபோனது; ஆனாலும் எங்கோ அவன் திடீரென மறைந்துவிட, துரத்தியவர்கள் தடுமாறிப் போனார்கள்.

பிடிக்கமுடியவில்லை. ஆற்றாமையால் கண்டபடி சுட்டு விட்டுப் போய்விட்டார்கள். அப்படியே மறைந்திருந்தவன், இரவானதும் மெல்ல மெல்ல ஊரத் துவங்கினான். இயலாமையோடு ஊர்ந்தவன், எதிரியின் அரணைக் கடந்து வந்து சற்றுத் தூரத்திற்குள்ளேயே மயங்கிப் போனான். பாவம் முகாமிற்குத் தூக்கிவந்து 'சேலைன்' ஏற்றிய போது கண்திறந்தவன்,

தப்பித்து வந்தது ஒரு அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்.

இப்படியாக- எத்தனையோ மயிரிழைகளில் தப்பி, அதிர்ஷ்ட வசமாக மீண்டவர்கள் கொண்டு வந்த தரவுகள்தான், பலாலிப் பெருந்தளத்தின் மையத்தில் குறி வைக்க எங்களுக்கு அத்திவாரமாக அமைந்தன.

பலாலித் தளத்தின் தார்ப்பரியத்தை விளங்கிக் கொள்ள வேண்டுமானால், எங்களது வேவு வீரர்களைப் புரிந்து கொள்ள வேண்டும். எல்லாத் தாக்குதல்களையும் போலவே தான் அதுவும்! வேவுப் புலி வீரர்கள் பெற்றுத் தந்த வெற்றி அது.

எங்களது வேவு வீரர்கள் அபூர்வமான மனிதர்கள். சாவுக்கும் அஞ்சாத அவர்களது வீரத்தை எண்ணிப் பாருங்கள். அது போற்றுதற்குரியது. பகைவனின் நெஞ்சுக்கூட்டுக்கு மேலேறி வேவு பார்த்துவிட்டு மீளும் அந்த மனத்துணிவு அபாரமானது; அது ஒரு இணைதேட முடியாத நெஞ்சுறுதி!



கரும்புலி கப்டன் நவரட்ணம்
கிருஸ்கோகு லெம்பேட் அண்ணாதாஸ்
வவுனியா - 22.09.1977

அம்மா! அப்பா!

இனத்துக்கு சுதந்திரமாக ஒரு நாடு இருந்தால்தான், எங்களுக்கு நிரந்தரமாக ஒரு வீடு இருக்கும். சுதந்திரமான ஒரு நாடு அமைக்கவே நான் போராட வந்தேன். இனித் தமிழீழத்தில் குண்டுகள் விழக் கூடாது; இதற்காகவே இன்று நான் கரும்புலியாகச் செல்கிறேன்.

என் ஆசைத் தங்கச்சி! உனது அடுத்த பரம்பரை - எம் எதிர்கால சந்ததி- மிக மகிழ்ச்சியோடு வாழவேண்டும் என்பதற்காகவே, நான் கனவிலும் நினையாத களம் நோக்கிப் புறப்படுகின்றேன்.

வெல்க தமிழீழம்!

*நவரட்ணம் கடைசியாக வரைந்த மடலிருந்து*

தாங்கள் கொண்ட இலட்சியத்தில் அவர்கள் எத்துணை பற்றுக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். அந்த இலட்சியத்திற்காகத் தங்களது இன்னுயிரையே துச்சமெனத் தூக்கி எறிய மனமுவந்து நிற்கும் அவர்களது தியாக உணர்வு, மேன்மை மிக்கது; உன்னதமானது!

தாயகத்தின் மீதும், தாயகத்து மக்கள் மீதும் அவர்கள் கொண்டிருந்த நேசம் இருக்கிறதே.... அது சாதாரணமானதல்ல. அது ஒரு அளவு கடந்த காதல்; தளர்ச்சியற்ற பிணைப்பு!

அந்த வீரர்களது ஒவ்வொரு அசைவுக்குப் பின்னால் இருந்தும், எதிரியின் வளைப்புகளிற்கு மத்தியில் நின்று அவர்கள் எடுத்த ஒவ்வொரு முடிவிற்குப் பின்னால் இருந்தும், அவர்களை இயக்கிக்கொண்டிருந்த உந்து விசை- அவர்களுடைய அந்த 'மனநிலை'தான்.

அந்த 'மனநிலை' அவர்களை வழிநடத்திச் சென்ற தலைவனின் ஆகர்சிப்பு! அந்தத் தலைசிறந்த நெறிப்படுத்தலின் கீழ்தான் அவர்கள் அணிவகுத்தார்கள். பிரபாகரன் என்ற பெருந் தலைவனின் மீது அவர்கள் கொண்டிருந்த அந்த நம்பிக்கையும் பற்றுணர்வும் இறுக்கமானது. அந்த வழிகாட்டலின் கீழ் எதையும் செய்வதற்கு அவர்கள் சித்தமாக இருக்கின்றார்கள்; இருப்பார்கள். இது மிகையானதல்ல!

எங்கள் அன்னைபூமியை ஆக்கிரமித்து நிற்கும் சிங்களப் படைகளின் மிகப் பெரியதும் மிகவும் பாதுகாப்பானதுமான தளமென்ற பெருமையுடையது பலாலி முக்கூட்டுப்படைத்தளம்.

வடபுலப் போர் அரங்கின் பிரதான கட்டளைத் தலைமையகமும் அதுவேதான்.

தனிக்காட்டு ராஜாவாக ஒரு சிங்கம், கால்களை அகல எறிந்துவிட்டு அச்சமற்ற அலட்சியத்தோடு படுத்திருப்பதைப் போல-

30 சதுரமைல் விஸ்திரணத்தில்-

அகன்று நீண்டு விரிந்து கிடக்கின்றது அந்தப் பெருந்தளம்.

இவை தெரியாத விடயங்களல்ல; ஆனால், ஆச்சரியம் என்னவெனில்-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருப்பவர்கள்- திலகன், நவரட்ணம், கெனடி, திரு, ரங்கன், ஜெயம்.

**"உயிர்விடும் வேளையில் உங்களின் வாயது உரைத்தது தமிழீழம் - அதை நிரை நிரையாகவே நின்றினி விரைவினில் நிச்சயம் எடுத்தாள்வோம் தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும் தனியரசு என்றிடுவோம் - எந்த நிலைவரும் போதிலும் நிமிருவோம் உங்களின் நினைவுடன் வென்றிடுவோம்."**

'என்னை எவரும் எதுவும் செய்துவிட முடியாது' என்று இறுமாப்போடு நிமிர்ந்திருக்கும் அந்த முக்கூட்டுத் தளத்தினுள் நுழைந்து, எங்களது வேவுப்படை வீரர்கள் குறிவைத்த இலக்கு, அதன் இதயமாகும்.

அது- சிறீலங்கா விமானப் படையின் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தலைமையகம் என்ற கேந்திர மையமாகும்.

இந்த முப்படைக் கூட்டுத்தளத் தைச் சுற்றிவர- பலமான உருக்குக் கவசம் போன்று- உள்ள அதன் முன்னணிப் பாதுகாப்பு வியூகத்தை (Front defence line) ஊடுருவி நுழைவதென்பதே, ஒரு இமாலயக் காரியம்தான்.

இமையாத கண்களுடன், துயி லாமல் காத்திருக்கும் பகைவனின் பத்து 'பற்றாலியன்' படைவீரர்கள்-

சரசரப்புக்கெல்லாம் சடசடத்து, சல்லடையாக்கிவிடத் தயாராக அவனது சுடுகருவிகள்-

உலகெங்கிலும் இருந்து பொறிக் கண்ணிகளையும், மிதிவெடிகளையும் வாங்கி வந்து, விதைத்து உருவாக்கி யிருக்கும் அவனது கண்ணிவெடி வயல் (Mines field)-

வானுலக நட்சத்திரங்களின் ஒளிர்வினைக் கொண்டே, பூவுலக நடமாட்டங்களைத் துல்லியமாய்க் காட்டும் அவனது 'இரவுப் பார் வை'ச் சாதனங்கள் (Night vision)-

தேவைக்கேற்ற விதமாகப் பயன் படுத்தவென, தேவைக்கேற்ற அளவு களில் கைவசமிருக்கும் அவனது தேடொளிகள் (Search Lights)-

அடுக்கடுக்கான சுருள்தடைக ளாயும், நிலத்துக்கு மேலால் வலைப்பின்னலாயும் குவிக்கப் பட்டிருக்கும் அவனது முட்கம்பித் தடுப்புக்கள்-

வன்னிப்பக்கத்துக் குளங்களைப் போல, உயர்ந்த அரண்களாக எழுப்பப்பட்டுள்ள அவனது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அணைக்கட்டுக்கள்-

உள்ளுக்கிருப்பதைக் கண்டு அறிவதற்கு வெளியிலிருந்து பார்க்க முடியாமல், நிலத்திலிருந்து வானுக்கு எழும்புகின்ற அவனது தகர வேலி-

எங்கிருந்து எங்கு என்று இடம் குறியாது, எப்போதிருந்து எப்போதுக்குள் என்று காலம் குறியாது-ரோந்து சுற்றிக்கொண்டு திரியும் அவனது 'அசையும் காவலணிகள்' (Mobile Sentries)-

அத்தனை பலங்களினாலும் பலம் திரட்டி அசுர பலத்தோடிருந்தனர் எங்கள் பகைவர்.

"எந்தப் பலத்திலும் ஒரு பலவீனம் இருக்கும், தேடுங்கள்" என்றார் எங்கள் தலைவர்.

நூல் நுழையும் ஊசிக்கண் துவாரம் தேடிய எம் வேவு வீரர்கள், அந்த 'மரண வலயத்தை' ஊடுருவிக் கடந்து, சிங்கத்தின் குகைக்குள் நுழைந்தார்கள்.

வெளியில், தனது முன்னணிக் காவலரண்களிலிருந்து, அசைக்க முடியாத தன்னுடைய பலத்தை எண்ணிப் பகைவன் இறுமாந்து கொண்டிருக்க-

உள்ளே, சுமார் பத்து மைல்களுக்கு அப்பாலிருக்கும் அவனது மையத்தளத்தில்- விமான ஓடுபாதைகளில்- நடந்து வானூர்திகளை வேவு பார்த்துக்கொண்டிருந்தனர் எம் வீரர்கள்.

அவர்களுடைய முயற்சிதான் ஒரு கரும்புலி நடவடிக்கைக்கான திட்டத்திற்கு கருக்கொடுத்தது. அவர்களது ஓய்வற்ற கடும் உழைப்பு, அந்தத் திட்டத்தைப் படிப்படியாக வளர்த்து முழுமைப்படுத்தியது.

தாக்குதல் இலக்கை வேவு பார்த்து, தாக்குதலணி நகரப் பாதை அமைத்து, தாக்குதல் பயணத்தில் 'தரிப்பிடம்' கண்டு, தாக்குதலுக்கான நாள் குறித்த அவ்வேவுப்புலி வீரர்கள்-

கரும்புலி வீரர்களுக்கு உறுதுணையாக வழிகாட்டிச் செல்லத் தயாராகி நின்றார்கள்.

தாக்குதல் திட்டம் தயாரிக்கப்பட்டுவிட்டது.

பெரிய நோக்கம்;

அரசியல் ரீதியாகவும் படையியல் ரீதியாகவும் முக்கியத்துவத்தைப் பெறக்கூடிய ஒரு நடவடிக்கை.

எமது மக்களின் உயிர்வாழ்வோடு பிணைந்ததும் கூட.

ஆனால், அது பலமான இலக்கு; உச்சநிலைப் பாதுகாப்புக்கு உட்பட்ட கேந்திரம்.

செல்பவர்கள் வெல்லமுடியும்; ஆனால் திரும்ப முடியாது.

சிங்கத்தின் குகைக்குள் நுழைந்து அதனை எதிர்கொள்வதற்கு நிகரான செயல் அது.

இருப்பினும் தாக்குதல் தேவையானது.

வேவு அறிக்கைகளின் அடிப்படையில் தாக்குதலுக்கான வழிமுறை தீர்மானிக்கப்பட்டது.

அது ஒரு கரும்புலி நடவடிக்கை.

நான் முந்தி நீ முந்தி என்று நின்றவர்களுக்குள் தெரிவாகியவர்களைக் கொண்டு தயார் செய்யப்பட்டது ஒரு தாக்குதலணி.

கெனடி அதன் களமுனைத் தளபதி; அவனோடு இன்னும் 6 வீரர்கள்.

சிற்றுருவ மாதிரிப் படிவமாக (Model) அமைக்கப்பட்டிருந்த பலாலி வான்படைத் தளத்தையும், அதன் ஓடுபாதைகளையும் சுற்றி அவர்கள் நின்றுகொண்டிருந்தார்கள்.

தளபதி கடாபி அவர்களுக்குரிய தாக்குதல் வழிமுறைகளைத் தெளிவுபடுத்தினார். ஒவ்வொருவருக்குமுரிய இலக்குகளைக் காட்டி விளக்கினார். ஒவ்வொருவரும் எவ்விதமாகச் செயற்படவேண்டும் என்பதை அவர் சொல்லிக்கொடுத்தார்.

அவர்களுக்குரிய ஒத்திகைப் பயிற்சிகள் ஆரம்பித்தன.

'பயிற்சியைக் கடினமாகச் செய்; சண்டையைச் சுலபமாகச் செய்' என்பது ஒரு படையியல் கோட்பாடு.

அந்தக் கோட்பாட்டின்படியே அவர்கள் செயற்பட்டார்கள்.

ஆகா....! அந்த நேரத்தில் நீங்கள் பார்த்திருக்க வேண்டும் அவர்களை; மெய்யுருகிப் போயிருப்பீர்கள்.

எவ்வளவு உற்சாகம்; எவ்வளவு ஆர்வம்; ஓய்வற்ற பயிற்சிகளில் அவர்கள் காட்டிய மனமார்ந்த அந்த ஈடுபாடு....!

"எப்படி வாழவேண்டும்?" என்று சிந்தித்துக் கொண்டிருக்கின்ற எங்களுக்குள்ளிருந்துதானே அவர்கள் போனார்கள்!

உயிரைக் கொடுத்துவிட்டு எப்படி வெற்றியைப் பெறவேண்டும் என்றல்லவா ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்களுக்குள் இருந்திருக்கக் கூடிய தேசாபிமானத்தை நினைத்துப் பாருங்கள்; அவர்களுக்குள் இருந்திருக்கக்கூடிய தமிழபிமானத்தை எண்ணிப் பாருங்கள்.

எங்கள் தலைவன் ஊட்டி வளர்த்த மேன்மை மிகு உணர்வு அது.

தங்களது கடைசிக் கணங்களில்-

தங்களின் உயிர் அழிந்துவிடப் போவதைப் பற்றியல்ல; தங்களின் இலக்குகள் அழிக்கப்படவேண்டியதைப் பற்றியே அவர்கள் சதா சிந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

இப்படிப்பட்டவர்களிடம் போய்- "நீங்களில்லையாம்; ஆட்களை மாத்தப் போகினமாம்" என்று சொன்னால் எப்படியிருக்கும்?

அப்படி ஒரு கதை, கதையோடு கதையாக வந்து காதில் விழுந்தது.

"குலுக்கல் போட்டு புதுசா ஆக்களைத் தெரிவுசெய்யப் போறனெண்டு சொர்ணம் அண்ணன் சொன்னவராம்" என்றது அந்தத் தகவல்.

கெனடி குழம்பிவிட்டான். அவனால் அதனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தளபதியிடம் போய் சண்டை பிடித்தான்-

"நான் தான் கட்டாயம் போகவேணும்" என்று விடாப்பிடியாய்ச் சொன்னான். "வேணுமென்றால் அவர் மற்ற ஆட்களை மாத்தட்டும். குலுக்கல் தெரிவுக்கு என்ர பேரைச் சேர்க்கவேண்டாம்"- திட்டவட்டமாகக் கூறினான்.

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழத் துளிப்பா

தமிழீழம்
முதற்பலி
சிவகுமாரன்

கரும்புலி வீரன்
முதல் சிறந்த சான்றாளர்
மில்லர்

உண்ணாநோன்பு
உண்மைப்பெருமை
திலீபன்

துணிவு ஈகம்
இனி இப்பெயர்
கிட்டு

பெண்ணியம்
பெருமை சேர்ப்பவர்
பெண்புலிகள்

உலக விடுதலை வரலாறு
பல மாவீரர்கள்
பிரபாகரன்


'புலிகளின் தாகம்
தமிழீழத் தாயகம்'
வரலாற்றுண்மை

அறிவன்பன்
தமிழ்நாடு

சக்தி எனும் ஓவியர் வரைந்த ஓவியம். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மீது கொண்ட பற்றுதல்களின் வெளிப்பாடுகளாக இவை அமைகின்றன. தமிழகக் கலைஞர்களிடம் ஆழ உறங்கிக் கிடக்கின்ற சிறு நெருப்பின் சிதறல்களாக இவை மிளிர்கின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மாவீரர்களின் இரத்தத்தால் எமது வரலாறு எழுதப்படுகிறது

ஒரு விடுதலை வீரன் சாதாரண வாழ்க்கையை வாழும் ஒரு சாதாரண மனிதப்பிறவி அல்ல. அவன் ஒரு இலட்சியவாதி. ஒருஉயரிய இலட்சியத்திற்காக வாழ்பவன். தனக்காக வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்பவன். மற்றவர்களின் விடிவுக்காக, விமோசனத்திற்காக வாழ்பவன். சுயநலமற்ற, பற்றற்ற அவனது வாழ்க்கை உன்னதமானது, அர்த்தமானது. சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான். எனவே, விடுதலை வீரர்கள் அபூர்வமான மனிதப் பிறவிகள். அசாதாரணமான பிறவிகள்.

ஒரு விடுதலை வீரனின் சாவு, ஒரு சாதாரண நிகழ்வு அல்ல. அந்தச் சாவு, ஒரு சரித்திர நிகழ்வு. ஒரு உன்னத இலட்சியம் உயிர்பெறும் அற்புதமான நிகழ்வு. உண்மையில் ஒரு விடுதலை வீரன் சாவதில்லை. அவனது உயிராக இயங்கிவந்த இலட்சிய நெருப்பு என்றுமே அணைந்து விடுவதில்லை. அந்த இலட்சிய நெருப்பு ஒரு வரலாற்றுச் சக்தியாக மற்றவர்களைப் பற்றிக்கொள்கிறது. ஒரு இனத்தின் தேசிய ஆன்மாவை தட்டி எழுப்பிவிடுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

(11ம் பக்கத் தொடர்ச்சி)

எந்த மாற்றமும் செய்யப் படாமலேயே எல்லா ஒழுங்குக ளும் பூர்த்தியாகிவிட்டன.

அவர்களுடைய நாள் நெருங்கி விட்டது.

கடைசி வேவுக்குப் போன போது- அசோக்கிடம் ஜெயம் சொன்னானாம்,

"கரும்புலிகளுக்குள்ளேயும் நாங்கள் வித்தியாசமாகச் செய் யப்போகிறோம்; இது ஒரு புது வடிவம். நாங்கள் இவற்றை அழிக்கும் போது சிங்களத் தளபதிகள் அதிர்ச்சிக்குள்ளா வார்கள்."

தலைவர் வந்து வழியனுப்பி வைத்தார்;

அவர்களுக்கு அது பொன்னான நாள்.

ஒன்றாயிருந்து உணவருந்திய தலைவர், கட்டியணைத்து முத்த மிட்டு விடை தந்தபோது-

கரும்புலிகளுக்கே உயிர் புல்லரித்தது.

"நான் நம்பிக்கையோடு எதிர்பார்த்திருக்கிறேன்."- தலை வர் வழியனுப்பிவைத்தார்.

மேலே- வானத்துக்கும் பூமிக்கும் இடையில்-

வெகு உல்லாசத்துடன்-

உலங்கு வானூர்தி ஒன்று பலாலிப் பக்கமாகப் போய்க்கொண் டிருந்தது. அட்டகாசமாய் சிரித்து விட்டு நவரட்ணம் சொன்னான்: "இண்டைக்குப் பறக்கிறார், நாளைக்கு நித்திரை கொள்ளப் போகிறார்."

'நீண்ட' பயணத்திற்குத் தயா ராகி, சிரித்துக் கும்மாளமடித்துக் கொண்டு நின்றவர்களிடம், "எல் லோரும் வெளிக்கிட்டு விட்டீங்கள்... தூரதேசத்துக்குப் போல இருக்கு..."


தளபதி சொர்ணம் கேட்க-

கண்களால் புன்னகைத்து ரங்கன் சொன்னான்-

"ஓமோம்.... கிட்டண்ணை யிட்ட..... திலீபண்ணை..... இப்படி நிறைய தெரிஞ்ச ஆக்கள் அங்க இருக்கினம்"

பலாலிப் பெருந்தளத்தின் முன்ன ணிக் காவலரண்களுக்கு மிகவும் அருகில் எங்கள் தளபதிகளிடம் விடைபெற்றுச் செல்லும்போது, நின்று திரும்பி, தளபதி செல்வ ராசாவிடம் "அண்ணன்மார் கவன மாப் போங்கோ 'செல்' அடிப்பான்" என்று சொல்லிவிட்டுப் போனான் திரு.

www.tamilarangam.net



கரும்புலி கப்டன் திரு
(கோணமலை முகுந்தன்)
அம்பாறை - 21.02.1973

கைகளை அசைத்து அசைத்துச் சென்ற கரும்புலிகள் இருளின் கருமையோடு கலந்து மறைந்தார்கள்.

தாக்குதலணி, தாக்கு மையத் தைச் சென்றடைவதே ஒரு பெரிய விடயமாகக் கருதப்பட்டது.

தாக்குதலைச் செய்வது இன் னொரு பெரிய காரியம்.

புறப்பட்டுப் போகும்போது அவர்களிடம் இருந்த தளராத உறுதி, தணியாத தாகம், எல்லாவற் றையும் மேவி- அசையாத தன்னம் பிக்கை.

***

ஓகஸ்ட் திங்கள் முதலாம் நாள்-

பகற்பொழுது பின்வாங்கிக் கொண்டிருந்தது.

யாழ்ப்பாணக் குடாநாட்டை இருள் விழுங்கிக்கொள்ள, பலா லிப் பெருந்தளத்தை, 'மின்னாக்கி' ஒளிவெள்ளத்தில் அமிழ்த்தியது!

மாலை 6.30 மணியைக் கடந்துவிட்டிருந்த நேரம்.

தங்கள் இலக்கை நோக்கி அவர்கள் நகர்ந்துகொண்டி ருந்தார்கள். வேவுப் புலி வீரர்கள் முன்னே; கரும்புலி வீரர்கள் பின்னே.

மாவிட்டபுரத்தையும் தெல்லிப்பழையையும் இணைக் கும் பிரதான வீதியும், தச்சன் காட்டிலிருந்து வந்து அதனைச் சந்திக்கும் குறுக்கு வீதியும் இராணுவச் சப்பாத்துக்களால் மிதிபட்டு பேச்சு மூச்சற்றுக் கிடந்தன.

வீதியோரமாக, தச்சன் காட்டடியில் அணி நகர்ந்து கொண்டிருந்த சமயம்-

அவதானமாக; மிக அவதா னமாக அவர்கள் ஊர்ந்துகொண் டிருந்த போது-

திடீரென தெல்லிப்பழைப் பக்கமாகக் கேட்டது 'ட்ரக்' வண்டிகளின் உறுமல்.

பயங்கர வேகத்தோடு அது நெருங்கிக்கொண்டிருந்தது-

'நேராக மாவிட்டபுரம் பக்கம்தான் போகப் போகிறான்' என நினைத்தவேளை, தச்சன்காட் டுப் பக்கமாகவே திரும்பினான்- வந்த வேகம் தணியாமலேயே.

நல்ல காலம்-

பளீரென்ன அடித்த ஒளி வெள்ளத்தினுள் மூழ்கிப் போகா மல், பக்கத்திலிருந்த காணிக்குள், எல்லோரும் சம நேரத்தில் பாய்ந்து மறைந்துவிட்டார்கள்.

அவர்களைக் கடந்து நேரா கச் சென்று, சந்திக் காவலரண டியில் நின்றவன், நின்றானா....? அந்த வேகத்திலேயே திரும்பி வந்தான்.

'என்ன நாசமடாப்பா....?' என நினைத்தவேளை 'ட்ரக்' வண்டிகள் இரண்டும் அவர்களுக்கு நேர் முன்னே வந்து சடுதியாய்த் தரிக்க-

சில்லுகள் கிளப்பிய புளுதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யோடு, புற்றீசலாய்க் குதித்தனர் சிங்களப் படையினர்.

குழல் வாய்கள் தணலாக துப்பாக்கிகள் பேசத்துவங்கின. 'பொம்மருக்கென்று' காவி வந்த நவரட்ணத்தின் 'லோ' ஒன்று, 'ட்ரக்' வண்டியைக் குறிவைத்து முழங்கியது.

எல்லோரும் ஓடத்துவங்கினர். அது சண்டை போடக் கூடிய இடமல்ல; சண்டை பிடிப்பதற்குரிய நேரமுமல்ல.

அவர்கள் அங்கே போனது இதற்காகவுமில்லை.

எங்கே தவறு நடந்தது...? எங்காவது 'சுத்துச் சென்றிக் காரன்' கண்டானோ.....? 'டம்மி' என்று நினைத்த பொயின்ரிலிருந்து பார்த்துச் சொன்னானோ? எங்காவது வீடு உடைத்து சாமான் எடுக்க வந்த ஆமி கண்டு அறிவித்தானோ....?

என்னவாகத்தான் இருந்தாலும் அவர்கள் சென்ற நோக்கம் கெட்டுவிட்டது.

தச்சன்காட்டில் நடந்த அந்த துரதிர்ஷ்டம்தான், எங்களது தாக்குதல் திட்டத்தையே திசைமாற்றியது.

'திரு' இல்லை; 'ரங்கன்' இல்லை: 'புலிக்குட்டிக்கு' என்ன நடந்ததென்று தெரியவில்லை; 'ராஜேஸ்' ஒரு வழிகாட்டி- அவனையும் காணவில்லை.

எங்கள் தாக்குதலணி சேதாரப் பட்டுவிட்டது.

ஏனையோர் ஒரு பக்கமாக ஓடியதால் சிதறாமல் ஒன்றாயினர்.

தாம் வந்த காரியத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டிய தவிர்க்கமுடியாத கட்டாயம் எழுந்துவிட்டதை எஞ்சியிருந்தவர்கள் உணர்ந்தனர்; இந்தச் சண்டையோடு எதிரி உசாரடைந்துவிடுவான். கரும்புலி வீரர்கள் வேவுப்புலி வீரர்களை அவசரப்படுத்தினர்.

"உடனடியாக எங்களை தாக்குதல் முனைக்குக் கூட்டிச் செல்லுங்கள்."

அடுத்த சிலமணி நேரங்களின் பின்- பொழுது நள்ளிரவை நெருங்கிக்கொண்டிருந்த சமயத்தில்- அவர்கள் வான்படைத் தளத்தின் முட்கம்பி வேலிக்கருகில் தயாராகிக் கொண்டிருந்தனர்.

பிரதான கட்டளையகத்தோடு கெனடி தொடர்பு எடுத்தான். நடந்து முடிந்த துயரத்தை அவன் அறிவித்தான்.



கரும்புலி லெப். ரங்கன்
குணமாலை ரதிக்குமார்
கிளிநொச்சி - 09.02.1976

"7 பேருக்கென வகுக்கப்பட்ட தாக்குதல் திட்டத்தில் எஞ்சியிருப்பது 4 பேர் மட்டுமே" என்பதை அவன் தெரியப்படுத்தினான். "எதிரி முழுமையாக உசார் அடைந்துவிட்டதால், இருக்கின்றவர்களுடன் உடனடியாக தாக்குதலை ஆரம்பிக்க வேண்டும்" என்று வலியுறுத்தினான். "தாமதிக்கின்ற ஒவ்வொரு நிமிடமும் இலக்குகள் தப்பிப் போக நாங்கள் வழங்குகின்ற சந்தர்ப்பங்கள்" என்பதை விளக்கினான். "தாக்குதலை நிகழ்த்தாமல் திரும்பி, தப்பித்து வெளியேறுவதும் சாத்தியப்படாது" என்பதையும் சொன்னான்.

அவனிடம் சற்று நேரம் அவகாசம் கேட்ட பிரதான கட்டளையகம், 'பிரத்தியேக'மாக அமைக்கப்பட்டிருந்த இன்னொரு கட்டளையகத்தோடு கலந்து பேசியது. கெனடி சொல்வதே சரியானது எனவும், அதைவிட வேறு வழியில்லையெனவும் பட்டது.

தாக்குதலுக்கு ஒப்புதல் வழங்கப் பட்டது.

முட்கம்பி வேலிகளை நறுக்கி அறுத்து வேவுப்புலி வீரர்கள் பாதை எடுத்துக் கொடுக்க, வான்தளத்தில் இலக்குகளைத் தேடி கரும்புலி வீரர்கள் உள்ளே நுழைந்தனர்.

***

அசோக்கிடமும் ரஞ்சனிடமும் விடைபெற்று அவர்கள் உள்ளே சென்றுவிட, அவர்களிடம் விடைபெற்றுகொண்டு இவர்கள் வெளியே திரும்பிக் கொண்டிருந்தனர்.

விடி சாம நேரம்-

படு இருள்.

மிகக் குறுகிய தூரத்திற்குள் தான் எதனையும் மங்கலாய்த்தன்னும் பார்க்கமுடியும்.

மாவிட்டபுரத்திற்குப் பக்கத்தில் ஒரு குச்சொழுங்கையால் அவர்கள் திரும்பிக்கொண்டிருந்த போது-

ஒரே ஒரு மணித்துளி-

இருந்தாற் போல்- அந்த இருளுக்குள் இருளாக..... அவர்களிற்கு முன்னால்.....

அதென்ன....? நிழலாக ஏதோ அசைவது போல உள்ளது!

ரஞ்சனின் கைகளைச் சுரண்டி மெதுவாக, "ஆமி நிக்கிறான் போல..." அசோக் சொல்லி முடிக்குமுன்-

தீப்பொறி கக்கிய சுடுகுழலிலிருந்து காற்றைக் கிழித்துச் சீறிய ரவைகள்- அசோக்கின் தசைநார்களையும் கிழித்துச் சென்றன!

"அம்......" முழுமையாக வெளிவராத குரலுடன் குப்புற வீழ்ந்தான் இந்த வீரன்.

அடுத்த நிமிடத்தில்-

கொஞ்சம் ரவைகளையும் ஒரு கைக்குண்டையும் பிரயோகித்து,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அசோக்கையும் பறிகொடுத்துவிட்டு, பக்கத்துக் காணிக்குள் பாய்ந்து ரஞ்சன் ஓடிக்கொண்டிருந்தான்.

முன்பொரு நாள்-

மயிலிட்டிப் பக்கமாக வேவுக் குச் சென்ற ஒரு இரவில், இராணு வம் முகாமிட்டிருக்கும் பாடசாலை ஒன்றை ரஞ்சனுக்குக் காட்டி, அசோக் மனக்குமுறலோடு சொன்னானாம்-

"இதுதான்ரா நான் படிச்ச பள்ளிக்கூடம்; இண்டைக்கு இதில் சிங்களவன் வந்து குடியி ருக்கிறான் மச்சான்.... வீட்டுக்கு ஒரு ஆளெண்டாலும் போராட வந்தா இந்த இடமெல்லாத் தையும் நாங்கள் திருப்பி எடுக்கலாந்தானேடா...."

ரஞ்சனது நெஞ்சுக்குள் இந்த நினைவு வந்து அசைந்தது.

தொடர்ந்து நகருவது ஆபத் தாயும் முடிந்துவிடக்கூடும் என்ப தால், அருகிலேயே ஒரு மறைவி டம் தேடி அவன் பதுங்கிக் கொண்டான்.

இப்போது அவன் தனித்துப் போனான். கூட வந்த தோழர் கள் எல்லோரினதும் நினைவுகள், இதயமெல்லாம் நிறைந்து வாட்டின.

இனி எப்படியாவது அங்கி ருந்து அவன் வெளியேற வேண் டும். வந்தவர்களில் எஞ்சியிருப் பது அவன் மட்டும்தான். நடந்த வற்றைப் போய்ச் சொல்வதற்காக வாவது, அந்த மரணக் குகைக் குள்ளிருந்து அவன் பாதுகாப்பாகத் தப்பிக்கவேண்டும். எனவே அவன் இனி மிக அவதானமாக இருக்க வேண்டியது கட்டாயமாகின்றது.

மெல்ல விடிந்தது.

அவன் தொடர்ந்து நகர்ந்து வெளியேற நினைத்தபோது-

மின்னலென ஒரு யோசனை மூளைக்குள் பொறிதட்டியது.

'தச்சன்காட்டில் யாராவது அதிர்ஷ்டவசமாகத் தப்பியிருக் கலாம். அவர்கள் பாதை தெரியா மல் மாறுப்பட்டு, வேவு வீரர்கள் திரும்பி வரலாம் என நம்பி, உள்ளே நுழைந்த முதல்நாள் இரவு அவர்கள் தங்கிய தரிப்பிடத்தில் போய் நிற்கக்கூடும்.'

www.tamilarangam.net

நப்பாசைதான்; ஒரு மன உந்துதலோடு அவன் போனான்.

அவன் அங்கே செல்ல.... அங்கே...!

என்ன அதிசயம்! அவன் நினைத்து வந்ததைப் போலவே அவர்கள்....



கரும்புலி மேஜர் ஜெயம்
குணநாயகம் தேவராசா
திருக்கோணமலை - 05.03.1976

ஆனால் நால்வருமல்ல.

ரங்கனும் புலிக்குட்டியும் மட் டும் நின்றார்கள்; ராஜேஸ் இல்லை, 'திரு'வும் இல்லை.

அவனைக் கண்டதும் அவர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. 'போன உயிர் திரும்பி வந்தது போல' என்பார்களே, அப்படி ஒரு மகிழ்ச்சி. "உடனே எங்க ளைக் கொண்டுபோய் கெனடி அண்ணனிட்டை விடு; இண் டைக்கு இரவுக்காவது அடிக்க லாம்" என்று அவர்கள் அவசரப் படுத்திய போது-

ரஞ்சன் நடந்தவற்றைச் சொன்னான்.

அந்தக் கரும்புலி வீரர்களால் அதனைத் தாங்கமுடியவில்லை. தாங்கள் பங்கு கொள்ளாமல் அந்தத் தாக்குதல் நடந்து முடிந்ததை அவர்களால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. தங்களது கைகளை மீறி எல்லாம் நடந்து முடிந்து விட்டதை எண்ணி, அவர்கள் மனம் புழுங்கினார்கள்.

எல்லாம் முடிந்தது.

"இனி நாங்கள் எப்படியா வது, எந்தப் பிரச்சினையும் இல்லாமல் வெளியில் போய்விட வேண்டும்" என்றான் ரங்கன். போகத்தானே வேண்டும், பிறகென்ன....? ஆனால், ரங்கன் அதற்கான காரணம் ஒன்றைச் சொன்னான்.

"இதற்குள் நிற்கும் போது எங்களுக்கும் ஏதாவது நடந்தால், இயக்கம் எங்களையும் கரும்புலி கள் என்றுதானே அறிவிக்கும். அப்போது விமானங்களை அழித் தவர்கள் என்ற பெயர்தானே எங்களுக்கும் வரும். ஆனால், அவர்களுடைய தியாகத்தில் நாங்கள் குளிர்காயக்கூடாது." இதுதான் அவனுடைய மன நிலை.

மிகவும் பாதுகாப்பானது என்று கருதிய பாதை ஒன்றி னால் வெளியேற அவர்கள் முடிவுசெய்தனர்.

ரஞ்சன் வழிகாட்டினான்; கூட்டி வந்த வேவு வீரர்களில் இப்போது எஞ்சியிருப்பது அவன் மட்டும்தான்.

பகற்பொழுது. எனவே ஆகக் கூடிய அவதானத்துடன் அவர்கள் நடந்துகொண்டிருந்தனர்.

மெல்ல மெல்ல சூரியன் உச் சியை நோக்கி உயர்ந்து கொண்டி ருந்தான்.

அப்போது அவர்கள் சீராவ ளைக்குப் பக்கத்தில் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

சரியாக நினைவில் இல்லை, ஒரு பதினொரு மணியிருக்கும்.

ஒரு பற்றைக்குள்ளிருந்து "கவுத..." என ஒரு குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தால், ஒரு சிங்களப் படையாள் குந்திக்கொண் டிருந்தான்; தங்களுடைய ஆட்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்று நினைத்திருப்பான் போலும்.

என்ன பதிலைச் சொல்வது...? அவர்கள் யோசிக்க, அவனுக்குள் சந்தேகம் எழுந்துவிட்டது.

சற்று உறுத்தலாக, "ஒயா கவுத...?" கேட்டுக்கொண்டே துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு அவன் எழ, ரஞ்சனின் கையில் இருந்த 'ரி.56' அவனுக்குப் பதில் சொல்லியது.

"நாங்கள் புலிகள்"

வெடித்தது சண்டை.

அவர்கள் ஓடத் துவங்கினர்; மொய்த்துக்கொண்டு கலைத்தனர் சிங்களப் படையினர்.

கணிசமானதொரு தூர இடைவெளியில் அந்தக் கலைபாடு நடந்தது. பகைவனின் சன்னங்கள் அவர்களை முந்திக்கொண்டு சீறின.

திடீரென ரங்கன் கத்தினான், "பேய்! என்ர காலில வெடி கொளுவிற்றுதடா..."

ஓடிக்கொண்டே பார்த்தார்கள். வலது கால் என்பது தெரிகிறது. எந்த இடத்திலே என்பது தெரியவில்லை. அதைத் தெரிந்துகொள்வதால் எந்தப் பயனும் வந்துவிடப் போவதுமில்லை.

ரங்கன் ஓட ஓட அவனது காலிலிருந்து ரத்தம் தெறித்துக்கொண்டிருந்தது.

இவர்களால் எதுவுமே செய்ய முடியாது. எதனையும் செய்ய வேண்டுமென அவனும் எதிர்பார்க்கவும் இல்லை.

"என்னால் ஏலாதடா... என்னைச் சுட்டுப்போட்டு நீங்கள் ஓடுங்கோடா!" ரங்கன் கத்தினான்.

அவன் ஓடமுடியாமல் பின்தங்கிக்கொண்டிருந்தான்.

ரஞ்சன் சொன்னான், "குப்பியைக் கடித்துக்கொண்டு, 'சாஜ்ஜரை' இழு மச்சான்...."

'சாஜ்ஜர்' உடலோடு இணைக்கும் வெடிகுண்டு. தாக்குதலுக்குப் புறப்படும் போது கரும்புலி வீரர்களுக்கு வழங்கப்பட்டது. சண்டைக்களத்தில் எதிரியிடம் பிடிபடக் கூடிய சந்தர்ப்பம் வருமானால், ஆகக் கடைசி வழியாக அது அவர்களைக் காக்கும்.

ரங்கன் குப்பியைக் கடித்துக் கொண்டே 'சாஜ்ஜரின்' பாதுகாப்பு ஊசியையும் இழுத்து எறிந்தான்.

மெல்ல மெல்ல அவன் பின்தங்கி விழ, கலைத்துக்கொண்டு வந்த படையினர் அவனை நெருங்க....



கரும்புலி மேஜர் திலகன்
வேலு சுப்பையா ராஜ்
மட்டக்களப்பு - 01.01.1975

சாஜ்ஜரும் ரங்கனும் வெடித்துச் சிதறிய சத்தம், ஓடிக்கொண்டிருந்தவர்களின் காதில் விழுந்தது. திரும்பிப் பார்த்தார்கள். புகையும், அவனது உயிரும் தமிழீழத்தின் தென்றலோடு கலந்துகொண்டிருந்தன.

அந்த வெடி அதிர்ச்சியில் குழம்பித் தடுமாறி, பகைவன் திரும்பவும் கலைக்கத் துவங்குமுன், அவர்கள் ஓடி மறைந்துவிட்டார்கள்.

எங்கோ பதுங்கியிருந்து, எல்லாம் அடங்கி இரவாகிய பின், மெல்ல மெல்ல நகர்ந்து வெளியில் வந்தனர் ரஞ்சனும் புலிக்குட்டியும்.

தச்சன்காட்டில் மாறுபட்டுக் கணாமற் போன ராஜேசும் ஐந்து நாட்களின் பின்னர், ஒருவழியாக வந்து சேர்ந்தான்.

ஆனால் அசோக் வரவில்லை; ரங்கன் வரவில்லை; திருவும் வரவேயில்லை.

***

நடு இரவு கடந்து போனது.

ஒகஸ்ட் 2ம் நாளின் ஆரம்ப மணித்துளிகள் சிந்திக்கொண்டிருந்தன.

கெனடி பிரதான கட்டளையகத்துக்கு விபரத்தை அறிவித்தான்.

"இப்போ நாங்கள் நான்கு பேர்தான் நிற்கின்றோம். ஜெயம், நவரட்ணம், திலகன் மற்றும் நான். நாங்கள் தாமதிக்க முடியாது. மற்றவர்களுக்கு என்ன நடந்தது என்பதும் தெரியாது. அவர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கவும் முடியாது. எனவே நாங்கள் நால்வரும் உள்ளே இறங்குகிறோம். எங்களால் முடிந்தளவுக்கு வெற்றிகரமாகச் செய்கிறோம்."

தச்சன்காட்டுச் சண்டையின் செய்தி எங்கும் பறந்தது.

அந்தப் பெருந்தளம்- மயிர்களைச் சிலிர்த்துக்கொண்டு நிமிரும் ஒரு சிங்கத்தைப் போலத் துடித்தெழுந்தது.

ஆபத்து தங்கள் வீட்டுக்குள்ளேயே நுழைந்துவிட்ட அச்சம் சிப்பாய்களைக் கவ்விக்கொண்டது. சுடுகருவிகள் தயாராகின.

எந்த நேரத்திலும், எந்த முனையையும் உள்ளே நுழைந்த புலிகள் தாக்குவர் எனப் படைவீரர்கள் எச்சரிக்கப்பட்டனர்.

விமான ஓட்டிகள் வானூர்திகளில் ஏறி தயார்நிலையில் இருக்குமாறு பணிக்கப்பட்டனர்.

வான்படைத் தளத்தைப் பாதுகாக்கும் காவலரண்களும், வானூர்திகளுக்குரிய காவற் படையினரும் உசார்நிலையில் வைக்கப்பட்டனர்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் உச்ச நிலைக்கு வந்து பரிபூரணமாக ஆயத்தமாகிய பகைவன், எதனையும் எதிர்கொள்ளத் தயாராகப் போர்க்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கோலம் பூண்டு நின்ற வேளை-

யுத்த சன்னதர்களாகப் புறப் பட்டுச் சென்ற எங்கள் கரும்புலி வீரர்கள்- சிங்கத்தின் சிலிர்த்து நின்ற பிடரி மயிர்களினூடு ஊர்ந்து, அதன் முகத்தை நெருங்கினர்.

பிரதான கட்டளையகத்திலி ருந்த 'வோக்கி'யில் கெனடியின் குரல் ஒலித்தது. கெனடி நிலை மையை விளக்கினான்.

"நாங்கள் நல்லா கிட்ட நெருங் கிற்றம்...."

"ஏதாவது தெரிகிற மாதிரி நிற்குதா?"

"நாங்கள் தேடி வந்ததில் ஒன்றுதான் நிற்குது. பக்கத்தில் ஒருத்தன் நிற்கிறான்."

"வேற ஒன்றும் இல்லையா...?"

"அருகில் சின்னன் ஒன்று ஓடித் திரியுது"

"நீங்கள் தேடிப்போன மற்றது கள்.....?"

இங்க இருந்து பார்க்க எதுவும் தெரியேல்ல. தூரத்தில் நிற்கக்கூடும். இறங்கினதற்குப் பிறகுதான் தேடக் கூடியதாக இருக்கும்."

"இப்ப நீங்கள் இறங்கக்கூடிய மாதிரி நிக்கிறீங்களா....?"

"ஓமோம்.... குண்டு எறியக்கூடிய தூரத்திற்கு வந்திட்டம். நீங்கள் சொன்னால் நாங்கள் அடிச்சுக் கொண்டு இறங்கிறம்."

"அப்படியெண்டால் நீங்கள் அப்படியே செய்யுங்கோ"

கட்டளையகம் அனுமதி வழங்கியது.

அதன் பிறகு என்ன நடந்திருக் கும்...?

கெனடி உத்தரவிட்டிருப்பான்.

"தாக்குதலை ஆரம்பியுங்கள்"

நவரட்ணத்தின் கையிலிருந்த 'லோ' முழங்க 'பெல் 212' இல் தீப்பற்றி எரியும்போது, கெனடி 'டொங்கா'னால் அடிக்க திலகன் அதன் மீது கைக்குண்டை வீசியிருப் பான்.

அதே சமய நேரத்தில் ஜெயத் தின் 'லோ' பவள் கவச வண்டி யைக் குறிவைத்து முழங்கியிருக்கும்.

www.tamilarangam.net

"தமிழோசை"
"இது எங்கள் தேசம்"
"தாயகக் கனவு"
"சின்ன விழிகள்"
போன்ற வெற்றிப்படங்களைத் தந்த பொ. தாசனின் மற்றுமொரு "இன்னுமொரு நாடு" எனும் வீடியோப் படம் வெளிவந் திருக்கிறது. இப்படத்தினை முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகத்தினர் தயாரித்துள்ளனர். திரு. முரளி இப்படத்திற்கு இசை அமைத்துள்ளார்.

பலாலித் தளத்தின் மைய முகாம் அதிர்ந்திருக்கும்!

தங்களது அனைத்துக் கவசங்க ளையும் உடைத்து நுழைந்து, பாதுகாக்கப்பட்ட அதிஉயர் கேந்தி ரத்தையே புலிகள் தாக்கிவிட்டதை எதிரி கண்முன்னால் கண்டு திகைத்திருப்பான்.

சன்னங்களைச் சரமாரியாய் விசிறும் துப்பாக்கிகளோடு கூச்ச லிட்டபடியே பகைவன் குவிந்து வர- கெனடியின் 'டொங்கன்' எறி கணைகளைச் செலுத்தியிருக்கும்.

திலகனின் ரி. 56 ஒய்வற்று இயங்கிக்கொண்டிருக்க, தங்களது அடுத்த இலக்குகளைத் தேடி அவர்கள் ஓடிக்கொண்டிருந்திருப் பார்கள்.

"கெனடி..... கெனடி... நிலைமை என்ன மாதிரியெண்டு எங்களுக்குச் சொல்லுங்கோ....."

"ஒரு ஹெலியும் ஒரு பவளும் அடிச்சிருக்கிறம். ரெண்டும் பத்தி எரிஞ்சுகொண்டிருக்கு.... கிட்டப் போக ஏலாமல் சுத்தி நிண்டு கத்திக்கொண்டிருக்கிறாங்கள்"

"மற்றதுகள் என்ன மாதிரி....?"

"தொடர்ந்து அடிச்சுக்கொண்டு உள்ளே இறங்கிக்கொண்டிருக்கிறம், பொம்மருகளைத் தேடுறம்."

ஆனால்- 500 மீற்றருக்கு அகன்று 2600 மீற்றருக்கு நீண்டிருந்த விசாலமான ஓடுபாதை அது. மிகவும் தூரத்தில் நிறுத்திவைக்கப் பட்டிருந்த 'சியா மாசெட்டி' குண்டு வீச்சு விமானங்களில் தயாராய் இருந்த ஓட்டிகள், அவற்றை மேலெடுத்துவிட்டனர்.

கெனடியின் தொடர்பு நீண்ட நேரத்தின் பின் கிடைத்தது.

"கெனடி... நிலைமை எப்படி எண்டு சொல்லுங்கோ..."

"ஒரு 'ஹெலி'யும், ஒரு 'பவளும்' அடிச்சிருக்கிறம்.... முழுசா எரிஞ்சு கொண்டிருக்கு....

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்."

"கெனடி.... நீங்கள் அவசரப்பட வேண்டாம்.... மற்ற ஆக்கள் என்ன மாதிரி?"

"நானும் திலகனும் நிற்கிறம்...."

"கெனடி.. நீங்கள் அவசரப்படா தேங்கோ... தொடர்ந்து எதுவும் செய் யக்கூடிய மாதிரி இல்லையா....?"

"அண்ணன் எனக்கு ரெண்டு காலும் இல்லையண்ணை..."

"..............."

"................"

"..............."

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்; புலிகளின் தாகம்.... தமிழீழ....."

"கெனடி..... கெனடி....."

"கெனடி...... கெனடி...."

"திலகன்.... திலகன்...."

"கெனடி..... கெனடி....."

***

ஒரு முதியவர் நீண்ட பெருமூச் சொன்றை விட்டுக்கொண்டு-

"என்னடா தம்பி செய்யிறது.... வயசும் போகுது...." என்று கவலைப் பட்டபோது-

அருகில் 'ஈழநாதம்' நாளேட்டில் அவர்களின் படங்களைப் பார்த்து நின்ற அவரின் துணைவியர் ஏக்கத் தோடு சொன்னார்-

"நீங்கள் வயசு போகுதெண்டு கவலைப்படுறியள்..... எத்தனை பிள்ளையளுக்கு வயசு போறதே யில்லை....!"

நன்றி: விடுதலைப் புலிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




## கருணாகரன்

மழை பெய்யத் தொடங்கிவிட்டது. எங்களுடைய ஊர்கள் பூரிக்கத் தொடங்கும் இந்நேரம். எல்லா இடமும் சிலிர்ப்பு மீந்திருக்கும். புல்லோ பூண்டோ இல்லைப் பயிரோ எதுவாக இருந்தாலும் இந்நாட்களில் உயிர்ப்பு நிறைந்து பூரித்திருக்கும். எங்கும் பச்சை. பச்சையின் அடியில் ஈரலிப்பு. உயிர்ப்பின் வேர்விடல், மண்ணின் உயிர்ப்பாக, இயற்கையின் வேர்விடலாக இந்த மாரிகாலம் வரும். இது வருசம் வருசம் வரும் வரம்.

ஆனால் இந்த வரம்; இந்த ஈரலிப்பு; இந்தச் சிலிர்ப்பு இன்றைக்கு இல்லை. மழைபொழிகிறது. கந்தகச் சூடேறிய மண் கொதிக்கிறது. வாழ்க்கையின் சவாலுக்காக சிந்திய இரத்தம் இந்த மழைநீருடன் கலந்து ஊறுகிறது; எங்கும் பரவுகிறது. பூமியின் அடி ஆழம்வரை; அதன் சுழற்சி மையம் வரை அந்தக் குருதி உயிர்ப்பலம் நீள்கிறது.

முன்னைய மழைநாட்களில், கார்த்திகை மாதத்தின் ஈரலிப்பில் எங்கள் வயல்களில் நெல் இடுப்புயரம் வளர்ந்த குழந்தை. காற்றில் சாய்ந்தாடும் அதன் வாழிப்பு மனசு பூரிக்கும். நம்பிக்கை நிறைந்து வாழ்க்கை உவப்புடன் கைக்குள் பவுத்திரமாக இருக்கும். வாடையில் கடல் குமுறும். அதன் கொந்தளிப்பும், திமிறுதலும். மூசுதலும் வீரியமாய்......

எங்களுடைய மழைநாள் நெருப்பாகக் கொதிக்கிறது. மிகப் பெரிய பயங்கரத்திலிருந்து, சகிக்கமுடியாத அழிவிலிருந்து மீளவேண்டிய சவால் நமக்கு.

நமது வாழ்க்கை, அதன் சவால், எங்களுடைய வாழ்க்கையின் மையம், அதன் எதிர்பார்ப்பு எல்லாமே இந்தப் போராட்டத்துடன், இரத்தம் சிந்தும் புரட்சியுடன், அளவற்ற அர்ப்பணிப்புகளுடன்தான் என்றாகிவிட்டது.

இந்த அர்ப்பணிப்பு நமக்குப் புதியது. நம்பிக் கெடுதலும், ஏமாந்து போதலும், தனிலாபங்களில் மயங்கி விலை பேசுதல்; விட்டுக் கொடுத்தல் என்றிருந்த ஒரு முறைமையை இடித்துக்கொண்டு ஒரு வெடிப்பாக இந்த அர்ப்பணிப்புப் பிறந்துள்ளது.

கண்ணீர் ததும்பும் வாழ்க்கையையும், நிச்சயமற்ற தன்மையையும், இரண்டாம், மூன்றாம் தர கணிப்பின் கீழ் புறந்தள்ளப்படும் மனிதராக அலையும் அவலத்தையும் கண்டு சகிக்கமுடியாத எழுச்சியாக இந்த அர்ப்பணிப்பு உணர்வு முளைவிட்டது. பிரதேசம், சாதி, மதம், ஆண், பெண் என்ற பேதங்கள், பிரிவுகள் எல்லாவற்றையும் புறந்தள்ளி சுதந்திரதாகத்துடன் இது எழுச்சி கொண்டது. எங்களைச் சூழ்ந்த துயரங்கள், அழிவுகள், மீளமுடியாது என்றிருந்த நம்பிக்கையீனங்கள் எல்லாவற்றையும் இது வெற்றிகொண்டது. இவ்வாறான ஒவ்வொரு வெற்றியின் அடியிலும் மனசின் இழைகளோடு கலந்திருக்கும் நெகிழ்ச்சிக்குரிய கதைகள்.... பரிவு நிறைந்த உணர்வலைகள்.... சுதந்திரதாகம் கொண்ட இதயங்கள்..... எல்லாம் அர்ப்பணமாகியுள்ளன. இது எங்கள் மண்ணின் மகிமையாகவுள்ளது. அளவற்ற அர்ப்பணிப்பின் உணர்வாக விழிகள் துடிக்கின்றன. கண்ணீர் ஊற்றெடுக்கும் மையத்தில் நன்றி பெருக்கெடுக்கிறது. நிலவும் மௌனத்தில் அவர்களின் நினைவும், பரிவும் மேலெழுகிறது. இந்த வாழ்க்கையை நமக்களித்த புதல்வர்கள் நீள்துயில் கொள்கிறார்கள். தங்கள் உயிரை முன்னிறுத்தி எங்கள் உயிரைக் காத்தவர்கள். தங்களின் ஆசைகள், பருவச் செய்கைகள், தங்கள் சுயவாழ்க்கை எல்லாவற்றையும் விட்டு எல்லோரும் சகோதரர், எல்லோரும் பெற்றவர் என்று நினைத்தவர் உறங்குகிறார்கள். முகம் தெரிந்தும், தெரியாமல் இருந்தும் உறவாகிப்போன பிள்ளைகள்....

வாஞ்சையுடன் கரம்பற்றி எப்படி இருக்கிறாய் என்று கேட்ட நண்பன், ஒரு புன்னகையுடன் மட்டுமே எப்பொழுதும் சினேகமாயிருந்த அந்தப் பெயர் தெரியாத தோழன், எல்லாவற்றையும் துருவித்துருவிக் கேட்கும் குழந்தையான கெட்டிக்கார பெண்போராளி, உடம்பெல்லாம் சல்லடை பட்டு உயிர்பிழைத்தவன், எதிர்பாராது நிகழ்ந்த இராணுவச் சண்டையில் உயிரிழந்து போனவன்...... என்றெல்லாம் நீளும் இந்தத் தொடர்ச்சி....

வரிசை வரிசையாக சுதந்திரதின் அணிவகுப்பாய்.... கல்லறைகள்.... அவை நிமிர்ந்து எல்லையற்ற பெருவெளியை, சுதந்திரத்தின் ஒளிப்பொட்டை யாசித்தபடி..... ஒவ்வொன்றிலும் வெள்ளை மனசுகள்....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

எல்லாம் பொதுமையாய்...... சுதந்திரத்தின் பாடலை இசைத்தபடி.....

எங்களுடைய தேசத்தின் குழந்தைகளாக, வீரத்தின் பிரகிருதிகளாக நின்றிருந்தவர் இன்றைக்கு நெடுஞ்சாண் கிடையில் உயிர்மூச்சிழந்து உறங்குகின்றார். ஒவ்வொரு கல்லறையும் ஒவ்வொரு கோபுரமாய்.... ஒவ்வொரு கோபுரத்தின் முன்னும் மலர்க்குவியல்கள். அள்ளிவைத்த மலர்க்குவியல்களில் எவ்வளவு கண்ணீர்... எத்தனை நன்றி... எத்தகைய பரிவு?...

நீள்கிறது மௌனம். வளரும் உறுதியாய் வியாபிக்கிறது அமைதி. ஓங்கிய பனங்கூடலின் முற்றத்தில் எங்கள் வீரர்கள் தூங்குகிறார்கள். சுதந்திரப்பாடலின் முழக்கம் அந்த மௌனத்தின் பேரொலியாகக் கேட்கிறது.

மலர்கள் ஏந்தி நன்றிமிக்கவர்கள் வருகிறார்கள். நினைவுகளில் உருகி, கண்ணீர் சிந்தி வெள்ளைமனசு வீரரின் காலடியில் நின்றழுகிறார்கள். ஒரு தந்தை. அருகே சிறுபிள்ளைகள். எதிர்காலத்தின் கனவாக இருந்த பிள்ளை, நிகழ்காலத்தின் நினைவாகிப் போய்விட்ட சோகத்துடன்... அவரது கண்ணீரிலும் நம்பிக்கை மிஞ்சித் தெரிகிறது.

மழைபொழிந்து மண்சிலிர்க்கும் கார்த்திகையின் நாட்கள் எங்கள் வீரர்களுக்கானது. எங்களின் தேசம் விடுதலை பெறவேண்டுமென தங்கள் உயிரைத் தந்த மாவீரர்களுக்குரியது. மக்களின் முகங்களில் புன்னகை மலர்ந்திட வேண்டுமென்று தாங்கள் போரிட்டார்கள். நெஞ்சம் முழுவதும் தாயகக் கனவே அவர்களுக்கிருந்தது. விடுதலையின் வேட்கையுடன் துயரங்களை வென்றார்கள். சுதந்திர மூச்சுக்காக தாயை, தந்தையை, உறவை, தம் சுக துக்கங்களை, அவற்றின் ஈர்ப்பில் கட்டுண்டு போகாது விட்டுவிட்டு விசாலமான உறவை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

அவர்களின் செய்கைகள் எங்கள் தேசத்தின் உயிர்மூச்சானவை; எங்கள் வாழ்வின் அடிநாதமானவை.

www.tamilarangam.net



**"மாவீரர்களது அற்புதமான இலட்சியவாழ்கை, அவர்களது தியாகங்கள், அவர்கள் அனுபவித்த துன்ப துயரங்கள், ஏக்கங்கள், அவர்கள் கண்ட கனவுகள் இவை எல்லாவற்றினதும் ஒட்டுமொத்த வெளிப்பாடாகவே எமது போராட்ட வரலாறு முன்னேறிச் செல்கிறது. எமது வீரசுதந்திர வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால்- வியர்வையால்- கண்ணீரால் எழுதப்பட்டது.**

*தமிழீழத் தேசியத்தலைவர்*
*திரு. வே. பிரபாகரன்*

எதிரியின் யுத்தத்துக்கான பிரகடனங்களையும் மீறி எங்கள் தேசத்தின் ஒவ்வொரு வீதியிலும், ஒவ்வொரு வாசலிலும், காணும் ஒவ்வொரு மனிதரிலும் மாவீரரின் நினைவுகளை ஏந்திய நன்றியின் அடையாளம் தெரிகிறது. வீதிகள் அலங்காரம் கொள்கின்றன. ஊரெல்லாம் பொதுப்பணி நடக்கிறது. பள்ளிகளில் மாண்டவீரரின் நினைவுப்பாடல் பாடப்படுகிறது. ஒவ்வொரு வீரரின் கதையும் ஊரெல்லாம் பேசப்படுகிறது. கண்ணீர்மல்கக் கதைகேட்ட பிள்ளைகள் அந்தவீரரின் கனவுடன் வருகின்றார்கள். அவர் பாதையில் வெற்றி நமக்கென்ற நம்பிக்கை பிறக்கிறது. எங்களின் தேசம் விடுதலை பெறுமென்ற கனவு பலிக்கிறது. ஒவ்வொரு மாவீரரும் ஏற்படுத்திய தாக்கம், தம் சாவின்போதும் எதிரியின் உயிர் நரம்பில் அவர்கள் கொடுத்த அடியின் உக்கிரம் இந்த நம்பிக்கையை எம்முள் விதைத்துள்ளது. யுத்தம் நம்முன் தன் கோர முகத்தைக்காட்டிக் கத்தும் இந்த நாட்களில், அதை எதிர்கொள்ளும் துணிவுபிறக்கிறது.

கார்த்திகை நாட்களில் எதிரியின் கனவு மிகப் பயங்கரமாயிருக்கும். அவனுடைய இரவுகள் பயங்கரமாக சலிப்புடன் நீளும். கிலியூட்டும் எண்ணங்கள் அவனை நடுங்கவைக்கும். பதுங்குகுழியே அவனது வாழ்விடமாக இருக்கும். என்ன செய்யமுடியும்? யுத்தம் பற்றியே எதிரி பேசிக்கொண்டிருக்கும் வரை கார்த்திகை நாட்களில் அவன் சாப்பிடமுடியாது; தூங்கமுடியாது. குந்தியிருக்கமுடியாது.

எங்கள் வீரர்களின் கனவு பலிக்கும் வரை

எங்கள் அலை ஓயாது.

பிரிவின் ஆழ்ந்த துயரில் கண்ணீர் விட்டவர் நாம். சிந்திய கண்ணீரில் எங்களின் வாழ்க்கை இருந்தது. இறந்து போன தோழர்களின் நினைவில் எங்களைப் பிணைத்துக்கொண்டு எழுகின்றோம்.

அந்த மாவீரர்களின் நினைவோடு நெய்விளக்கேற்றிச் சுதந்திரத்தை நினைக்கின்றோம். விடுதலையின் பேரொளியாக ஒளிரும் அந்தச் சுடர்களின் உயிரொளியில் எங்கள் மண் சிலிர்க்கிறது. காற்றில் எழும் நாதமணியொலியில் சுதந்திரத்தின் கீதம் இசையெனப் பரவுகிறது. விழிமூடித் தூங்குகின்ற வேங்கை வீரர்களே எங்கள் தேசம் விடுதலை பெறும். உங்கள் கனவு நனவாகும் என்ற நினைவு மேலெழ, தலை தாழ்த்தி அவர் பாதம் வணங்குகின்றோம்.

சிந்தும் கண்ணீரை அந்த வீரருக்குக் காணிக்கையாக்குகின்றோம்.

*"வீரன் மண்ணில் புதையும் போது விதையாய்த் தானிருப்பான்."*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எதிரியின் கோட்டைக்குள் ஒரு அதிரடி

சிங்களப் படைகளின் ஆக்கிரமிப்புக்குள் இருக்கும் காவல்துறை நிலையமொன்று, 11.08.94 அன்று புலிவீரர்களால் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவமானது, ஒகஸ்ட் மாதத்தில் நடந்த, ஒரு முக்கிய போராட்டச் செயற்பாடாக அமைந்துவிட்டது.

இத்தாக்குதலின் சிறப்புக்கு நான்கு பிரதான அம்சங்கள் காரணிகளாக அமைந்துவிட்டன.

ஒன்று: எதிரியின் கோட்டைக்குள் நிகழ்ந்த தாக்குதல் என்பது.

இரண்டு: பட்டப் பகலில் நடந்த (மாலை 5 மணி) துணிகர இராணுவ நடவடிக்கையாக இருந்தமை.

மூன்று: தாக்குதல் நடைபெற்றவிதம்- அதாவது, இராணுவ உடை தரித்த புலிவீரர்கள் பிரயாணிகள் பேருந்து வண்டியில் சென்று, சிங்களக் காவல் நிலையத்திற்கு முன்னால் இறங்கி, 'கொமாண்டோ' பாணியில் தாக்குதல் நிகழ்த்தியமை.

நான்கு: தாக்குதலை வெற்றிகரமாக நடாத்தியதுடன், கைப்பற்றப்பட்ட துப்பாக்கிகளுடனும் வீரச்சாவடைந்த புலிவீரர்களது வித்துடல்களுடனும் வெற்றிகரமாகப் பின்வாங்கிய இராணுவச் செயற்பாடு.

இந்த இராணுவச் சாதனையில், மேஜர் ஜஸ்மினின் பங்கு முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

மன்னார்த் தீவுப் பொறுப்பாளராகக் கடமையாற்றிய மேஜர் ஜஸ்மின் இந்தக் 'கொமாண்டோ' தாக்குதலுக்கான திட்டத்தைத் திட்டியிருந்ததுடன், தாக்குதலைத் தலைமையேற்று நடாத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிங்களப் படைத்துறைத் தலைமையை அதிர்ச்சிக்கும் ஆச்சரியத்திற்கும் உள்ளாக்கிய இந்தக் 'கொமாண்டோ' தாக்குதல், ஒரு பதிலடித் தாக்குதல் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிலாவத்துறையில் அமைந்திருந்த எமது கடற்புலிகளின் முகாம் ஒன்றிற்குச் சமீபமாக உலங்குவானூர்திகள் மூலம் வந்திறங்கிய சிங்களப் படையின் 'கொமாண்டோ' அணியொன்று, கடற்புலிகளின் முகாமைத் தாக்கியதில், மூன்று போராளிகள் வீரச்சாவடைந்திருந்தனர்.

12.7.94 அன்று நடந்த இந்தத் தாக்குதல் சம்பவத்திற்குப் பதிலடியாகவே, பி.எம்.சி. கட்டடத்தில் அமைந்திருந்த சிங்களக் காவல் நிலையம் புலிவீரர்களால் தாக்கியழிக்கப்பட்டது. இத்தாக்குதலில் ஒன்பது சிங்களக் காவல்துறையினர் கொல்லப்பட்டதுடன், பத்திற்கு மேற்பட்டவர்கள் படுகாயங்களுடன் ஓடித்தப்பிவிட்டனர். அத்துடன் 22 நவீன துப்பாக்கிகளையும் புலிகள் கைப்பற்றியிருந்தனர்; போராளிகளின் தரப்பில் 5 புலிவீரர்கள் வீரச்சாவைத் தழுவியிருந்தனர்.

அந்த 'கொமாண்டோ' தாக்குதலின் கதை இதுதான்:

1) தாக்குதலுக்கான அனைத்துப் பயிற்சிகளையும் எடுத்து- ஒத்திகையும் பார்த்துவிட்ட ஜஸ்மின் தலைமையிலான 'கொமாண்டோ' அணி, படகுகள் மூலம் மன்னார் தீவினுள் புகுந்தனர்.



2) தலைமன்னாரிலிருந்து மன்னார் பேருந்து நிலையத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பிரயாணிகள் பேருந்தை இராணுவ உடையுடன் நின்ற புலிவீரன் ஒருவன் வழிமறித்தான். பேருந்து நின்றதும் சிங்கள இராணுவத்தினர் போல் நடித்த புலிவீரர்கள் பயணிகளைக் கீழிறக்கிவிட்டு, மன்னார் நோக்கிப் பயணத்தைத் தொடங்கினர்.



3) சிங்களக் காவல் நிலையம் அமைந்திருந்த 'பி. எம். சி.' கட்டடத் தொகுதிக்கு முன்னால் பேருந்தை நிறுத்தியபோது, அதே இடத்தில் சிங்களக் காவல்துறையினரின் சோதனை நடவடிக்கையை முடித்துக்கொண்ட இன்னொரு பேருந்தை விரைவாகப் பின்னால் செல்லும்படி, இராணுவச் சீருடையிலிருந்த புலிவீரர்கள் பணித்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


4) அப்பேருந்து பின்நோக்கிச் சென்றபின் திடீரென 'பி.எம்.சி.' கட்டட காவல் நிலையம் மீது புலிவீரர்கள் தாக்குதலைத் தொடுத்தனர். கை ஏவுகணை மற்றும் துப்பாக்கிகள் சகிதம் தாக்குதல் நடாத்தப்பட்டது.




5-6) 10 நிமிடத்திற்குள் காவல் நிலையக் கட்டடத்தை புலிவீரர்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தபோது, 9 காவல்துறையினர் இறந்திருந்தனர்; மிகுதிப் பேர் காயங்களுடன் தப்பியோடிவிட்டனர்.




புலிகள் தரப்பில் நான்கு போராளிகள் வீரச்சாவடைந்திருந்தனர். வீரச்சாவடைந்த போராளிகளது வித்துடல்களுடன் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களையும் ஏற்றிக்கொண்டு அதே பேருந்து, முன்னர் அது வழிமறிக்கப்பட்ட அதே இடத்திற்குப் போய்ச்சேர்ந்தது.



7-8. அங்கிருந்து கால்நடையாக புலிகள் அணி கடற்கரையை நோக்கிப் பின்வாங்கத் தொடங்கியது. உசாரடைந்த இராணுவம் பல முனைகளூடாக நகர்ந்துவந்து, புலிகளின் அணியுடன் சண்டையிடத் தொடங்கியது. இருண்ட பிறகும் சண்டை தொடர்ந்தது. சண்டையிட்டபடியே கடல்மூலம் பின்வாங்கப் புலிவீரர்கள் முயன்றனர். இத்தகைய சண்டையொன்றில், தாக்குதலுக்குத் தலைமையேற்றுச் சென்ற மேஜர் ஜஸ்மினும் வீரச் சாவடைந்தார்.





9. இறுதியில் வெற்றிகரமாக, படகுகள் மூலம் தாக்குதலணி பின்வாங்கிச் சென்றது.





மேஜர் ஜஸ்மின்
மரியதாஸ் அன்ரன் பியூட்டில்ஸ்
மன்னார் - 23.02.1968



லெப். ராஜா
அந்தோனி கிறிஸ்ரி
மட்டக்களப்பு - 1976



கப்டன் குமரன்
பரமேஸ்வரன் பிரதீபன்
யாழ். - 26.01.1974



லெப். அறிவனார்
கணேஸ் பாலச்சந்திரன்
யாழ். - 14.01.1974




கப்டன் சிறிக்காந்த்
பொன்னுச்சாமி குகதீஸ்வரன்
மட்டக்களப்பு - 09.03.1973

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆண்டைகள் மாற்றமா அடிமைகளுக்கு விடுதலை?

மகாவின் ஓவியத்திற்கான கவிதை



போர்த்துக்கீசியன்
டச்சுக்காரர்கள்
ஆங்கிலேயன்
சிங்களவன்
இப்படி

ஆண்டைகள் மாற்றமின்றி
என்ன நிகழ்ந்து விட்டது
அந்த 1948 இல்
மட்டும்

ஆங்கிலேயன் வசதிக்காக
ஐம்பத்தாறு தேசத்தை
இந்தியா என்றும்
ஈழம் சிங்களம் என்பதை
இலங்கை என்றும் ஆக்கியவன்

இந்தியாவை வடவனிடமும்
இலங்கையை சிங்களவனிடமும்
ஆட்சியதி காரத்தை தந்து
சென்றான்.

ஆகஸ்ட் 15
துக்கநாள் என்றும்
'தமிழ்நாடு தமிழருக்கே' - என்றார்
தந்தை பெரியார்.

"தமிழீழமே தமிழர் வாழ வழி"
என்றார் தந்தை செல்வா.

ஆள் மாறினார்கள்
சட்டம் மாறவில்லை
அதிகாரி மாறினார்கள்
அதிகாரம் மாறவில்லை.

கொடிகள் மாறியது
கொல்(ள்)கைகள் மாறவில்லை.
"ஆம்"

ஆண்டைகள் மாற்றமா
அடிமைகளுக்கு விடுதலை?

அவனாண்டான் இவனாண்டான்
எவனான்ட போதும்
தமிழனே மாண்டான்.

கொடி மாற்ற மல்ல
நாம் விரும்புவது
ஆள் மாற்றமல்ல
நாம் எதிர் பார்ப்பது
மக்கள் ஆள வேண்டும்
மக்களை - தமிழீழ
மக்களே ஆள வேண்டும்.

தமிழ் நிலமெங்கும்
அயலவனின் சுவடுகள்
தமிழ்க்குருதி தோய்ந்து

நம்மின குருதியில்
குளித்தவன் யார் யார் என்று
பட்டியல் போடு.
குருதியால் குளிப்போம்.
குளிப்போம்.
பகைவர்களே!

எங்கே ஓடுகின்றீர்
கடனைத் தீர்க்க வருகிறோம்
குருதிக் கடனைத் தீர்க்க
வருகிறோம்.

நாம் தமிழீழத்திற்காக
கருவியேந்தி போராடுவது
பிரிவினை அல்ல....
விடுதலை.

நாம் கேட்பது தனி நாடல்ல
தன்னாடு தமிழீழ
நன்னாடு.

பிண அலைகள் வீசுகின்ற
கடலோரம் பார்த்திருந்தும்
தீவின் தாகத்திற்கு
கடல் நீர் ஒப்பந்தமா?
அலையெனத் தமிழீழம்.

ஒவ்வொரு தேசிய இனமும்
தன்னைத் தானே ஆண்டு
கொண்டு
மற்றைய தேசிய இனங்களோடு
கைக்குலுக்கிக் கொள்வதில்
நமக்கொன்றும் தடையில்லை.

அடி பணிந்து வாழ மாட்டோம்
தமிழர் நாமே
அடக்கியிங்கு யாரையுமே
ஆளவும் மாட்டோம்.
படிக்கல்லாய் நாம்மாறி
போனதெல்லாம்
பழங்கதையாய் மாற்றிடவே
விடுதலைப் புலியாய்
வாராய்த் தமிழா!

எனவே,
தமிழீழத்திற்காக
எதையும் இழக்க துணிந்து
விட்டோம்
எதற்காகவும்
தமிழீழத்தை
இழக்க ஒப்பமாட்டோம்.

ஏனெனில்?
புலிகள் நாம் விடுதலை
புலிகள் நாம்.

புதுவை - தமிழ்நெஞ்சன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

டென்மார்க்கில் நடைபெற்ற திலீபனின் நினைவுநாள் நிகழ்ச்சியின் போது

www.tamilarangam.net









ஜேர்மனியில் நடைபெற்ற திலீபனின் நினைவுநாள் நிகழ்ச்சியின் போது

# உயிர்ப்பிக்கும் உணர்வுகளில் தோய்ந்து...

புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களில் பலர் எங்கிருந்தாலும் தாய்த் தேசத்தை நினைந்து கொள்பவர்களாகவும் தாய்மண்ணின் விடுதலைக்காக மரணித்த மாவீரர்களை மனதில் சுமந்தவர்களாகவும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்கள் எடுக்கின்ற விழாக்கள் விளங்கவைக்கின்றது. ஓடி ஆடிய மண்ணின் நினைவு பின்தொடரும் இந்தப் பிணைப்பால் மனம் இறுகும்போது நெஞ்சு ஈரம் உறும். ஓடி ஆடிய பூமி சிறையுண்டு போக வீரர் எழுந்தனர். அத்தகைய வீர மனிதர்களை எண்ணிப் பாடுகிற விழாக்கள் தமிழீழ மக்களால் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்திய வல்லாதிக்க அரசோடு உண்ணாதிருந்து போராடிய தியாகி திலீபனின் நினைவுநாள் விழாக்கள் உணர்வோடு கொண்டாடப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் டென்மார்க் கிளையின் கலை பண்பாட்டுக் கழகத்தினர் 24-09-1994 அன்று திலீபனின் நினைவுநாளைக் கொண்டாடினர். தியாக வேங்கை திலீபனுக்கு மக்கள் அனைவரும் தீபம் ஏற்றி அஞ்சலித்தார்கள். மண்ணின் விடுதலைக்காக மரணித்த மாவீரர்களுக்கும் மக்களுக்கும் மௌன அஞ்சலி செலுத்தினார்கள். தமிழீழ தேசிய கீதத்தை இசைத்தார்கள். டென்மார்க் கலை பண்பாட்டுக் கழகத்தின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இசைக் குழுவினர் தமிழீழ விடுதலைப் பாடல்களை இசைத்தார்கள். 'பேசாத வார்த்தைகள்' என்னும் நவீன நாடகம் அரங்கேறியது. இந்நிகழ்வுகள் அனைத்தும் சிறப்பாக நிகழ்ந்தன.

27-08-1994 ல் தமிழீழ விடுதலைப் புலிகளின் டென்மார்க் கலை பண்பாட்டுக் கழகத்தினர் 'விடுதலை எழுச்சி மாலை' எனும் கலா நிகழ்வு ஒன்றினையும் நடாத்தினர். இந் நிகழ்வில் கரும்புலிகள் பற்றி கவிதைகள், பேச்சுக்கள், நாடகம், இசைநிகழ்ச்சி என்பன இடம்பெற்றன. 'நிலக்கிளி அ. பாலமனோகரன்' அவர்களும் கலந்துகொண்டார். அண்மையில் தமிழீழம் சென்று மண்ணின் யதார்த்தத்தை நேரில் தரிசித்த தனது அனுபவங்களையும், தமிழீழ விடுதலைப் புலிகளின் சிறந்த நிர்வாகத் திறனையும் எடுத்துரைத்தார். மலர்ந்து வருகின்ற தமிழீழத்தைப் பற்றியும் நன்கு விரிவாக எடுத்துரைத்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ்கிளையினரால் 17-09-94 அன்று திலீபனின் ஞாபகார்த்த எழுச்சிவிழா கொண்டாடப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ்கிளைப் பொறுப்பாளர் ந. முரளிதரன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். வில்லுப்பாட்டு, காவடியாட்டம், சிறுவர் எழுச்சி நடனம், தீப நடனம் போன்ற கலை நிகழ்வுகளும் விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் இசை நிகழ்ச்சியும் ' மயக்கங்கள் தெளிந்தால்' எனும் நாடகமும் அரங்கேறியது. மக்கள் அனைவரும் உணர்வோடு ஒன்றித்திருந்த நிகழ்வுகளை எண்ண நெஞ்சு நிறைகிறது. இந் நிகழ்வுகளின் சில காட்சிகளை புகைப்படங்களில் காணலாம்

சுவிஸில் நடைபெற்ற திலீபனின் நினைவுநாள் நிகழ்ச்சியின் போது









தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஜேர்மனியில் நடைபெற்ற திலீபனின் நினைவுநாள் நிகழ்ச்சியின் போது

இன்று உன்னைக் காணும்போது என்னுள் பற்றிக்கொண்டு வருகிறது. மூளாத்தீ போல என்னுள்ளேயே கனன்று கொண்டிருந்த உன்னைப்பற்றிய என் நினைப்புகளெல்லாம் பெருநெருப்பாய் மூண்டு, தீக்கங்குகளாய் என்னுள் அனல் வீசிக்கொண்டிருக்கின்றன.

இன்றும் உனக்கு அதே கதிதானா?

என் உள்ளம் நம்ப மறுக்கிறது.

இன்னும் உனக்குச் சகல கிருத்தியங்களும் செய்யப்படும் என்று நம்பித்தானே அந்த அழகை எல்லாம் காண என்று ஓடி வந்தேன். ஆனால்... இங்கு நடப்பவற்றைக் காணும்போது என் நெஞ்சு படும்பாட்டை என்னவென்று சொல்வேன்.

என்றும் போல இன்றும் உன்முன் நின்று, உன் திருவுருவை என்னுள் வரித்துக்கொண்டு, உன் சர்வ வல்லமையுள் தோய்ந்து என்னையே மறந்தவனாய் இந்தப் பூவுலகின் எல்லை வெளிகளை எல்லாம் கடந்து, அதற்கும் அப்பால்... அதற்கும் அப்பால் எனச் செல்ல விழைகின்ற என் முயற்சியில் இன்று ஆரம்பத்திலேயே தோற்றுப்போய் அநாதரவாய் நிற்கின்றேன்.

# வல்லமை தாராயோ

**த. கலாமணி**

எல்லாமே உன்னால் தான்.

இன்று என் மனம் உன்னில் ஒரு நிலைப்பட மறுத்து உனக்காக இரங்குவதை எப்படி வெளியே சொல்லுவேன்?

"பொல்லுக்கிழவா!"

என் அம்மா உன்னைப் பெயர் சொல்லி இறைஞ்சுவது இன்னமும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

இன்று உனக்கு அணிவித்திருக்கும் பட்டுப் பீதாம்பரத்தைக் காணும் போது உன் ஆஜானுபாகுவான ஆகிருதியே என் கற்பனையில் விரிகிறது.

இந்த உத்தரீயத்துடன் நீ நடந்து செல்லும் அழகை என் மனத் திரையில் காண்கின்றேன்.

பொல்லும் கையுமாய் இந்த உத்தரீயத்துடன் உலாவரும் போது உன் கம்பீரமான நடையின் வேகத்திற்கு நான் மனக்கணக்குப் போடுகிறேன்.

நீ தெய்வமா அல்லது அவதார புருஷனா?

அண்ணன்மார் என்ற பெயர் மருவி உனக்கு அண்ணமார் என்ற பெயர் ஏற்பட்டதாகச் சொல்லிய ஆராய்ச்சி முடிபை அப்படியே ஏற்றுக்கொள்ள என் அகம் மறுத்த வேளையிற்தான் உன் மூலத்தைக் கண்டறியவேண்டும் என்று என் மனம் விழைந்தது.

சிறுதெய்வம் என்று உன்னை ஆராய்ச்சியாளர் குறிப்பிட்டமைக்காக மனம் புழுங்கி, யார் யாரோ எல்லாம் தம் ஆராய்ச்சி முடிபுகளாகக் குறிப்பிட்டவற்றை எல்லாம் வைத்துக்கொண்டு உன் மூலத்தைக் கண்டறிய நான் எடுத்துக்கொண்ட முயற்சிகள் அப்பப்பா!

உன் மூலத்தைக் கண்டறிய வேண்டும் என்ற என் முயற்சியில் ஓர் ஒளிப்பொட்டுத் தெறித்தது போல் என் நினைவில் பிரதிபலித்த என் அம்மாவின் இறைஞ்சுதல், என்



முயற்சியின் ஆரம்பத்துக்கான ஒரு சிறு நம்பிக்கை இழையானது.

"பொல்லுக்கிழவா"

அந்நாளிலே, மூக்குறிஞ்சிக் கொண்டுதிரிந்த பருவத்தில் என் அம்மாவின் சேலைத்தலைப்பைப் பிடித்துக்கொண்டு உன்னை வேடிக்கை பார்க்கையில் உன்னை என் அம்மா இப்படித்தானே பெயர் சொல்லி அழைத்து வணங்கினாள் என்பது திடீரென்று ஞாபகத்துக்கு வந்தபோது, என் அம்மாவின் நினைவுகளை மீட்டு உன்னைப்பற்றி அறிந்துகொள்ள நான் மேற்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்ட எத்தனங்கள்...!

அம்மா என்ன செய்வாள், பாவம்!

நினைவுகள் எல்லாம் மங்கி மறைந்து போன முதுமை நிலையில் எதுவுமே அவளது நினைவுக்கு வர மறுக்கின்றன. நான்தான் விடுவதா யில்லை.

"அண்ணமாரை பொல்லுக் கிழவன் என்றெல்லே சொல்லிக் கும்பிடுறநீ... அது ஏனணை?"

தொலைவை வெறித்து நோக்கி யவளாய் அம்மா மெளனமானாள். அவள் உதிர்க்கப்போகும் வார்த்தை களைக் கேட்க என் காதுகளைக் கூர்மையாக்கிக் கொள்கிறேன்.

"ஆச்சி அப்படித்தான் சொல்லிக் கும்பிடுறவ, மேனை..."

வரலாற்று ஆராய்ச்சி என்றாலே இப்படித்தான் என்பதை உணர்ந்தவ னாக என் முயற்சியில் தொடர் கிறேன்.

"உனக்கு பொல்லுக்கிழவனைப் பற்றி பத்ததி ஏதும் தெரியுமேணை?"

அம்மா ஞாபகப்படுத்த முயன்று தோற்றுப்போய்ச் சொல்கிறாள்;

"எனக்கு ஞாபகமில்லை மேனை...... முந்தி ஆச்சி ஏதோ படிக்கிறவ..."

பத்ததி வரிகளிலிருந்து பொல்லுக் கிழவனைப் பற்றி ஏதாவது அறிய லாமா என்ற என் முயற்சியும் கைகூடாத போதிலும், அம்மாவைப் பேசச் செய்யக் கிடைத்த சந்தர்ப் பத்தை நழுவவிட்டுவிடாமல், மேலும் உற்சாகப்படுத்தி அம்மா வின் நினைவைப் பின்னோக்கி இழுத்துச் செல்ல முயற்சிக்கிறேன்.

அதன் பேறாக, அம்மா விட்டு விட்டுச் சொன்ன விபரங்கள் தான் பொல்லுக்கிழவனின் மூலத்துக்கான அடி ஆதாரங்கள்.

"வல்லிக் கிழவன் பொல்லுக் கிழவனா வந்து ஆடிப்பாக்க வேணும் மேனை, எங்கடை உடம் பெல்லாஞ் சிலிர்த்துப் போகும்"

அம்மா சொன்னவற்றை எல்லாம் கோர்வைப்படுத்தி மீண்டும் நினைத் துப் பார்க்கிறேன்.

வேள்வி ஆரம்பிக்கச் சற்று முன்னரே சூலத்தின் முன்னால் வல்லிக்கிழவன் மெளனமாக இருக் கத் தொடங்கி விடுவாராம்.

சனங்களின் ஆரவாரம் அடங்கி, எல்லோரும் வல்லிக்கிழவனையே பார்த்துக் கொண்டிருக்க, அண்ண மார் சூலத்தை வெறித்து நோக்கிய வாறே வல்லிக்கிழவன் மெல்லத் தலையை முன்னும் பின்னும் அசைத்து, படிப்படியாக உடம்பை யும் அசைக்கத் தொடங்குவாராம். வல்லிக்கிழவனின் அங்க அசைவுக ளெல்லாம் மெல்ல மெல்லச் சனங் களை அண்ணமார் மீது பயபக்தி கொள்ளச்செய்யுமாம். தலை அசைப்பின் வேகத்தை மெல்ல அதிகரித்து, உடம்பை முறிப்பது போல நெளித்து வளைத்து, ஓர் உச்சக்கட்டத்தில் எழுந்து நின்று வல்லிக்கிழவன் உருவந்து ஆடத் தொடங்கி விடுவாராம். சற்றுநேரத் தில் சூலத்தோடு சாத்தி வைத்தி ருக்கும் நீண்ட பொல்லொன்றை ஓடிச்சென்று பாய்ந்து எடுத்து, அதனைச் சிலம்பம் சுழற்றுவது போலச் சுழற்றிக் கொண்டே கோயிலிலிருந்து நான்கு திசைகளி லும் சற்றுத்தூரத்துக்கு ஆடிக் கொண்டே சென்று எதிரிகளையும் விலங்கினங்களையும் விரட்டுவது போலப் பாவனை செய்து திரும்பி வருவாராம். வல்லிக்கிழவனின் ஆட்டத்தை ஒத்த ஆட்டத்தை வேறு ஆட்கள் ஆடியதையும், சின்னப் பருவத்தில் ஆச்சியுடன் கூட இருந்து அம்மா பார்த்திருக்கிறா வாம்.

அந்த ஆட்டத்தைப் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே என்று அங்கலாய்த்து என்மீதே பச்சாத்தாபப் படத்தான் என்னால் முடிகிறது.

ஒரு வேளை, அந்த ஆட்டம் இன்றும் தொடர்ந்து ஆடப்பட்டு வந்திருந்தால் பொல்லுக்கிழவன் பற்றிய செய்திகளும் கடத்தப்பட்டு வந்திருக்கும்.

இந்தத் தொடர்ச்சி ஏன் விடுபட்டுப் போனது?

**புலிகளுக்கு ஆயுதம்**
**தந்தீர்கள்**

**புலிகளுக்கு பயிற்சி**
**தந்தீர்கள்**

**புலிகளுக்குப் பணமும்**
**தந்தீர்கள்**

**பின் பின்வாங்கினீர்கள்**
**புலிகளைக் குறை கூறினீர்கள்**

**'அமைதிப்படை' அனுப்பி**
**அடிவாங்கினீர்கள்**

**நீங்கள் ஆதரித்தால்**
**நாங்கள் ஆதரிக்க வேண்டும்**

**நீங்கள் எதிர்த்தால்**
**நாங்கள் எதிர்க்க வேண்டும்**

**'இந்தியா'**
**'ஜனநாயக நாடு'**
**ஆம்!**
**'ஜனநாயக நாடு'**

**அறிவன்பன் -**
**தமிழ்நாடு.**

இக்கேள்வி என்னுள் ஓங்கி ஒலிக்கின்ற போதே என் தந்தை வழி உறவினர் மீது வெறுப்பாகவும் வருகிறது.

"நூற்றுக்கணக்கான ஆடுகளை யும் கோழிகளையும் வெட்டி வேள்வி செய்கிற அண்ணமார் கோயிற்பக்கமே போகாமல் இருந்த நாங்கள்தான், பகிரதப் பிரயத்தனம் செய்து வேள்வியை நிறுத்தி அண்ணமார் பொங்கலாக்கினம்.

இன்றைக்கு இருக்கிற பாலகண பதி விக்கிரகத்தைக்கூட என்னு டைய சின்னண்ணன், சிவகுரு வாத்தியார்தான் உபகரித்தவர். வதிரி அண்ணமாரிலை சூரன் ஆசாரியார் வேள்வியை நிறுத்திய கையோடை, கவிஞர் அத்தான், சின்னண்ணை எல்லோரும் சேர்ந்து செய்த முயற்சியாலைதான் இன்றைக்கு இந்தக் கோயில் ஆலடிப்பிள்ளையா ராக விளங்குது..."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சோதிடம் சொல்லும் போதே கதையோடு கதையாக கோயில் வரலாற்றையும் ஐயா சொல்லும் போது எனக்கு எரிச்சல், எரிச்சலாக வரும்.

ஒரு சமயம், ஐயாவின் உறவினர்கள் எல்லோரையும் சாடி, உன்னைப் புறந்தள்ளியமைக்காக என் ஐயாவிடம் நியாயம் கேட்ட போதுதான் உனக்கு ஏற்பட்ட நிலைமையையும் என்னால் விளங்கிக் கொள்ள முடிந்தது.

ஆலடிப்பிள்ளையார் கோவிலுக்கு என பரிபாலன சபை ஒன்று அமைத்து, ஆலயத்தை விருத்தி செய்து வந்தவேளையில், கால ஓட்டத்தில், ஆகமவிதிப்படி கோயில் மண்டபங்களையும், கட்டடங்களையும் அமைத்து சுற்றுமதிலும் கட்டி, உட்பிரகாரத்தில் பரிவார மூர்த்தங்களையும் பிரதிட்டை செய்து மகா கும்பாபிஷேகமும் செய்த வேளையில்தான் உனக்கு இந்த நிலை ஏற்பட்டதாம்.

வாத்தியார் - சின்னண்ணை எவ்வளவோ சொல்லியும் அவரின் வாதம் எடுபடவில்லையாம். நீ எல்லைக்காவல் தெய்வம் என்பதால் சுற்றுப்பிரகாரத்துக்கு வெளியிலேயே இருக்கவேண்டும் என்று சொல்லிச் சமாளித்துக் கொண்டார்களாம்.

இன்று முப்பது வருடங்களுக்குப் பிறகு மீண்டும் ஆலயத்தை புனருத்தாரணம் செய்து மகா கும்பாபிஷேகம் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. பிரசித்தம் பெற்ற ஆலயங்களைச் சேர்ந்த பிரபல்யமான குருக்கள் சிலர் அழைக்கப்பட்டு, அவர்களின் மேற்பார்வையில் மகாகும்பாபிஷேகத்துக்குரிய சகல கிரியைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதிகாலையிலேயே தைலாப்பியாங்கம் முடிந்து, யாக பூஜை, ஹோமம், மஹா பூரணாகுதி, தீபாராதனை என்று மகாகும்பாபிஷேகத்துக்கு முன்னர் நடைபெற வேண்டிய அநேக கிரியைகள் நடைபெற்று முடிந்துவிட்டன.

இறுதியாக, தூபி அபிஷேகமும் முடிந்து, மூலவருக்கான மகாகும்பாபிஷேகம் www.tamilarangam.net நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. பிரதம குருக்களே முன்நின்று சகல கிரியைகளையும் செய்து கொண்டிருக்கிறார்.

மூலவருக்கான அபிஷேகம் முடித்து, பரிவார மூர்த்தங்கள் ஒவ்வொன்றுக்குமான அபிஷேகத்தையும் குருக்கள் நேர்த்தியாகச் செய்து கொண்டு வருகிறார். இந்த ஆலயத்தில் நித்திய பூஜை செய்யும் 'சைவம்' பிரதம குருக்களுக்கு 'எடுபிடியாக' அவர் இட்ட கட்டளைகள் சகலவற்றையும் சிரத்தையோடு செய்து வருகிறார்.

நான் உனக்காக அபிஷேகத்தையும், வேத பாராயணத்தையும் எதிர் பார்த்துக் காத்திருக்கிறேன். பிரதம குருக்களின் சுருதி சுத்தமான, கார்வையான ஒலியின் மந்திர உச்சாடனத்தில் உன் உள்ளம் இன்று குளிரப் போகின்றதே என்று என் உள்ளம் உவகை கொள்கின்றது.

பிரதம குருக்களோ, அவருடன் கூட வந்த ஏனைய குருக்கள் மாரோ வெளியே வருவதாகக் காணோம்.

சற்று நேரத்தில், ஆலயத்திற்கு நித்திய பூஜை செய்கின்ற 'சைவம்' உன்னை நோக்கி வந்து, உனக்கான அபிஷேக, தீபாராதனையை முடித்துக் கொள்கிறார்.

மந்திர உச்சாடனத்தில் தெளிவேதுமின்றி, வழமையான முணுமுணுப்பு.

எனக்கு ஆத்திரமாக வருகிறது. அடக்கிக்கொண்டு சைவத்திடமே கேட்கின்றேன்!

"ஐயா, ஏன் அண்ணமாருக்கு மட்டும் அபிஷேகம் செய்ய குருக்கள்மார் வரேல்லை?"

சைவம் தயங்குகிறார். வழிபட வந்தவர்கள் யாவரும் அண்ணமாரை வணங்கித் தூரச் சென்றபின் என் காதருகே குனிகிறார்.

"என்னைச் சொன்னதென்று சொல்லிப் போடாதேங்கோ..... கோயில் நிருவாகியளும் குருக்கள் மாரும் கூடிக்கதைச்சவை.... வேள்வி செய்த தெய்வத்துக்கு குருக்கள்மார் பூஜை செய்கிற வழக்கம் இங்கை யில்லை என்று நிருவாகியள்தான் சொன்னவை..."

என் மேனி நடுங்குகின்றது.

இப்படியுமா?

தெய்வத்திற்குமா ஓரவஞ்சனை?




'சிறுதெய்வம்' என்ற குறியீடு இதைக்குறிக்கத்தானா?

இவற்றையெல்லாம் வகுப்பவர்கள் யார்?

இந்த ஆலயத்திலே கடந்த சில வருடங்களாக நடைபெற்று வருகின்ற நடைமுறைகளை எல்லாம் ஒருமுறை நினைத்துப் பார்க்கின்றேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த ஆலயத்தின் பரிபாலனத்தைத் தொடர்ந்தும் தம் கைகளுக்குள்ளேயே வைத்திருக்க வேண்டுமென்று திட்டம் தீட்டி, இந்த ஊர் மக்களின் பொதுச்சொத்தாக விளங்கும் இந்த ஆலயத்தில் புதிய புதிய நடைமுறைகளையும் புதிய புதிய வழிபாட்டு முறைகளையும் ஆரம்பித்துவைத்து, தங்களையும் தங்களைச் சார்ந்தோரையும் ஞானவான்களாகவும் ஏனையோரை எல்லாம் அறிவீனர்களாகவும் காட்டிக் கொள்ள விழையும் இக்கூட்டத்தினரின் போக்கை நிதரிசனமாகவே காணும்போது என் நெஞ்சம் தகிக்கிறது.

இன்றைய நடைமுறையே தெரியாதவர்களாக, தெய்வங்களிலும் பேதம் கற்பித்துக் கொள்ளும் இவர்கள் என்ன மனிதர்கள்?

பொல்லுக்கிழவா!

என் ஆற்றாமையை எப்படிச் சொல்வேன்.

ரிஷிமூலம், நதிமூலம் என்பது போல உன் மூலத்தையும் என் சிற்றறிவைக் கொண்டு கண்டுபிடித்துவிடலாம் என்று பல்வாறு முயன்றும் தோற்றுப்போய் உன் சர்வவல்லமையுள் தோய்ந்து உன்னிடமே நான் சரணடைந்திருக்கும் போது, உன் நிலைமைக்காக நான் எப்படி வருந்தாமல் இருக்க முடியும்?

உன் சர்வ வல்லமையே இவ்வளவுதானா?

இல்லை. காலம் காலமாக அச்சத்திலும் அறியாமையிலும் வாழ்ந்த மக்கள் கூட்டத்தினரின் இடர் களைந்து, அறிவூட்டி ஆக்கமளித்தவன் நீ.

கொள்ளையரிடமிருந்தும் விலங்கினங்களிடமிருந்தும் அவர்களின் சுதந்திரத்தை மீட்டெடுத்து அவர்களின் சுதந்திர வாழ்வுக்கு வழிசமைத்தவன் நீ.

இதை நன்குணர்ந்ததனால் தான் உன்னையும் உன்னையொத்த அந்த மாவீரர்களையும் காலம் காலமாக அந்த மக்கள் எல்லோரும் 'அண்ணமார்களே' என்று தெய்வங்களாகவே போற்றி வந்திருக்கிறார்கள்.

அந்த மக்கள்தான் உண்மையிலேயே ஞானவான்கள்.

இந்த உண்மையை இன்றைய நடைமுறையிலிருந்தேனும் ஊகித்தறிந்துகொள்ள முடியாதவர்கள் தான் அறிவீனர்... ஞான சூனியங்கள். இவர்கள் ஞானாசிரியர்களாகத் தம்மைக் காட்டிக்கொள்ள முயல்கின்றமையே இவர்களின் மதியீனத்தைத்தான் காட்டுகிறது.

இந்த ஞானசூனியங்கள் சமுதாயத்தையே சீரழித்து விடுவார்களோ என்றுதான் அச்சமாக இருக்கிறது.

பொல்லுக்கிழவா!

நியாயம் தெரிந்தவர்களும் கூட 'தெய்வத்தின் பழி நமக்கேன்' என்று இன்னமுமா மௌனம் சாதிக்க வேண்டும்?

இல்லை.

எம் மௌனம் உடைய வேண்டும். அதற்கு நீ அருள் செய்ய வேண்டும். இந்த மண்ணின் பொய்மைகளை எல்லாம் தகர்த்தெறியும் வல்லமையை நீ எமக்கு ஊட்ட வேண்டும். வேத மந்திரம் உச்சாடனம் செய்து இறைவனை விக்கிரகத்தில் எழுந்தருளுமாறு வேண்டிக்கொள்வது போல உன்னை நான் ஆவாகனம் செய்கிறேன்.

பொல்லுக்கிழவா...!
எம்முள் வருக!
எம்மில் உருக்கொள்க!!
உன் பேரில் சந்நதம் கொள்க!!!

நன்றி: வெளிச்சம்

# செயல்முறை

- நாக. பத்மநாதன் -

**டிக் டிக், டிக் டிக்...**
**சுவர் மணிக்கூடு ஓடிக்கொண்டே இருந்தது.**
**ஒரு வினாடிக்கு ஒரு 'டிக்' என அது**
**ஓடிக்கொண்டே இருந்தது.**
**கணக்கிட்டேன்.**
**இவ்விதம் ஒரு நிமிடத்திற்கு அது**
**காட்டவேண்டிய ஒலி -60**
**ஒரு மணித்தியாலயத்திற்கு? இந்த அறுபதை**
**அறுபதால் பெருக்க - 3600**
**ஒரு நாளுக்கு? இதனை 24 ஆல் பெருக்க -**
**86,400**
**அப்படியானால், 365 நாள்கொண்ட ஒரு**
**வருடத்தில் இதைப் பெருக்கிப் பார்க்க**
**வந்தது - 3,15,36000!**
**அப்பாடா! மூன்று கோடியே பதினைந்து**
**இலட்சத்து முப்பத்தாறாயிரம் வினாடி**
**அல்லது ஒலி!**
**இது முடியுமா?**
**மணிக்கூட்டின் சிறு சிரிப்புக் கேட்டது.**
**"என்னால் முடியும்" என்றது அது.**
**"எவ்விதம்?"**
**"நான் கூட்டிப்பார்ப்பதில்லை, வரவரச்**
**செய்வேன்"**
**மனிதர்களைப் போல, வருங்காலத்தைக்**
**கூட்டிப்பார்த்து நான் ஏங்குவதில்லை.**
**ஒரு வினாடிக்கு ஒரு 'டிக்' மட்டுமே நான்**
**செய்வது.**
**"இது என்னால் சுலபமாய் முடியும்"**
**ஏங்கிநின்ற என்னைப்பார்த்து அது மீண்டும்**
**கூறிற்று-**
**"மனிதனே! நீ செய்ய இருப்பதையெல்லாம்**
**வீணே கூட்டிப் பார்க்காதே! வரவர**
**ஒவ்வொன்றாய் தெளிவோடு செய்.**
**எவ்வளவையும் செய்ய உன்னால் முடியும்."**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கதவுகள் திறக்கும் காவலரணங்கள் கைகுலுக்கும் பேசலாம் வருக!

## உலைக்களம்

வியாசன்

வணக்கம் வருக !
தமிழீழம் வரவேற்கிறது.
மானுடத்தை நேசிக்கும் மனிதர்களுக்கு
எங்கள் எல்லைக் கதவுகள் என்றும் திறந்திருக்கும்.
காவலரணங்கள் கைகுலுக்கும்.
எத்தனை தடவைகள் எடுத்துச் சொல்லிவிட்டோம்.
சிறீலங்காவே !
நீ பக்கத்து நாடேதவிர, பகைநாடல்ல...
உன்னையே ஒருமுறை உற்றுப்பார்த்து
ஒரு கேள்வியைக் கேட்டுப்பார்.
ஒன்றாக இருந்ததை உடைத்தது யார்?
சிங்கள தேசமென்றே திசைகள் எதிரொலிக்கும்
எமது கவிஞர்களின் பழைய கவிதைகளைப்
படித்துப் பார்,
உடைத்தது யாரென்ற உண்மை தெரியும்.
"மகாவலி கங்கை நாடெங்கள் நாடே"
"ஈழ மண்டல நாடெங்கள் நாடே"
"சிங்களமும் செந்தமிழும் சேர்ந்திலங்கும் திருநாடு"
நேற்றுவரை எமது கவிஞர்களின் நெஞ்சத்துடிப்புகள்
இப்படித்தானே துடித்தன.
தென்னிலங்கைச் சிம்மாசனங்கள்தானே
இந்தவரிகளை இல்லாதொழித்தன.
உறவில் உதிரத்தைச் சொரியவைத்தன.
"மாங்காய் வடிவிலான மரகதத்தீவு"
"சுற்றிவரக் கடல் சூழ்ந்த சுந்தரபூமி"
பழைய 'பாலபோதினி'யில்
நாங்கள் பாடிய பாடல்வரிகளின்
குரல்வளையை நெரித்துக் குதறியது யார்?
மூன்று 'பிரதமர்களைக்' கொண்ட குடும்பம்தானே
'தேசியத்துக்கு' முதலில் தீ மூட்டியது.
காதைப் பிடித்திழுத்து
கடுக்கன் பூட்டிய துவாரத்தை தேடியபோதுதான்;
உறவுப்பாலம் முதலில் உடையத் தொடங்கியது.
இன்று; "இனப்பிரச்சினையைப் பேசித்தீர்ப்போம்"
என்றெல்லாம் பேசுகிறீர்களே !
நன்றி.
சமாதானத்தின் கதவுகளை ஒட்டமூடியது யார்?
யார்? யார்?
உரத்துக் கேட்டுப் பாருங்கள்.
சிவனொளிபாத மலையின் சாரலில் உங்கள்
பெயர்களே எதிரொலிக்கும்.
களனி கங்கையின் கரைகள் எங்கும்
மூங்கில் மரங்கள் உங்கள் முகத்துக்கு கைநீட்டி
நீங்களென்றே குரலெழுப்பும்.
பாணந்துறையில்
கோவில் குருக்களின் பச்சை ரத்தம்
பாய்ந்தபோதே
சிங்களம் கண்களைத் திறந்திருந்தால்...
இந்த வில்லங்கம் வந்திருக்க மாட்டாது.
சுருட்டுக்கடைகளுக்குத் தீமூட்டியபோது
உங்களில் ஒருத்தனுக்காவது
தமிழனும் மனிதனாகத் தெரிந்திருந்தால்....
ஆலமரத்தின் விழுதுகள் அறுந்து
ஆணிவேரே ஆடியிருக்கமாட்டாது.
இன்றுகூட என்னவாம்?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்மையின் உயர்நிலை தெரியவில்லையே!
சலுகைகளைத்தானே உரிமைகள் என்று
தப்புக்கணக்குப் போடுகிறீர்கள்.
வடக்கும் கிழக்கும்,
இணைப்பும் பிரிப்பும்
எங்களுக்கு எதுவுமே புரியவில்லை.
வடக்கும் கிழக்கும்
பழைய இலங்கையின் பிரதேசங்கள் என்று
உறுதி எழுதுவதை உதறித்தள்ளுங்கள்.
"தமிழரின் தாயகம்" இது என்பதை
ஏற்றுக்கொள்ளுங்கள்.
பேச்சுக்களில் பிரச்சினையே இருக்காது.
பிரபாகரன் ஒரு தனிமனிதனின் பெயரல்ல.



எமது தேசிய விழிப்பின் தோற்றுவாய்
சலுகைகளுக்குத் தட்டேந்திய வரலாற்றை
உரிமைதேடும் திசையில் திருப்பிய காலத்தின்
கல்லணை.
தென்றலின் சிறுகால்களில் கூட
புயலின் வேகத்தைப் பூட்டிய பிதாமகன்
பிரச்சினைகளின் மையப்புள்ளியைப் புரிந்துகொண்டு
பேசவருபவர்களே! வருக!
பிரபாகரனின் கைகள் வரவேற்கும்.
வடக்கு என்பது வடதமிழீழம்
கிழக்கு என்பது தென் தமிழீழம்
இணைக்கும் இடமே இதயபூமி
பிரிப்பதென்ற பேச்சுக்கே இடமில்லை.
நாங்கள் தெளிவாக இருக்கின்றோம்.

உறுதிக்காணிக்காரர் உட்கார்ந்திருக்க
வாடகைக் குடியிருப்பாளர்கள் வழக்காடுகின்றனர்.
எங்கள் மண்ணை இணைப்பதற்கும், பிரிப்பதற்கும்
உங்களுக்கு என்ன வாக்கெடுப்பு?
தாய்க்கு நிகரானது தாயகம்.
கையளவு மண்ணைக்கூட அள்ளுவதற்கு
அனுமதியோம்.
சிங்களவர் தலதா மாளிகைக்குள்
இனிமேல் போகலாமா என்று
சர்வசன வாக்கெடுப்பு வைத்தால்
உங்களுக்கு எந்தளவு கோபம் வரும்.
கண்டியும் களுத்துறையும் இணைந்திருப்பதற்கு
தேர்தல் வைத்தே முடிவெடுப்பதெனில்
சிங்களவர்கள் சீறமாட்டார்களா?
அந்தளவு கோபமே எங்களுக்கும்
கோபத்தின் நியாயத்தைப் புரிந்துகொண்டு;
இறந்தகாலத்தை எரித்துவிட்டு,
திறந்தமனதோடு வாருங்கள்.
விடுதலைக்காக விலைகொடுத்து நிற்பவர்களிடம்
சலுகைகளை கிள்ளி எறிந்து
ஈகைச் சுடரேற்றும் எங்கள் மண்ணை
இனியும் ஏமாற்றலாமென்று நினையாதீர்.
"போர் என்றால் போர்
சமாதானம் என்றால் சமாதானம்"
சொன்னவர் இன்னும் சாகவில்லை.
உங்களுடன்தான் உள்ளார்.
அதையே நாங்களும் சொல்லுகிறோம்
மானத்தோடு தமிழன் வாழ்ந்தான் என்று
ஒரு வரலாறு வேண்டும்.
இல்லையேல்
வீரத்தோடு போராடி வீழ்ந்தான் என்று
ஒரு சரித்திரம் வேண்டும்.
இதுவே எங்கள் இறுதி முடிவு.
நாங்கள் தெளிவாகவே இருக்கின்றோம்.
ஹொந்தாய் மல்லி!
ஆய்போவன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கவிஞர் இ. முருகையன் அவர்களுடன் நேர்காணல்

நேர்முகம் - கருணாகரன்



கவிதை, விமர்சனம், நாடகம் என செயற்பட்டு வரும் கவிஞர் முருகையன், 1935ஆம் ஆண்டு சாவகச்சேரியைச் சேர்ந்த கல்வயலில் பிறந்தவர். அறிவியலிலும் கலையிலும் கல்வி இயலிலும் பட்டங்களைப் பெற்றவர். ஆசிரியர். அறிவியல் நூல் மொழிபெயர்ப்பாளர். தமிழ்மொழிப் பாடநூல் முதன்மைப் பதிப்பாசிரியர். கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகளை வகித்தவர். இப்பொழுது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பதிவாளராய் உள்ளார். மிக நீண்டகாலமாக தமிழர் உரிமைகள் கிடைக்க வேண்டுமென்ற அக்கறையுடன் செயற்பட்டவர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத்திற்காக குரலெழுப்பி வருபவர்.

இவர் எழுதி வெளியிட்ட நூல்களுள் 'ஒரு வரம்' என்பது சில ஆங்கிலக் கவிதைகளைத் தமிழாக்கம் செய்து தொகுத்தது. 'நெடும் பகல்', 'ஆதிபகவன்', 'அது அவர்கள்', 'மாடும் கயிறுகள் அறுக்கும்', 'நாங்கள் மனிதர்' என்பன கவிதை நூல்கள். 'வந்து சேர்ந்தன-தரிசனம்', 'கோபுர வாசல்', 'வெறியாட்டு', என்பன நாடகங்கள். 'ஒரு சில விதி செய்வோம்', இன்றைய உலகில் இலக்கியம்' என்பன இலக்கியத் திறனாய்வு நூல்கள். 'கவிதை நயம்' என்பது பேராசிரியர் க. கைலாசபதியுடன் சேர்ந்து எழுதியது. இவை தவிர, மேடைக்கெனவும் பல நாடகங்கள் எழுதியுள்ளார்.

★★ தாங்கள் இலக்கியத்துறையில் ஈடுபடுவதற்கு தங்களுடைய காலமும் சூழலும் எவ்வாறு காரணமாயின என்பது பற்றிக் கூறுங்கள்:


✱✱ ஆரம்பத்தில், இலக்கியம் படைக்கிறேன் என்ற உணர்வு எனக்கு இருந்ததில்லை. ஆனாலும் எதையாவது எழுதுவேன். என்னுடைய தந்தையார் ஒரு ஆசிரியர். அவரிடம் நிறைய நூல்கள் இருந்தன. அவை பெரும்பாலும் பாட்டு நூல்கள். நான் அவற்றை எடுத்துப் படிப்பேன். இப்படிப் படிக்கும் போது அந்தப் பாடல்களின்பால் ஒரு வகையான ஈர்ப்பு உண்டாயிற்று. ஒரு கட்டத்திலே, என்னாலும் பாட்டியற்ற முடியும் என்ற துணிவு எனக்கு ஏற்பட்டது.

நான், முதலிலே சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் பின்னர் யாழ். இந்துக் கல்லூரியிலும் படித்தேன். யாழ். இந்துவில் படிக்கும் வேளை 'இந்து இளைஞன்' என்ற பாடசாலைச் சஞ்சிகைக்கு என்று ஒரு சிறுபாட்டை இயற்றினேன். நான் எழுதியது எட்டுவரிப் பாடல். அது காந்தியடிகளைப் பற்றியது. ஆனால், அந்த இதழில் அது வெளிவரவில்லை. (பின்னர் ஒரு சமயம் அந்தக் கவிதையின் கையெழுத்துப் பிரதியைத் தந்தையார் கண்டபோது "இதை எழுதியது யார்?" எனக் கேட்டு, நான் என்று அறிந்ததும் மிகவும் பாராட்டினார்.)

யாழ். இந்துவில் நானும் கைலாசபதியும் ஒரே வகுப்பில் படித்தோம். பண்டிதர் க. செல்லத்துரை அவர்களும் வித்துவான் கார்த்திகேசு அவர்களும் தமிழ் ஆர்வத்தை ஊட்டி நம்மை வளர்த்தனர். க. சிங்காரம், நடனசபாபதி சர்மா முதலிய நண்பர்களும் எமது எழுத்துலக ஈடுபாட்டுக்குத் துணைநின்றனர். அப்பொழுது தொடக்கமே நம் ஆக்கங்கள் பத்திரிகைகளில் வெளியாகத் தொடங்கிவிட்டன.

1953 இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானம் படிக்கும் பொருட்டு கொழும்பு சென்றேன். அந்த நாட்களிலேயே பத்திரிகை உலகுடன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



www.tamilarangam.net

தொடர்புகள் அதிகமாயின. 'சுதந்திரன்', 'வீரகேசரி', 'தினகரன்' என்பவற்றில் என் ஆக்கங்களும் வெளியாயின. ஈழகேசரியின் கொழும்புப் பிரதிநிதியாக செய்திக் கட்டுரைகளையும் கலை விமர்சனங்களையும் எழுதிக் கொண்டிருந்தேன். பின்னர் 'கலைமகள்', 'அமுத சுரபி', 'கல்கி' போன்ற இதழ்களிலும் அவ்வப்போது என் கவிதைகள் சில தலைகாட்டின.

**★★ உங்களுடன் இலக்கிய நண்பர்களாகச் செயற்பட்டவர்கள் பற்றி.....**

✷✷ மகாகவி, கைலாசபதி, சிவத்தம்பி, சில்லையூர், புதுவை ஆகியோர் இலக்கியத்துறையில் எனக்குப் பிரியமானவர்களிற் சிலர். என்னுடைய இலக்கிய ஈடுபாட்டிலும் வளர்ச்சியிலும் அவர்கள் பெரிதும் உதவினர். 1953, 54 இல் என நினைக்கிறேன், "மகாகவி"யின் தொடர்பு கிடைத்தது. அவரை முதன் முதல் அவரது அலுவலகத்தில் சந்தித்தேன். காலநேரமின்றி இலக்கியம் பற்றியே பேசுவோம். எனக்கு இயல்பாகவே கூச்ச சுபாவம். அவருடைய அலுவலகத்தில் இப்படி மணிக்கணக்காக இருந்து கதைப்பதா என எனக்குச் சங்கடம். ஆனால் "மகாகவி" வேலைகளையெல்லாம் விரைவாக முடித்து விட்டு நீண்ட நேரமாகப் பேசிக்கொண்டிருப்பார். பல விடயங்களைப் பற்றிப் பேசுவோம். புதிய கருத்துக்கள், புதிய முயற்சிகள் பற்றிச் சிந்திப்போம். "மகாகவி" இரவு, பகல், வீடு, வெளி எங்கும் எப்போதும் கவிதைபற்றிச் சிந்தித்தவர். கவிதைக் கலைக்காகவே தம்மை முழுமையாக அர்ப்பணிக்கும் ஆழ்ந்த ஈடுபாடு அவருக்கிருந்தது. படைப்பு மனநிலை என்பதை எங்கள் உரையாடல்கள், சந்திப்புக்கள், அனுபவங்கள் மூலமாக வளர்த்துக்கொண்டோம். "மகாகவி"யின் கவிதைப் போக்கும், என்னுடைய கவிதைப் போக்கும் அடுத்த கட்டங்களுக்கு நகர்ந்தன. நமது சந்திப்புகளும் விமர்சனங்களும் கலந்துரையாடல்களும் புதிய பல விளக்கங்களுக்கும் கண்டுபிடிப்புக்களுக்கும் காலாயின. அந்தக் கொடுக்கல் வாங்கல்களினால் இருவரும் நன்மையடைந்தோம்.

**★★ ஈழத்துக் கவித்துறையின் முக்கியமானவர்களில் ஒருவராகத் தங்களைக் கருதுகிறோம். எனவே தமிழ்க் கவிதையின் பரிமாணத்தையும், பரிணாமத்தையும் இன்றைய செல் நெறியையும் பற்றிச் சொல்லுங்கள்?**

✷✷ புதுக்கவிதை, மரபுக்கவிதை என்பது பிழையான பிரிப்பு. யாப்புக்கவிதை, யாப்பில்லாக் கவிதை என்று சொல்லலாம். "யாப்புக்கமையவும் யாப்பறுத்தெறிந்தும் பாக்கள் பிறக்கலாம், பைந்தமிழ் சிறக்கலாம்" என்பதே எனது நிலைப்பாடு. தமிழ்க் கவிதையின் பரிமாணம் என்று சொன்னால் 'சான்றோர் கவிதை' என்ற சங்ககாலக் கவிதைகளில் ஓசையமைவு உண்டு. பிறகு காலத்தோடு ஒட்டிப் பல மாற்றங்கள் நிகழ்ந்து வந்துள்ளன. உண்மையில் பழங்காலப் படைப்புக்களைப் பொறுத்த வரையில் இசைப்பாட்டு, இயற்பாட்டு என்ற பேதங்கள் இருக்கவில்லை. சமூகநிலை மாற்றங்களுடனேயே தமிழ்ச் செய்யுள் இசைப்பாட்டாகவும் இயற்பாட்டாகவும் பிரிந்துள்ளது என்று சொல்லவேண்டும். இவை இரண்டும் சந்தித்தும் பிரிந்தும் வந்துள்ளன. ஓர் இயங்கியல் முறையிலேயே இந்த வளர்ச்சி நிகழ்ந்துள்ளது. இப்போதுள்ள பிரிவு (இசை- இயல்) நிரந்தரமானது என்றும் எதிர்வு கூறமுடியாது.

யாப்புக் கவிதையில் அமைந்திருக்கின்ற தேவையில்லாத, நலிவுபடுத்தக்கூடிய பண்புகளைத் துறக்கும் போது அது புதுக்கவிதைக்கு வந்து சேருகிறது.

யாப்பில்லாத கவிதையானது யாப்புக்கவிதைகளின் சில பண்புகளை உள்வாங்கிக்கொண்டு பிறிதொரு கட்டத்துக்கு வந்து சேரும்போது புதியதொரு சங்கமம் உண்டாகும். இன்று சொல்லப்படும் படிமம், குறியீடு, ஒத்திசையென்றவையெல்லாம் முன்னரே இருந்திருக்கின்றன. ஆனால் அவற்றுக்குக் கொடுக்கப்பட்ட அழுத்தங்களும் முக்கியத்துவமும் இப்போதுள்ளதைப் போல இருக்கவில்லை.

இனிவரும் காலங்களில் யாப்பிலாக் கவிதையில் இப்போது மேலோங்கியிருக்கின்ற சில கூறுகள் பயனற்றவையென்றோ, அறியாமையின் பாற்பட்டவையென்றோ ஆகிவிடும். ஒரு வளர்ச்சி வரலாற்று இயக்கத்தின்படி இந்தச் சுழற்சி இசைந்தும் பிரிந்தும் செல்லும். அப்படிப்பட்ட கூறுகளில் ஒன்று, தமக்கும் விளங்காமல், பிறர்க்கும் விளங்காமல் எழுதுகின்ற போக்கு. இன்று இது சில கவிஞர்களிடமுண்டு. இதனை இருண்மை என்றும் சொல்லுகிறார்கள். இந்த இருண்மை வருங்காலத்திலே நிராகரிக்கவும் படலாம். பழமையும், புதுமையும் ஒன்றையொன்று அணுகிக் கொண்டிருக்கின்ற இயக்கம் முழுமை பெறாதபடியால் தடுமாற்றங்கள் இருக்கின்றன. காலப்போக்கிலே தெளிவு ஏற்படும்.

**★★ கவிதைத் துறையிலே நீங்கள் அதிகமான ஈடுபாட்டைக்காட்டிய போதும் நாடகம், விமர்சனம், அறிவியல் சார்ந்த பிற துறைகளிலும் தங்களைக் குறிப்பிடத்தக்களவு அடையாளப்படுத்தியுள்ளீர்கள். இன்றைய கலை, இலக்கியப் போக்குகளில்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**இத்துறைகளின் வளர்ச்சி எத்தகையதாகக் காணப் படுகின்றது ?**

✱✱ எந்தக் கவிதையுமே ஒரு நாடகம் என்று நாம் எடுத்துக்கொள்ளலாம். கவிஞனின் 'நான், நான்' என்று வரும் குரல் ஒரு பாத்திரத்தின் குரலாகவே காணப் படுகிறது. 'நான்' என்பது தனியானதல்ல. ஒரு தனியாளின் உணர்வு கலைகளில் பெறுமதி வாய்ந்த தாக வருவது எப்படி? அந்த உணர்வு பல தனியாட்களின் உணர்வுகளைத், தழுவியதாகவும் ஒரு பொதுமைப் பண்பு வாய்ந்ததாகவும் அமைகின்றது. இதைத்தான் இலக்கியத்தில் 'வகைமாதிரி' என்று குறிப்பிடுகிறார்கள். கவிதை என்பதே பாத்திரங்களின் கூற்றுத்தான். பெரிய கவிதைகளை எழுதும்போது பல்வேறு பாத்திரங்கள் வருகின்றன. இவைகள்தான் நாடகங்களின் வித்துக்கள். இந்த வகையாக என்னு டைய கவிதையிலே ஏற்பட்ட வளர்ச்சிதான் நாடகம் எழுதவேண்டும் என்ற உந்துதலாக வந்தது. திருவானைக்காவைச் சேர்ந்த கலைவாணன் போன்ற கலைஞர்கள் கவிதை நாடகங்களை இயற்றினர். அவை வானொலியில் ஒலிபரப்பானதும் உண்டு. இளமைக் காலத்தில் அந்தக் கவிதை நாடகங்களைக் கேட்ட அருட்டுணர்வினாலே நானும் சில நாடகங்கள் எழுதத் தொடங்கினேன். மேற்கு நாடுகளிலே பல கவிதை நாடகங்கள் இலக்கியக் கலையின் உச்சத்தைத் தொட்டு சிறந்திருக்கின்றன. தமிழிலும் இந்தவிதமான முயற்சிகள் நடக்கவேண்டும் என்ற ஆர்வம் எனக்குண்டு.

விமர்சனத்தைப் பற்றி இனிச் சொல்லுகிறேன். ஆக்கமொன்றைச் செய்யும்போது, அதை யாரோ நுகரவேண்டும். இப்போதுள்ளதை விடக் கூடிய தரத்திலேதான் புதிய ஆக்கங்களை நாம் செய்ய வேண்டும். புத்தாக்கங்களை நாங்கள் நுகர்ச்சியா ளர்களுக்கு அறிமுகப்படுத்தவேண்டும். பரிச்சயப்படுத்த வேண்டும். வாசகர்களைப் படைப்பாளியிடம் அழைத்துச் செல்வதுதான் விமர்சனத்தின் பணி. படைப்பாளியும் வெறுமனே கற்பனையில் இருந்து படைக்கமுடியாது. படைப்பாளி விமர்சகனின் உதவியுடன் வாசகனையும் தன்னோடு அழைத்துச் செல்லவேண்டும்.

எனது 'நெடும்பகல்' இந்த வகையில் முன்னு தாரணம் எதுவுமே இல்லாத புத்தம் புதிய படைப்பு. அதனை இன்னும் சரியாக எவரும் மதிப்பிடவில்லை. இவ்வாறே நானும் "மகாகவி"யும் இணைந்து எழுதிய 'தகனம்' சரியான ரீதியில் விமர்சிக்கப்படவில்லை.

அறிவியல் பற்றியும் கேட்டீர்கள். எனது முதலாவது பட்டப்படிப்பு விஞ்ஞானத்துறை சார்ந்தது. இதனாற் போலும் எனது கலைப்பார்வையும் விஞ்ஞான நோக்கினதாகவே அமைகின்றது. எனது தொழிலும் அதனுடன் தொடர்புபட்டிருந்தது. விஞ்ஞானப் பாடத்தை மொழிமாற்றம் செய்வது, விஞ்ஞானக் கலைச்சொற்களை ஆக்குவது என்ற வகையிலே என்னுடைய தொழில் கல்வி வெளியீட்டுத் திணைக்




களத்தில் அமையலாயிற்று. விஞ்ஞானம் படித்தவன் என்ற முறையிலே, விஞ்ஞான வளர்ச்சி, மாற்றம் என்பவற்றை அவதானித்து வந்துள்ளேன். பண்பாடு என்னும் பொழுது அரசியல், தத்துவம், தொழில்நுட்பம் இவையெல்லாம் இணைந்தே இருக்கவேண்டும் எனக்கருதுகிறேன். தனியே கலையும், இலக்கியமும் மட்டும்தான் பண்பாடு என மயங்குவது தவறாகும். விஞ்ஞானத்தையும் தொழில்நுட்பத்தையும் நடைமுறை வாழ்க்கையிலும் சிந்தனை நெறிகளிலும் சேர்த்துக் கொள்ள வேண்டும். பண்பாடு என்று வரும்பொழுது விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் மிகமுக்கியமான கூறுகளாக அதில் அடங்கியிருக்க வேண்டும். எனது சமூகப் பார்வையும் இதையொட்டியே இருக்கின்றது.

★★ **இது உரைநடை யுகம் என்று சொல்லப்படுகின்றது. இதை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா? ஏற்றுக்கொள்வதாக இருந்தால் எந்த அடிப்படையில்? இல்லையெனில் உங்கள் கருத்து என்ன? கவிதையின் இடம் எது?**

✱✱ மொழி எத்தனையோ நோக்கங்களுக்காகப் பயன்படுகிறது. அந்த நோக்கங்களுக்கமைய அதனு டைய அமைப்பும் வேறுபடுகிறது. நிகழ்கால வாழ்க்கை யின் பல்வேறு நோக்கங்களுக்கும் உரைநடைதான் ஊடகமாக இருக்கின்றது. அந்த வகையில் இது உரைநடை யுகம் என்று கொள்வது மிகவும் பொருத்த மானது. அதே நேரத்தில் கவிதையோ கலைத் துறைக்குரியது. மொழிவாயிலாக வெளிப்படும் கலைகளில் கவிதை நீண்ட வரலாற்றையும் தலைசிறந்த இடத்தையும் பெற்றிருக்கிறது. ஆனால் முற்காலத்தில் இருந்ததைப் போல எல்லா அறிவு நூல்களையும் (மருத்துவம்- சோதிடம் போன்றவை அனைத்தையும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாட்டாகவே எழுத வேண்டும் என்ற தேவை இப்பொழுது இல்லை. பண்டைக்காலத்திலே சோதிடம், கணிதம், மருத்துவம், இலக்கணம் உட்பட்ட சித்தாந்தங்கள் சாத்திரங்கள் அனைத்துமே சூத்திர வடிவில் பாட்டுக்களாக இயற்றப்பட்டன. இவ்வித நோக்கங்களுக்கு இன்று கவிதை பயன்படாது. ஆனால் கலைப்படைப்பு என்ற வகையில் சொற்களின் அரசியாக, கவிதை இன்றும் வளர்ந்து வருகின்றது.

**★★ இன்றைய இளந்தலைமுறையின் இலக்கிய முயற்சிகள் பற்றிய உங்கள் கருத்துக்கள் என்ன?**

✵✵ இலக்கிய முயற்சிகளில் மிகுந்த ஆர்வம் இப்பொழுது இருக்கின்றது. நேரடியாக அனுபவங்களை அடிப்படையாகக்கொண்டு படைப்புக்கள் அமைய வேண்டும். உதாரணமாக லெஸ்றர் ஜேம்ஸ் பீரிஸின் திரைப்படங்கள் வாழ்க்கையையே பேசுகின்றன. அல்லது மாட்டின் விக்கிரமசிங்ஹவின் 'கம்பரெலிய' என்ற நாவல் வழ்க்கையை நேரடியாக எவ்விதமான இடையீடுமின்றிச் சித்தரிக்கின்றது. அதனால் அவை சிறந்த படமென்றும் சிறந்த நாவலென்றும் பாராட்டப் படுகின்றன. ஆனால் ஒரு படம் வாழ்க்கையின் பிரதியின் பிரதியின் பிரதியின் பிரதியாக இருந்தால் எவ்வாறு சிறப்பாக முடியும்? ஆகவே கலைஞர்கள் நிகழ்கால அனுபவங்களை அடிப்படையாகக்கொண்டு, தமக்கு ஏற்ற உத்திகளைத் தாமே படைத்துக்கொண்டு கலையாக்கத்தில் ஈடுபட்டால் அவை சிறந்தனவாக அமையும். இன்றைய இளந்தலைமுறையினர் நடப்பியல் வாழ்க்கையில் மிகவும் நெருக்கமான அக்கறையுடையவர்களாக இருப்பதை நாங்கள் பார்க்கின்றோம். ஆகையால் அவர்களின் படைப்புகளில் உயிர்ப்புள்ள பல அம்சங்கள் நிறைந்துள்ளன. தங்கள் திறைமைகளை அவர்கள் சரியாக அடையாளம் கண்டுகொண்டால் இன்னும் உயரிய சிகரங்களை அடையலாம்.

**★★ வளர்ந்து உச்சத்தைத் தொட்டு நிற்கின்ற தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றியும் போராட்ட இலக்கை நோக்கி நகர்த்தப்படுகின்ற படைப்புகள் பற்றியும் அவற்றின் வலு பற்றியும் கூறுங்கள்?**

நான் இலக்கியத்தை அடையாளம் கண்டு மக்களுக்காக அவற்றைப் படைக்கத் தொடங்கிய காலத்திலிருந்தே சமூக அக்கறை கொண்டவனாக இருக்கின்றேன். தமிழர் விடுதலைக்கான எண்ணங்கள் கிளம்பத் தொடங்கிய காலத்திலிருந்தே அதாவது 1956க்கு முன்பிருந்தே தமிழர் உரிமைக்காகப் பாடிவந்திருக்கிறேன். அப்போது 'சுதந்திரனி'லும், 'ஈழகேசரி'யிலும், 'தேன்மொழி', 'இனமுழக்கம்', 'அல்லி' முதலான பிற ஏடுகளிலும் எழுதியுள்ளேன். பின்னர் தமிழரசுக் கட்சியின் சில போக்குகளும் செயல்களும் வேறு விதமாக மாறின. அந்தப் போக்குகளை விமரிசனம் செய்து 'யாத்திரை பல வகை', 'வெட்கம் கொள்ளுக' போன்ற கவிதைகளில் எனது உணர்வை வெளிப்படுத்தியிருக்கிறேன். பின்னர் எனக்குச் சமதர்மக் கொள்கையில் இருந்த பிடிப்பு வலிமை பெற்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் இடது சாரிகளுடனான எனது தொடர்பு அதிகமாயிற்று. ஒரு கட்டத்திலே, இடதுசாரி இயக்கம் பிளவுபட்டது. எழுத்தாளர் இயக்கத்திலும் விரிசல் ஏற்பட்டது. ஒன்றிணைக்கப் பாடுபட்டார்கள். ஆனால் இணைக்கமுடியவில்லை. இன்று எம்மைச்சுற்றி நடக்கின்ற நிகழ்ச்சிகளிலிருந்து எவ்வாறு நாம் ஒதுங்கமுடியும்? இப்பொழுது இங்கே நடந்துகொண்டிருக்கும் முக்கிய நிகழ்ச்சி விடுதலைப் போராட்டம்; விடுவிப்பு வேள்வி; மொழியின் பேராலும் இனத்தின் பேராலும், மதத்தின் பேராலும் மேலாண்மை கொள்ளவேண்டும் என்ற அநீதிக்கெதிரான இயக்கம். அதன் அடியாக எழும் எண்ணங்களும் உணர்வுகளும் நமது படைப்புக்களில் இடம்பெறுவது இயல்புதான். அது மாத்திரமல்ல, அவ்வண்ணம் அமைவது இன்றியமையாததும் கூட. இதற்கு உதவாத எழுத்து எதற்கு உதவப்போகிறது?

**★★ இன்றைய எமது காலச்சூழலில் ஒரு படைப்பாளியின் முக்கிய பங்களிப்பு எப்படி அமைய வேண்டுமென நீங்கள் கருதுகிறீர்கள்?**

✵✵ இன்றைய சூழலை அவதானித்து அதன் மெய்த்தன்மையை பிரதிபலிக்கும்படி ஒரு படைப்பாளி படைப்பில் ஈடுபடுதல் வேண்டும். இதழ்களில் எழுதுவது, நாடகம், கவியரங்கு முதலான மேடை நிகழ்ச்சிகளை வழங்குவது ஆகிய முயற்சிகள் அனைத்தும் அவசியம். இதழ்களையும் நூல்களையும் வெளியிடுவதிலே இன்று எவ்வளவோ சிரமங்கள் உண்டு. ஆனாலும் நாமெதையும் செய்யாமல் சும்மா இருக்கவில்லை. இந்த மட்டுப்பாடுகள் இருப்பினும் செழிப்பாகப் பல நிகழ்வுகள் நடக்கின்றன. கவியரங்குகள் மூலம் பல விடயங்களை தாக்கமாக மக்கள் முன் வைத்திருக்கிறோம். கவியரங்கின் வெற்றி ஒரு நிறுவனமாகியுள்ளது. முந்திய கவியரங்குகளை விட இன்றைய கவியரங்குகள் காத்திரமாக அமைகின்றன. புதியவர்களின் மனப்பதிவுகள் அதிகமதிகமாக துலங்கி ஒளிர்கின்றன. நாடகங்களில் ஆடல் பாடல்கள் இப்போது முக்கியம். முன்னர் சொல்தான் பிரதானம். இப்பொழுது நடிப்பவர்களுக்கு ஆடல் உடற்பயிற்சி கொடுப்பது போல், சொற்களை தெளிவாக உச்சரிப்பதற்கும் பயிற்சி அளித்தல் வேண்டும். இந்தப் பயிற்சி இன்மையால் நாடகங்கள் முழுமையாக மக்களிடம் சென்று சேர்வதிலே தடங்கல்கள் நேர்கின்றன. இது விரும்பத்தக்கதல்ல. ஒரு படைப்பாளி இவற்றிலெல்லாம் கவனம் செலுத்துதல் நல்லது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உயிர்ப் பூக்கள்


இந்தப் பூமி இசைக்கின்ற பூபாளம் உலகிற்கு ஒரு நாள் கேட்காமற்
போகாது. நேயம் தானே உயிர். உயிருக்கு அதுதானே அழகு.
மண்ணில் எல்லாமும் ஏதோ ஏதோ எல்லாம் பேசுகிறது. விடுதலைச்
சூரியனை வரைந்த ஓவியர்களின் கல்லறைகளைச் சுற்றி தென்றல்
திரிகிறது. அந்தக் காற்றில் உயிர்ப் பூக்கள் பூத்திருக்கிறது.
எங்களோடு பாடி ஆடித் திரிந்தவன்- எங்களது பள்ளிச் சினேகிதன்
ஒருவன் எங்களோடு வாழ்ந்த ஒருவன் எங்கள் தேசத்தின்
விடிவிற்கான ஒரு படைநடைப் பாடலை பாடியபடி சென்றான்.
மண்ணில் அவனும் அவனது தோழர்களும் பாடிய பாடலை மக்கள்
எல்லோரும் பாடுகிறார்கள். உயிருள் கலந்த புதிய உறவு. எங்கள்
பூமிக்கு இவர்கள் உயிர்.

நீலவான் வெளிப் பரப்பில் தேசியக்கொடி கம்பீரமாகப் பறக்கிறது.
அதன் கீழே அக்கினிக் குஞ்சுகள் ஏதோ பேச்சுக் கொடுத்தபடி
நிற்கிறார்கள்.

காட்டில் ஆழ்ந்த அமைதியில் துயிலும் கல்லறைகளில் எமக்கென
வாழ்ந்தவர்கள் முகங்கள் விரிகிறது. பள்ளித் தோழியின்
கல்லறையில் போய் நின்று அழுது எழுகின்ற புதிய புயல் பூக்கள்.
யாருக்கு இனி அஞ்சவேண்டி இருக்கிறது. தந்தை மிகத் துடித்து
ஏற்றுகிற தீபம் நின்று ஒளிரும்.

'ஐயா உன் முகம் காட்டு' என வேண்டியழுகின்ற தாய். தாய்தானே
அழுவாள். துயரம் இல்லாமலா போகும். நினைவில் பேச்சில்"ச்சில்
காற்றெனத்தானே அந்த வீரர்கள் திரிவர்.

எங்கள் வீதிகள் நிமிர்ந்துள்ளன. எங்கள் வீதிகள்தான் இருள்
அரக்கனை எங்கனம் ஓட்டி விரட்டின.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எல்லாளன் குளம்

## ஒரு வரலாற்றுக் குறிப்பு

இலங்கையின் வரலாற்று மரபு பதியப்பட்டுச் சென்ற முறையில் ஏற்பட்ட பிறழ்வினால் பல பின்விளைவுகள் உருவாகியுள்ளன. வில்லியம் கைகர் குறிப்பிட்டது போன்று இலங்கையின் வரலாற்று மரபில் (மகாவம்சத்தில்) பதியப்பட்டவற்றை விட விலக்கப்பட்டுள்ளவையே இன்று இத்தீவின் பிரச்சினைகளுக்கு முக்கியமானவையாகும் என்பது இங்கு நோக்கத்தக்கது. பதியப்பட்டுச் சென்றவற்றுள் கூட இனங்காணப்பட்டு எவ்வழியிலேனும் தீர்வு காணமுடியாத வகையில் உள்ள சம்பவத் தொடர்களும், இடையீடுகளும், அடையாளம் காணப்படமுடியாத வகையில் அமைந்த ஆட்சியாளர்களது பெயர் வடிவங்களும் இன்று இலங்கையின் வரலாற்றுப் பிரச்சினைகளுள் தீர்க்கப்பட முடியாதவையாக உள்ளன. G. C. மென்டிஸ் போன்ற வரலாற்று ஆசிரியர்கள் இப்பிரச்சினைகள் தொடர்பாக நன்கு ஆராய்ந்துள்ளனர். இவ்வாறான வரலாற்றுச் சிக்கல்கள் இலங்கை வரலாறு பொறுத்து தோற்றம் பெற்றதற்கான பிரதான அடிப்படையாக அமைந்தது பாளி மொழியே. வரலாற்று மரபு பாளி மொழியில் பதிவு செய்யப்பட்டமையே முதலாம்தர சிக்கல்களைத் தோற்றுவித்த காரணியாயிற்று.

பௌத்த மதத்தின் செல்வாக்கினூடாக இம்மொழி இலங்கையில் தனக்குரிய தளத்தினை அமைத்துக் கொள்ள விழைந்த நிகழ்வு காலப் போக்கில் இங்கிருந்திருக்கக் கூடிய பிற வழிபாட்டு மொழிகளிடையே (Religious Languages) பிளவினை ஏற்படுத்தி நின்று, அதன் தொடர்ச்சியாக இனங்களுக்கிடையேயான பிறழ்வாகவும் உருவாக வழி அமைத்தது. இதன் விளைவாக பாளி மொழிக்குடும்பத்துடன் சம்பந்தப்படாத பிற சுதேச மொழிவழிப் பெயர்கள்- இடங்கள்- கடவுளர்கள் ஆகியன பாளிமொழியில் பதிவுசெய்யப்பட்ட பொழுது அவை வழங்கப்பட்ட மொழி வழக்கினின்றும் மாற்றம் செய்யப்பட்டோ அல்லது உருக்குலைக்கப்பட்ட முறையிலோ மேற்கொள்ளப்பட்டன என்பது தெளிவாகின்றது. (ஒருவேளை பாளி மொழியின் இயல்பு காரணமாகவும் அவ்வாறு ஏற்பட்டதாகக் கொள்ள முடியும்.)

இப்பின்னணியிலேயே கிறீஸ்துவுக்கு முற்பட்ட- பிற்பட்ட காலகட்டங்களில் அனுராதபுரத்தில் அதிகாரத்திலிருந்த திராவிட வம்ச ஆட்சியாளர்களது பெயர்கள் பெரிதும் திரிபுபடுத்தப்பட்ட வகையில் பாளி மொழியில் வரலாற்று மரபின் கண் இணைக்கப்பட்டது. (கி. பி. 4ம் நூற்றாண்டில் முதன்முதலாக 'தீபவங்ஸ' என்ற வரலாற்று மரபு பதிவுசெய்யப்பட்டது) இவ்வாறு இணைக்கப்பட்ட திராவிட வம்ச ஆட்சியாளர்களது பெயர்களையோ- சாதனைகளையோ சமகால சாசன வழக்கினூடுதன்னிலும் அடையாளம் கண்டுகொள்ள முடியாத வகையில் அவ்வரலாற்றுப் பிரச்சினை இன்று வரைக்கும் தொடர்வதனைக் காண்கிறோம்.

கிறீஸ்துவுக்கு முற்பட்ட சகாப்தத்தில் ஏறத்தாழ 88 வருடங்களாத் திராவிட வம்ச ஆட்சியாளர்கள் அனுராதபுரத்தில் இடைவிட்டு ஆட்சியை நடாத்தியிருந்தமையை இப்பாளிப்பதிவு நிரலிலிருந்தே கண்டுகொள்கிறோம். ஆனால் அவ்வாட்சியாளர்களது பெயர்கள் வேறு எவ்விடத்திலுமே அடையாளம் கண்டுகொள்ளமுடியாத வகையில் திரிபுபடுத்தப்பட்டு பெயர் குறிக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். சமகாலத் தமிழகத்தில் சங்ககால குறுநில மன்னர் பலரது பெயர்கள் (சங்க இலக்கியங்கள் தந்தவை) தொல்லியற்சான்றுகள் வாயிலாக மேலும் உறுதிசெய்யப்பட்டு விட்டன. ஆனால் ஈழத்துப் பாளிப் பெயர்கள் மாத்திரம் இன்னும் தெளிவாக அடையாளம் காணமுடியாதுள்ளது என்று சிந்தித்தால் அது இலங்கை மரபில் ஏற்படுத்தப்பட்ட வரலாற்றுப் பிறழ்வினையே வெளிப்படுத்தி நிற்கும். வட இந்தியப் பேரரசனான அசோகன் தனது 2வது, 13வது கிர்னார் பாறைப் பிரகடனங்களில் தனது பேரரசின் அயல்நாடுகளாக "சேர, சோட, பாட, சத்தியபுத்ரோ, கேரளபுத்ரோ, தாம்மிர பருணி" என பிராகிருத மொழியில் வரைந்துள்ளமையைக் காண்கின்றோம். இப்பெயர் வரிசையில் அடையளம் காணப்படாதிருந்த 'சத்தியபுத்ரோ' என்பவர்களை சங்ககாலத்து குறுநில மன்னர் பரம்பரையில் ஆட்சிபுரிந்த அதியமான் நெடுமான் அஞ்சியுடன் ஆய்வாளர் அடையாளம் கண்டுள்ளனர். அம் மன்னனுடைய நாணய வெளியீடு ஒன்றும் 'சத்தியபுத்ர' என்ற பொறிப்புடன் அண்மையில் தமிழகத்தில் பெற்றுக்கொள்ளப் பட்டமையானது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ளது. இம் மன்னனே 'நெடுங்காலம் வாழ்வதற்கான நெல்லிக்கனியை ஔவையாருக்குக் கொடுத்துப் புகழ் பெற்றான்.' எனவும் குறுப்பிடப்படுகின்றது. தமிழக நிலை இவ்வாறாயின் இலங்கையின் இந்நிலைக்குக் காரணம் என்ன? பாளி மொழியை பதிவேட்டு மொழியாகப் பயன்படுத்தியமையா? இதுவே திராவிட மன்னர்களது பெயர் வடிவத்தின் குழப்பத்திற்குக் காரணமா? அனுராதபுரத்தில் 44 வருட காலம் ஆளுமையுடனும் சாதனைகளுடனும் ஆட்சிபுரிந்த எல்லாளன் என்ற தமிழ் மன்னனது பெயர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எவ்வாறு இலங்கை வரலாற்று மரபில் சிதைவுற்றது? அவனது சாதனைகள் யாவுமே பதிவு செய்யப்படாமல் மறைக்கப்பட்டே விட்டன. இந்நிலையில் இக்கட்டுரையின் நோக்கமானது எல்லாளனுடைய பெயரில் குடாநாட்டின் கண் உள்ள வடமராட்சிப் பரப்பில் காணப்படும் ஒரு குளத்தின் பெயர், பின்பு கிராமத்தின் பெயராக மாற்றம் பெற்றுக் காணப்படுவதனை எடுத்துக்காட்டுவதாக அமையும். 'எலாரா' என்று பாளி மொழியில் பதியப்பட்ட மன்னனை 'எல்லாளன்' என்றும் 'ஈழராசா' என்றும் எமது ஆய்வாளர் சிலர் அடையாளம் கண்டுள்ளனர். இருப்பினும் அம்மன்னனது பெயரில் உள்ள ஒரு நீர்ப்பாசன நிறுவனத்தின் பெயர் பின்னர் கிராமத்தின் பெயராக மாற்றம் பெற்றுக்கொண்டிருந்தமையை இச்சிறு கட்டுரை முதன் முதலாக வெளிப்படுத்த எத்தனிக்கின்றது.

செ. கிருஷ்ணராஜா
முது நிலை விரிவுரையாளர்
வரலாற்றுத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

வடமராட்சிப் பரப்பில் உள்ள உடுப்பிட்டி பிராந்தியத்தில் உள்ளடக்கப்பட்ட ஒரு பழைமையான கிராமமாகக் காணப்படுவது எள்ளன் குளமாகும். எள்ளன் குளம் என்ற பெயர் அக்கிராமத்தின் மத்தியிலுள்ள ஒரு சிறிய நீர்ப்பாசனக் குளத்துக்குரியதாக வழங்கி, பின்னர் கிராமத்தின் பெயராக மாற்றமடைந்தது. எள்ளன் குளம் என்ற பதமானது எல்லாளன் குளம் என்ற அதன் பழைய பெயர்வடிவிலிருந்தே மருவியதாகக் கொள்ளவேண்டும். மொழியியல் ரீதியாகவும் அவ்வழக்கினுடைய மருவுநிலை ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவே உள்ளது. (வடமராட்சியில் உள்ள 'கங்குண்டான்' என்ற கிராமத்தின் பெயர் 'கங்கைகொண்டான்' என்ற அதன் ஆரம்பப் பெயர் வழக்கினின்றும் மருவியதை தோம்புப் பதிவுகள் உறுதிப்படுத்தியுள்ளமை இங்கு எடுத்துக்காட்டத்தக்கது.) எனவே எல்லாளன் குளம் என்பதையே தற்காலத்தில் நாம் வழங்கும் எள்ளன் குளம் என்ற பதம் உணர்த்தி நிற்கின்றதென்றால் அது தவறாகாது.

எள்ளன் குளம் என்ற கிராமம் மிகவும் பழைமை வாய்ந்த ஒரு பரப்பாகும். இங்கிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தொல்லியல் எச்சங்கள் ஆதிக்குடியிருப்பு ஒன்றினது தொடர்ச்சியை இனங்காணத்தக்க வகையில் சான்றுகளை உள்ளடக்கியுள்ளன. இடுகாடும் குளமும் இணைந்த வகையில் அருகருகே அமைந்து காணப்படுகின்ற ஒரு பண்பு அதன் சிறப்பியல்புகளுள் ஒன்றாகும். மேட்டு நிலப்பயிர்ச் செய்கையும், நெற்செய்கையும் இங்கு தனித்துவமானவை. எள்ளன் குளத்தின் மத்தியில் 'கொல்லன் பனையடி' என்ற பெயரால் அழைக்கப்படும் ஒரு திட்டி அதன் எல்லா மண்படை அடுக்குகளிலும் ஏராளமான கீச்சுக் கிட்டங்களைக் (Iron Slag) கொண்டிருப்பது தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனை வெளிப்படுத்துகின்றது. இதுவே அங்கு தொடர்ச்சியான ஒரு விவசாயக் குளக்குடியிருப்பின் வளர்ச்சியையும் உறுதிப்படுத்துகின்ற தொல்லியல் மூலமாகவும் அமைகிறது. (இதனுடைய தொடர்ச்சியும் வளர்ச்சியுமாகவே இன்று உடுப்பிட்டியின் இரும்பு உலோகத் தொழில்நுட்பமும் தரமும் அமைந்து காணப்படுவதையும் மனங்கொள்ளல் நன்று.)

எள்ளன் குளத்தில் பெருங்கற் கால மக்களின் முதுமக்கட்தாழி அடக்கமுறை பயிலப்பட்டிருந்ததற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. மனித சாம்பலும்- எலும்புத் துண்டுகளும் நிறைந்த பெரிய ஒரு மட்கலம் அங்குள்ள இடுகாட்டின் மத்தியில் கிணறு தோண்டப்பட்ட போது வெளிவந்தது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இங்கு நாச்சிமார் கோவில் பிரகாரம் இடுகாட்டுடன் மருவிக்காணப்படுவது எள்ளன் குளக் கிராமத்தின் பழைமையை உறுதிசெய்வதாக உள்ளது. இங்கு இற்றைவரைக்கும் வேள்வி- யாகங்கள் தொடர்ந்து இடம்பெற்றுக்கொண்டு வருவதனையும் காணலாம்.

எள்ளன் குளத்தின் வரலாற்று முக்கியத்துவத்தினை இலங்கையின் பெருநிலப்பரப்பில் கிறீஸ்துவுக்கு முற்பட்ட காலப்பகுதியில் தோற்றம் பெற்றிருந்த குளநீர்ப்பாசன சமூகப் பின்னணியில் வைத்து ஆராய்வதற்கு இடமளிக்கக்கூடிய வகையில் சான்றுகளைக் கையாளும் வாய்ப்புக்கள் மிகவும் அதிகம் என்றே குறிப்பிடவேண்டும். இங்கிருந்து சேகரிக்கப்பட்ட மண்பாண்டங்கள் பெருமளவுக்கு தனிக்கறுப்பு வர்ணத்தில் பளபளப்புத் தன்மையுடன் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. (உடுப்பிட்டியில் இற்றைவரைக்கும் தனிக்கறுப்பு வர்ணத்திலான பானை வகைகளே உற்பத்தி செய்யப்பட்டு வருவதும் இங்கு நினைவு கூரத்தக்கது.)

கிறீஸ்துவுக்கு முற்பட்ட காலங்களில் இராசரட்டைப் பிராந்தியத்தில் பொறிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் சில 'வபிகமிக' என்ற பதத்தினையும் குறித்துள்ளதை ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். குளச்சொந்தக்காரர்களையே அப்பதப்பிரயோகம் குறித்தது என்பது ஆய்வாளரின் பொதுவான முடிபாகும். அந்தவகையில் எள்ளன் குளம் என்ற பெயரும் அரசமட்டத்துடன் எடுத்துக்காட்டக்கூடியதாய் உள்ளமை கவனிக்கத்தக்கதாகும். இலங்கையில் கிறீஸ்துவுக்கு முற்பட்ட காலங்களில் குளச்சொந்தக்காரராகக் காணப்பட்டவர் பெருமளவுக்கு அரச குடும்பத்துடன் இணைந்தவராகவே காணப்பட்டனர். அந்த வகையில் எள்ளன் குளம் என்ற பெயர்தொடர் குடாநாட்டின் கண் உருவாக்கப்பட்டிருந்த அரச மட்டத்திலான நீர்ப்பாசன நிறுவனமாக விளங்கியிருந்தது என நிறுவலாம். அவ்வாறு நிறுவும் பட்சத்தில் எதிர்காலத்தில் எல்லாளன் என்ற புகழ்பூத்த தமிழ் மன்னனுடைய ஆட்சிக்காலத் தொடர்புகளை யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் பிணைத்துப் பார்ப்பதற்கு வழி பிறக்குமல்லவா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஐரோப்பாவில் தீவிர தேசியவாதத்தின் வளர்ச்சி?

ஐரோப்பாவில் தீவிர தேசியவாதக் கட்சிகள் வளர்ச்சி பெற்று வருவதை அண்மைக்கால நிகழ்வுகள் புலப்படுத்துகின்றன. அவுஸ்திரியாவில், இவ்வருடம் ஒக்ரோபர் மாதம் 9ம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலில் இத்தகைய அதி வலதுசாரிக் கட்சியொன்று 22.6% வாக்குகளைப் பெற்றது சுட்டிக்காட்டப்படுகின்றது. சுதந்திரக்கட்சி எனப்படும் இக்கட்சி, அரசாங்கம் ஒன்றில் கூட்டுச் சேரும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. இதேபோன்று, தேசியக் கூட்டு என்ற அமைப்பில், முக்கிய கட்சியாக விளங்கும் இத்தாலிய சமூக இயக்கம் (Italian Social Movement) என்ற கட்சி, இத்தாலியில் இவ்வருடம் மார்ச் மாதம் நடந்த தேர்தலில், 13.5% வாக்குகளைப் பெற்றதோடு, கூட்டு அரசாங்கம் ஒன்றில், பங்காளியாகவும் இணைந்துள்ளது. இதன் தலைவர், ஜியான் பிராங்கோ பினி, இத்தாலியின் பிரதமரைவிட, கூடிய மக்கள் ஆதரவைப் பெற்றவராகக் கருதப்படுகிறார். ஜியான் பிராங்கோ இத்தாலிய பாசிச சர்வாதிகாரி, முசோலினியின் வழிவந்த உறவினராக விளங்குவதோடு, அக் கொள்கைகளை வரித்துக்கொண்டதாகவும் கூறுகிறார். இதேபோன்று, அவுஸ்திரிய சுதந்திரக்கட்சியின் (Freedom Party) தலைவர், ஜோ. கெய்டர் இனத்தூய்மை பாராட்டும் தீவிர இனவாதியாகவும், கிட்லரின் வேலைத் திட்டங்களைப் புகழும் பாசிச வாதியாகவும் வெளிப்படுகின்றார். இவை ஐரோப்பாவின் அரசியல் கட்டமைப்புக்குள் பாசிசம் காலூன்றுவதை நிரூபிப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இவ்வருடம் ஒக்ரோபர் மாதத்தில், பெல்ஜியத்தின் முக்கிய இரண்டாவது நகரமான அன்ரவேப்பில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில், வெளிநாட்டவர்களுக்கு எதிரான தீவிர வலதுசாரிக் கட்சியொன்று 25% க்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்றுள்ளது. பிரான்சிலும், தீவிர வலதுசாரிக் கட்சிகள், ஐரோப்பியப் பாராளுமன்றத்திற்காகக் கடந்த கோடையில் நடைபெற்ற தேர்தலில் 25% க்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்றதை அவதானிக்கலாம். ஜோன் மேரி லு பென்னின் தேசிய முன்னணி ஐரோப்பிய பாராளுமன்றத் தேர்தலில் 10.5% வாக்குகளையும் கடந்த பிரெஞ்சுப் பாராளுமன்றத் தேர்தலில் 12.4% வாக்குகளையும் பெற்று, 10 - 14% என்ற மக்கள் ஆதரவை உடையதாக நீண்டகாலமாக விளங்குகின்றது. பிலிப் டி வில்லியர்ஸ் என்பவருடைய கட்சியும் தீவிர வலதுசாரிக் கருத்துக்களைக் கொண்டுள்ளது. லுபென்னைப் போல், வெளிநாட்டவருக்கெதிரான அதிதீவிர கொள்கையை இவர் வெளிப்படுத்தவில்லை. அதேவேளை, பாரம்பரிய மதிப்பீடுகள், குடும்பம், தேசம், கத்தோலிக்க மதம் என்ற ரீதியில் தீவிர தேசியவாதியாகவே இவர் காணப்படுகின்றார். இவரது கட்சி, கடந்த ஐரோப்பிய பாராளுமன்றத் தேர்தலில், பிரான்சில் 12% வாக்குகளைப் பெற்றது. இவ்விரு கட்சிகளினதும் மக்கள் ஆதரவைக் கூட்டினால், கால்வாசிப் பங்கு பிரெஞ்சு மக்கள், தீவிர வலதுசாரிப் போக்குகளுக்கு ஆதரவளித்தனர் என்ற கருதுகோளை நிறுவிக்கொள்ளலாம்.

இது குறித்து, பிரெஞ்சு பிரபல பத்திரிகை லெமொன்ட், கருத்துத் தெரிவிக்கையில், "பழமை வாய்ந்த (ஐரோப்பா) கண்டத்திற்கு வாசலாக விளங்குவதோடு வடகடல் துறைமுகத்தையும், மத்திய ஐரோப்பாவின் தலைநகரத்தையும் கொண்ட இந்த நாடு (பிரான்ஸ்), தீவிர (தேசிய) வாத அலைக்கு உட்படவும், அது ஐரோப்பா முழுமையும் பரவவும் காலாக அமையுமா?" என்று கேள்வி எழுப்பியுள்ளது.

தீவிர வலதுசாரிப்போக்கு ஐரோப்பாவில் வேகமாக வளர்கிறதா என்ற ஐயம் தற்போது எல்லோர் மனதிலும் எழுந்துள்ளது. 1930ம் ஆண்டுகளின் பின்னர் ஜேர்மனியிலும், ஐரோப்பா முழுமையும் நடைபெற்ற "அந்நியருக்கு" எதிரான கொடூரங்கள் மீளுமா என தற்போதைய பல ஐரோப்பிய மிதவாத அரசாங்கங்கள் ஐயுறத் தொடங்கியுள்ளன. பழைய நோயின் புதிய அடையாளங்கள் மீண்டும் தோன்றியுள்ளதை பல ஆய்வாளர்கள் ஒப்புக்கொள்கின்றனர். அதீத தேசிய அரசுகளை வலியுறுத்துவதும், வெளிநாட்டவருக்கு எதிரான தாக்குதல்களும், யூதர்களுக்கு எதிரான போக்குகளும் அதிகரித்துள்ளதை அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். ஜேர்மனியில் குடியரசுவாதக் கட்சி, ஜேர்மன் மக்கள் சங்கம் ஆகிய இரு தீவிர தேசியக் கட்சிகள் பல மாநிலங்களில் கணிசமான வாக்குகளைத் தேர்தல்களில் பெற்றுள்ளதைக் குறிப்பிடலாம். மேலும், வெளிநாட்டவருக்கெதிரான, குண்டுத்தாக்குதல்கள், வீடு எரிப்புக்கள் தொடர்ந்து நிகழ்வதையும் அவதானிக்கலாம். ஆயினும், ஜேர்மனியில், பழமைவாதக் கட்சியான கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியின் மீள்வருகை, தீவிர வலதுசாரிப் போக்குகளை மந்தப்படுத்தும் என்பது ஒரு சாரார் கருத்து. மேலும், சுவீடன், டென்மார்க். கொலண்ட் ஆகிய நாடுகளிலும், தீவிர தேசியவாத வெளிநாட்டார் எதிர்ப்புப் போக்குகள் தலைதூக்கியுள்ளதையும் குறிப்பிடலாம்.

தீவிர தேசியவாதம், தற்போதைய ஐரோப்பிய அரசியல் கட்டமைப்புக்களின் ஊடாக, பாசிச அரசுகளாக உருப்பெற முயலுதல், தற்போதைய ஐரோப்பிய மிதவாத அரசாங்கங்கள் முகம் கொடுக்கும் முக்கிய பிரச்சினையாக உள்ளது. இது உலகளாவிய கரிசனைக்கும் இடம் கொடுத்துள்ளது.

"The Economist, Oct. 15th - 21st 1994 - சஞ்சிகையை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்ட கட்டுரை இது.

மதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழர் நீட்டும் நட்புக்கை

சுமார் நான்கு வருடங்களின் பின், சிறீலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் உத்தியோக பூர்வமாகப் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளன. இதுபோன்ற பேச்சுவார்த்தைகள், ஏற்கனவே பலதடவைகள் நடைபெற்று முறிவடைந்தன என்ற போதிலும், சந்திரிகா அரசுடனான, இப் பேச்சுவார்த்தை தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் புதியதொரு அத்தியாயமாகவே கருதப்படுகின்றது.

இனப்பிரச்சினையை பயங்கரவாதப் பிரச்சினையாகச் சித்தரித்து, தமிழ் மக்கள் மீதான கொடூரமான அடக்குமுறையைக் கட்டவிழ்த்து வந்த முன்னைய விஜயதுங்கா அரசினின்றும் மாறுபட்ட அரசாகவே புதிய சந்திரிகா அரசு தோற்றமளிக்கிறது. கடந்த நான்கு வருடங்களாக விடுதலைப் புலிகள் விடுத்து வந்த சமாதான அறைகூவலுக்குச் செவிசாய்த்து சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்வந்தமை, தடை செய்யப்பட்டிருந்த பொருள்களில் சிலவற்றிற்கான தடையை நீக்கியமை, தமிழ்மக்களின் அன்றாடப் பிரச்சினையைத் தீர்ப்பதில் ஆர்வம் காட்டுகின்றமை என்பன தமிழ் மக்களாலும், குறிப்பாக சமாதான விரும்பிகளாலும் வரவேற்கப்படுகின்றன. சந்திரிகாவின் இத்தகைய முயற்சிக்கு தென்பகுதியில் இருந்து இதுவரை எதிர்ப்புகள் கிளம்பாததும் நல்ல அறிகுறியே. எனினும், அமைதிப் போக்கை அங்கீகரிக்கும் இந்த நிலை எதுவரை தொடரும் என்பதும் கேள்விக்குறியே. தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்படும் விடயத்தில் இந்த அமைதிக்கான அங்கீகரிப்பு தொடருமா என்பதே கேள்வி.

பேச்சுக்களை தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளிலிருந்து ஆரம்பிக்கலாம் என்ற விடுதலைப் புலிகளின் ஆலோசனை சிறீலங்கா அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினையில் இருந்து பேச்சுக்களை ஆரம்பிப்பதால், தமக்குச் சாதகமான சில விளைவுகள் ஏற்படும் என சிறீலங்கா அரசு கருதுகின்றது. உலகம், மற்றும், தமிழ்மக்கள், விடுதலைப் புலிகள் மத்தியில் தமக்குச் சாதகமான அபிப்பிராயத்தை ஏற்படுத்துதல், குறிப்பாக தமிழ் மக்களின் "மனங்களைக் கவருதல்" என்ற வகையில் அரசாங்கம் தன் திட்டத்தை வகுத்துள்ளது.

சுமார் நான்கு வருடங்களாகத் தொடர்ந்த பொருளாதாரத்தடை ஏற்படுத்திய, அகபுற விளைவுகள் நிச்சயமாக சிறீலங்கா அரசிற்கோ, அதன் படைகளுக்கோ சாதகமானதாக அமையவில்லை என்ற நடைமுறை உண்மையும், புதிய அரசை இந்த வகையில் சிந்திக்கத் தூண்டியிருக்கலாம். பொருளாதாரத்தடையால், விடுதலைப்புலிகளின் பலத்தையோ, போராட்டத்தின் மீது தமிழ் மக்கள் கொண்டிருந்த பற்றுறுதியையோ உடைக்கமுடியவில்லை. வரலாற்றில் என்றுமில்லாத சரித்திர வெற்றியைக் கொடுத்த "பூநகரித் தாக்குதல்" விடுதலைப் புலிகளின் பலம், பலவீனம் என்ற கேள்விக்கு விடையாக அமையும். முன்னைய அரசு மேற்கொண்ட பொருளாதாரத்தடை, தமிழ் மக்களை, சிங்கள தேசத்திலிருந்து முற்றாகத் துண்டித்ததுடன், சொந்தக் காலில் நிற்கத் தூண்டும் உள அழுத்தத்தையும், செயற்துடிப்பையும் அவர்களுக்கு வழங்கியது என்பது வெளிப்படையானது. இந்த நிலையில், மட்டுப் படுத்தப்பட்ட பொருளாதாரத்தடை நீக்கம் பற்றி சந்திரிகா அறிவித்துள்ளார். மேற்கொண்டு தொடரும் நகர்வுகள் நம்பிக்கை தரக்கூடியதாக இருந்தாலும், நாற்பது வருடங்களுக்கு மேலான கசப்பான அனுபவங்கள் சற்று நிதானமாகவே சிந்திக்கத்தூண்டும்.

இராணுவத்தைப் பொறுத்தவரை, படைத்தளபதிகளைப் பொறுத்தவரை, சந்திரிகாவின் அணுகுமுறையில் அதிருப்தி கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர். சந்திரிகா பதவி ஏற்றதன்பின், முதல் தடவையாக படைத்தளபதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே இக் கருத்துமுரண்பாடு தென்பட்டது. தடைசெய்யப்பட்ட பொருட்களுக்கான தடைநீக்கலில், சந்திரிகாவின் கருத்துடன் இராணுவ அதிகாரிகள் ஒத்துப்போகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பன்னிரண்டு வகைப் பொருட்களுக்கான தடையை நீக்க மாத்திரமே இராணுவ அதிகாரிகள் ஒத்துகொண்ட போதும், சந்திரிகா இருபத்தெட்டு வகைப் பொருட்களுக்கான தடையை நீக்கியிருந்தார்.

சந்திரிகா அரசிற்கும், இராணுவ அதிகாரிகள் சிலருக்குமான முரண்பாடு, சந்திரிகாவின் BBC பேட்டியின்போது வெளியரங்கமானது. இராணுவ அதிகாரிகளின் போக்கு குறித்து அவர் தெரிவித்த கருத்துக்களும், சமாதானப் பேச்சுக்களைக் குழப்ப சில இராணுவ அதிகாரிகள் முயலக்கூடும் என்று அவர் தெரிவித்த கருத்துக்களும் படை வட்டாரங்களில் பெரும் விமர்சனத்திற்கும்

# புதிய அரசாங்கம் நம்பிக்கை தருமா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறீலங்கா பிரதமர், சந்திரிகா குமாரதுங்க லண்டன் **BBC** க்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

"சமாதானம் எந்த வழியில், எவ்வாறு முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிப்பது மக்கள் அரசாங்கமே யொழிய ஆயுதப்படைகளல்ல. ஆயுதப்படைகள் ஒரு அரசாங்கமாகச் செயல்படும் போக்கை நான் சகித்துக்கொள்ளப் போவதில்லை."

"விடுதலைப் புலிகளின் மீது தொடர்ச்சியான தாக்குதல்களை மேற்கொள்ளுவதன் மூலம், இராணுவத்தில் சில அதிகாரிகள், சமாதான முன்னெடுப்பை நாசம்செய்ய முயல்கிறார்கள். முன்னைய அரசாங்கம், இராணுவத்தைக் கட்டுக்குள் வைத்திருக்காமையும், முன்பு நடந்த பேச்சுவார்த்தை தோல்வியுற ஒரு காரணமாகும். இராணுவம் தான் நினைத்தவாறு நடக்க நான் அனுமதிக்கப் போவதில்லை."

கண்டனத்திற்கும் உள்ளாகியுள்ளது. விடுதலைப் புலிகளைச் சீண்டி மோதலுக்கு வழிவகுக்கவும், சமாதானப் பேச்சுக்களை குழப்பவும் சில அதிகாரிகள் முயலக்கூடும் என்ற அவரது சந்தேகத்தை வலுப்படுத்தும் சம்பவங்களே வடக்கிலும் கிழக்கிலும் தொடர்கின்றன. விடுதலைப் புலிகள் வலியுறுத்திவரும் போர் நிறுத்தத்தை மேற்கொள்ளவிடாது இராணுவம் முட்டுக்கட்டை போடுவதையும் உணரமுடிகின்றது. பேச்சுவார்த்தையின் வெற்றிக்கும், சமாதானம் தோன்றவும் விடுதலைப் புலிகள், சிறீலங்கா அரசு என்ற இரு சாராரையும் விட, மூன்றாவது சக்தியாக சிறீலங்காப் படையினர் உருவாகியிருப்பதை கருத்திற் கொள்ளவேண்டியுள்ளது. கடந்த அரசாங்கங்களால், தமிழ் மக்களுக்கு எதிரான கொடூர அடக்குமுறைக்கு ஏற்றவகையில், "சத்துரட்டி" வளர்க்கப்பட்ட சிறீலங்காப்படை, தற்போது, சிறீலங்கா அரசாங்கத்துக்கு எதிராகவே திரும்பும் அபாயம் தோன்றியுள்ளது.

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்கும் விடயத்திலேயே, இராணுவத்திடம் இருந்து எதிர்ப்புத் தோன்றியுள்ள நிலையில், தமிழ்மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை ஆராயும் நிலைக்கு பேச்சுவார்த்தை செல்லும் வேளை, நிலைமை மோசம் அடையலாம் என எதிர்பார்க்கலாம். தற்போது அமைதியாக இருக்கும் இனவாதிகள், எதிர்க்கவோ அன்றி சமூக நிலையைக் குழப்பவோ முனையலாம். தமிழ் மக்களின் போராட்டத்தின் மீது கசப்பான பார்வையைச் செலுத்திவரும் புற சக்திகள் முட்டுக்கட்டையை ஏற்படுத்தலாம்.

இந்தியாவைப் பொறுத்தவரை, ஈழத்தமிழ் மக்களின் போராட்டம் வெற்றிபெறக்கூடாது என்ற விடாப்பிடியான நிலைப்பாட்டிலேயே தொடர்ந்தும் இருக்கின்றது. ஈழத் தமிழ் மக்கள் உயர்ந்த உரிமைகளைப் பெற்று சுதந்திரம் அனுபவிப்பதை, இந்திய அரசு அனுமதிக்கும் மனோபாவத்தைக் கொண்டிருக்கவில்லை. இந்தியாவிலுள்ள தேசிய இனங்களின் எழுச்சி, இந்திய ஒருமைப்பாடு போன்ற விடயங்களோடு, ஈழத்தமிழ் மக்களின் சுதந்திரப் போராட்டத்தை ஒன்றாகப் போட்டுக் குழப்பியதால் ஏற்பட்ட பயப்பிராந்தியே இந்தியாவின், மனித நேயமற்ற இக்கடும் போக்கிற்குக் காரணம். கடந்த காலங்களில், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பல முட்டுக்கட்டைகளை, இடைஞ்சல்களை ஏற்படுத்திவந்த இந்திய அரசு, சும்மா இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

பௌத்த சிங்கள இனவாத மேலாதிக்க மனோபாவத்தை உடைத்து, புறத்தே இருந்துவரும் தடைகளை முறியடித்து, தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் திருப்திப்படுத்தக்கூடிய தீர்வை சந்திரிகா முன்வைப்பாரா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். தாயகம், தமிழ்த் தேசியம், தன்னாட்சி உரிமை என்ற தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைக்கு ஏற்புடைய தீர்வை முன்வைத்து, ஒரு நீதியான தீர்வை அவர் ஏற்படுத்துவாரேயானால் இலங்கைத்தீவின் வரலாற்றில் சரித்திரப் புகழ்மிக்க ஒரு தலைவியாக அவர் போற்றப்படுவார். மாறாக, "எதையாவது" திணித்துப் பணிய வைக்கும் முயற்சியை ஏற்படுத்த அவர் முனைந்தால், யாழ்ப் பல்கலைக் கழகத்தில், பெருமளவில் திரண்டு மகிழ்ச்சி ஆரவாரத்துடன், சிறீலங்காத் தூதுக்குழுவினரை வரவேற்ற அதே மக்கள், எரிமலையாய் கிளர்ந்து எழுவார்கள். இது கடந்தகால வரலாறு. தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் பற்றி சந்திரிகா "தமிழ் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை எளிதில் ஏமாற்றமுடியாது. மக்கள் ஆதரவில்லாமல் எந்த கெரில்லா இயக்கமும் நிலை நிற்பதில்லை." என்று தெரிவித்துள்ளார். அவ்வாறு கூறிய அவர் தமிழ் மக்களை ஏமாற்றும் செயற்பாட்டிற்கு முற்படார் என நம்புவோம்.

-ஜெயா-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுதந்திரத்துக்குப் பின்....

"நான் எனது வீட்டிலேயே ஒரு நாளில் ஐந்துக்கு மேற்பட்ட வானொலிப்பெட்டிகளைச் செய்துவிடுவேன்...."

ஆம்!.... அந்த யப்பானியத் தொழிலாளியின் தன்னம்பிக்கையும், முயற்சியும் இன்று யப்பானை ஒரு தொழில்நுட்பத் திறன் படைத்த நாடாக மாற்றியுள்ளது.

பெரும் அழிவில் இருந்து, புதிய சரித்திரம் படைத்த ஒரு நாடாக யப்பான் இன்று விளங்குவதற்கு யப்பானிய மக்களின் தேசப்பற்றும், கடின உழைப்பும் தான் காரணம்.

இரண்டாம் உலகப்போரில், அமெரிக்காவின் குண்டுவீச்சினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு முற்றாகவே அழிந்துபோயிருந்த யப்பான் அந்த அதிர்ச்சியிலிருந்து மீளவேண்டுமாயின், இன்னும் ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் தேவைப்பட்டிருக்கும்... ஆனால் இரண்டாம் உலகயுத்தத்தில் ஏற்பட்ட பொருளாதார மறுமலர்ச்சி, யப்பானிய மக்களை விழிப்படையச்செய்தது. யப்பான் இன்னொரு வல்லரசின் குடியேற்ற நாடாகவோ, அல்லது அடிமைப்படுத்தப்பட்ட ஒரு நாடாகவோ இருந்திருப்பின் யப்பானினால், இன்று தனக்கென ஒரு பொருளாதார வளர்ச்சியைப் பெற்றிருக்கமுடியாது.

யப்பான் சுதந்திரமும், தன்னாதிக்கமும் இறைமையுமுள்ள ஒரு தனிநாடாக விளங்கியமையினாலேயே, பெரும் போர்க்கால அழிவில் இருந்து தன்னை வளர்த்துக் கொள்ள முடிந்தது. யப்பானிய அரசின் பொருளாதாரக் கொள்கையும், தனித்துவமும் அந்த நாட்டைக் கைத்தொழில், தொழில்நுட்ப வளர்ச்சி பெற்ற நாடாக விரைவில் மாற்றியது. யப்பான் ஒரு தனியரசாக இல்லாதிருந்தால், யப்பானிய மூலதனமும், வளமும், மூளை வளமும் ஏகாதிபத்திய நாடுகளுக்கு ஏற்றுமதியாக்கப் பட்டிருக்கும். இந்த நிலையில் அன்னிய பொருளாதாரத்தில் தங்கியிருக்க வேண்டிய கையறு நிலையில் யப்பானும் இருந்திருக்கும். அந்த நிலையில் இருந்தும் விடுபட்டு, இன்று இலத்திரனியல், தொழில்நுட்பத் துறையில் வளர்ச்சிபெற்ற நிலையில், உலகின் முன்னணி நாடாக யப்பான் விளங்குவதுடன், உலக நாடுகளையே தனக்கு ஒரு சந்தையாக்கிக் கொண்டது.

இரண்டாம் உலகப்போரில், யப்பானின் பேரரசுக் கொள்கையில் நலிவுற்று அடிமைப்பட்டுக் கிடந்த சிங்கப்பூர், கொங்கொங் போன்ற நாடுகள் சுதந்திரமடைந்த நாடுகளாகத் தம்மை மாற்றிக் கொண்டிருக்காவிட்டால் தொழில்நுட்ப, அறிவியல் துறையில் வளர்ச்சி பெற்றிருக்கமுடியாது.

சிங்கப்பூர் ஒரு சிறிய நிலப் பரப்பாக இருந்த போதிலும் அங்கு நிலவளமோ, நீர்வளமோ, மூலவளமோ குறைவாக இருந்த போதிலும் அது ஒரு தனிநாடாக விளங்கியமையினாலும் தனக்கென கட்டுப்பாடற்ற ஒரு சிறந்த பொருளாதாரக் கொள்கையை ஏற்படுத்தியமையினாலும், இன்று தொழில்நுட்பத் துறையில் வளர்ச்சி பெறக்கூடியதாக இருக்கின்றது. இன்னொரு நாட்டின் மாநிலமாகவோ, அல்லது குடியேற்ற நாடுகளாகவோ இருக்கின்ற நாடுகள் தம் வளங்களை வளர்த்தெடுக்க முடியாது போவது மட்டுமன்றி, தம் தனித்துவத்தையும் சுயபொருளாதார வளர்ச்சியையும் இழந்து உலக வரைபடத்திலிருந்து தூக்கியெறியப்படும் நிலைக்குத் தள்ளப் பட்டுவிடுகின்றன.

1959ம் ஆண்டுவரை அமெரிக்காவின் ஆட்சியின் கீழ் அடிமைப் பட்டுக் கிடந்த கியூபா 1959ல் ஏற்பட்ட புரட்சியின் விளைவாக 1961ல் தனிநாடாகியது. இந்தக் காலத்தின் பின்னரே கியூபாவின் விவசாய, கைத்தொழில் உற்பத்தி துரிதமாக வளர்ச்சி பெறத் தொடங்கி இன்று கியூபாவின் தலா வருமானம் 840 அமெரிக்க டொலராக உயர்ந்திருக்கிறது.

பல ஆண்டுகள் பிரித்தானியாவின் ஆதிக்கத்தின் கீழிருந்த அயர்லாந்து, 1921ல் சுதந்திரம் பெற்று 'ஐரிசு சுதந்திரநாடு' என அழைக்கப்பட்டு 1949ல் அயர்லாந்துக் குடியரசாக மாறியது. இக்காலத்தின் பின்னர் அயர்லாந்தில் ஏற்பட்ட விவசாயப் புரட்சி, பொருளாதாரத்தில் தன்நிறைவை ஏற்படுத்தியது. அது சுதந்திரமும், இறைமையும் உள்ள ஒரு தனி நாடாக விளங்கியமையால் வெளிநாட்டு முதலீட்டின் அதிகரிப்பால் கைத்தொழில், தொழில்நுட்பத் துறையின் வருமானம் அதிகரித்து வருகிறது. இத்தகைய துரித பொருளாதார வளர்ச்சி அயர்லாந்தின் தனிநபர் வருமானத்தை 6200 அமெரிக்க டொலர்களாக உயர்த்தியுள்ளது என்றால் சுதந்திரத்தின் அறுவடையை உணர்ந்துகொள்ள முடியும்.

உலக அரங்கில், வியப்புடன் நோக்கப்படும், இஸ்ரேலின் வளர்ச்சி ஒரு தனித்துவமான நாட்டுக்கு இருக்கவேண்டிய பண்புகளை முன்னெடுத்துச் செல்வதைக் காணலாம். 2077 சதுரக் கிலோமீற்றர் பரப்பளவை மட்டுமே கொண்ட இஸ்ரேல் 1948ன் பின்னரேயே ஒரு புதிய நாடாக அறிமுகம் செய்யப்பட்டது. தன்னுடைய மிகச்சிறிய நிலப்பரப்பில், விவசாயத்திலும், தொழில்நுட்பத் துறையிலும் இஸ்ரேலியர்கள் தம் திறமையினாலும், நிபுணத்துவத்தாலும், விடாமுயற்சியினாலும் பெரும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளனர். இஸ்ரேலியர்கள் தங்களுடைய முயற்சியினால் பாலைவனத்தையும் பசுஞ்சோலையாக்கியுள்ளனர். 'கிபுட்ஸ்' எனப்படும் கூட்டு விவசாயப் பண்ணை முறையில் உருவான இஸ்ரேலின் விவசாய வளர்ச்சி தமிழீழத்திற்கே ஓர் முன்மாதிரியானதாகும்.

எனவே, எந்தவொரு நாடும் இன்னொரு நாட்டின் கீழ் அடிமையாகவோ, தங்கிவாழும் நிலையிலோ இருந்தால், அது தன்னிறைவான ஒரு பொருளாதார வளர்ச்சியை எட்டமுடியாது என்பதற்கு பிரித்தானியக் குடியேற்ற நாடுகளாக இருந்த நாடுகளின் மந்த நிலையைக் குறிப்பிடலாம். இதனாலேயே ஒவ்வொரு தனித்துவமான தேசிய இனமும் தமது தனித்துவத்தைப் பேணவும், தனக்கென ஒரு பண்பாட்டுச் சூழல் நிலைமைகளுக்கு இசைவான ஒரு பொருளாதாரக் கொள்கையை வகுப்பதற்கும் என 'தனி அரசு' ஒன்றை அமைக்க முயல்கின்றன. அதன் வழிநின்று ஏகாதிபத்தியக் கொள்கைகளுக்கு எதிராகவும் பேரினவாதத்திற்கு எதிராகவும் போராட முனைந்து நிற்கின்றன. அத்தகைய தனித் தேசிய இனம் ஒவ்வொன்றும் தமது இனம் சார்ந்த நிலப்பரப்பிற்கான தன்னாட்சி உரிமையை வேண்டி நிற்பது சட்ட விரோதமானதாகவோ, அல்லது பிரிவினைவாதமாகவோ கொள்வது அர்த்தமற்றது என்பதை இன்று உலகம் புரிந்துகொண்டு வருகின்றது.

அந்த வகையில் நிலவளம், நீர்வளம், கனிவளம், அறிவியல், தொழில்நுட்ப வளங்கள் இத்தனைக்கும் மேலாக சிறந்த ஆற்றல் படைத்த மனிதவளம் கொண்ட சுமார் 20000 சதுரகிலோமீற்றர் பரப்பளவைக்கொண்ட தமிழீழம், பொருளாதார, அறிவியல், தொழில்நுட்பத் துறையில் வளர்ச்சியை அடையும் நாள் எந்நாளோ?

- ந. அனந்தராஜ் -

www.tamilarangam.net



## நினைவில் நனைகிறோம்

சோதியா - நோர்வே

அலைவந்து கவி சொல்லும்
ஈழக் கரையெங்கும்
ஆறாத்துயர் மேவி அடிக்குதம்மா!
கருமுகில் திரண்டு கார்த்திகை வானம்
கண்ணீர் மழை சிந்த கனத்ததம்மா!
பொறுமை இழந்து புயலொன்று எழுந்து
புழுதி வாரிப் போகுதம்மா!
கொட்டும் இடியும் கொடு மின்னல் வீச்சும்
குறி சொல்லக் கேட்குதம்மா!

நேருக்கு நேராய் நிமிர்ந்திட்ட நெஞ்சிலே
வேட்டுக்கள் ஏற்று வீழ்ந்தவர் எத்தனை
விழுப்புண்களோடு வீணரின் அருகிலே
நஞ்சுண்டு நாக்காத்த நாயகர் எத்தனை
எழுஞ் சிரிப்போடு எரிமழை ஏந்தி
காற்றாய் அறைந்த கரும்புலி எத்தனை
கரு நீலக்கடலில் தடுப்பின்றி பொருதி
கப்பலொடெரிந்த கடற்புலி எத்தனை

மூடாத இமையிரண்டு வாடாத வதனத்தில்
கோடானு கோடிகதை கூறாததா
மார்போடு குண்டேந்தி சோர்வோடு களமீதில்
மண் விட்டெழுந்த உயிர் மீளாததா

விடுதலை பேசிய வெண்கல குரலினிமை
காதோரம் மீண்டு வராக் கதையானதா
பாசறை தகர்த்த பளிங்கு மலைத்தோள்
மண் மூடிப் போகுதே நிஜமானதா.

விடியும் விடியும் என்றே விளம்பி
விடுதலை மணியோசை கேட்கின்றதே
போரில் வீழ்ந்தவர் புதைகுழித் தூளியில்
பூக்கள் சொரிந்து நிறைகின்றதே
ஒருசில ஆயிரம் தாண்டும் ஒளிவிளக்கு
ஒளிரும் இருள் நீங்கி பகலாகுதே
மௌனித்து நிற்கும் மறுநொடிப் பொழுதில்
மடைதிறந்து விழிகள் குளமாகுதே.

தேசம் திரண்டு தோள் கொடுக்கும்
சீதளக் காற்றும் தீ வளர்க்கும்
கயவரை கண்முன் கடல் கொள்ளும்
புல் நுனி கூட போர் தொடுக்கும்
தொட்டில் பூக்களும் துயில் மறக்கும்
சுவாசம் ஈழம் என்றுரைக்கும்
மறவர் படையணி தடைதகர்க்கும்
மாவீரர் ஆத்மா மணங்களிக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மூன்று வருடங்களில் பனை வெல்ல உற்பத்தியில் பிரமிக்கத்தக்க வளர்ச்சி!

**1990 ஆம் ஆண்டு 3565 கிலோவாக இருந்த வருடாந்த பனைவெல்ல உற்பத்தி 1993 ஆம் ஆண்டு 2 இலட்சத்து 20 ஆயிரம் கிலோவுக்கு மேலாக அதிகரித்துள்ளது.**

பனையில் இருந்து பதநீர் எடுத்து அதனைக்கொண்டு பனைவெல்லம் உற்பத்தி செய்யும் தொழில் பாரம்பரிய முறைக் குடிசைத் தொழிலாக பண்டைக் காலந்தொட்டு நம் நாட்டில் நடைபெற்று வருகின்றது.

பனை, தென்னை வளம் சார்ந்த உற்பத்தி நடவடிக்கைகள் கூட்டுறவுச் சங்கமுறைக்கு மாற்ற மடைந்ததைத் தொடர்ந்து பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டு றவுச் சங்கங்கள் பனைவெல்ல உற்பத்தியில் ஆர்வங்கொண்டு ஈடுபட்டன.

பனைவெல்லத்தின் அதிகரித்த உற்பத்திச் செலவு, மலிவு விலையில் கரும்புச் சீனி பெறக்கூடியதாக இருந்தமை, மக்களின் பாவனைப் பழக்கம் போன்றவற்றின் காரண மாக இப் பனைவெல்ல உற்பத்தி யானது நீடித்து வளர்ச்சி பெற முடியாமல் போய்விட்டது.

தமிழீழத் தேசியத்தின் சுயசார் புப் பொருண்மியக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அமைக்கப்பட்டு, எமது இயற்கை வளங்களான பனை, தென்னை வளங்களை அபிவிருத்தி செய்வதற் காக பனை தென்ன வள அபிவி ருத்திப் பகுதியை பிரத்தியேகமாக நிறுவி, அதன் மூலம் தமிழீழத்தில் இருந்த அனைத்துப் பனை, தென் னைவள அபிவிருத்தி சார்ந்த நிறுவ னங்களை ஒன்றிணைத்து பனை தென்னைவள அபிவிருத்தி ஒன்றி யம் ஸ்தாபிக்கப்பட்டு ஆக்கபூர்வ மான பல நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டதன் விளைவாக பனைவெல்ல உற்பத்தி நிறுவனமயப் படுத்தப்பட்டு மீண்டும் புத்துயிர் பெற்றது.

பனையில் இருந்து சாறு (பதனீர், கள்ளு) உற்பத்தி செய்யும் தொழில் வல்லுனர்களின் நன்மை கருதியும், இவர்களை பதனீர் உற்பத்தி முயற்சியில் அதிக ஈடுபாடு கொள்ளவைக்கும் முகமாகவும் கள்ளிலும் பார்க்க கூடிய கொள் விலை பதனீருக்கு வழங்கப்பட்டது.

பதனீருக்கு கூடிய கொள்விலை வழங்குவதாலும், சிறீலங்கா அரசின் போக்குவரத்துத் தடையினால் விறகு போன்ற பொருட்களுக்கு ஏற்பட் டுள்ள விலைவாசி உயர்வினாலும் பனைவெல்லத்தின் உற்பத்திச் செலவு அதிகமாக உள்ளது. ஒரு கிலோ பனைவெல்லம் உற்பத்தி செய்ய கிட்டத்தட்ட நூறு ரூபா வுக்கு மேல் செலவாகின்றது. விறகு விலை குறைவாக உள்ள இடங்க ளில் மட்டும் இந்த உற்பத்திச் செலவில் சிறிது மாற்றம் உள்ளது.

பனை வெல்லத்தின் உற்பத்திச் செலவு அதிகமாக இருந்ததனால் பாவனையாளரின் நன்மை கருதியும், கரும்புச் சீனியின் பிரதியீட்டுப் பொருளாக பனைவெல்லத்தை மக்கள் மத்தியில் பாவனைப் பழக் கம் ஏற்படுத்தும் வகையிலும் விற் பனை விலை சகாயமாக நிர்ணயிக் கப்பட்டது.

உற்பத்திச் செலவு நூறு ரூபா வுக்கு மேல் இருந்த போதிலும் சில்லறை விற்பனை விலை கிலோ 40 ரூபாவாகவும், மொத்த விற்பனை விலை 37 ரூபாவாகவும் நிர்ணயிக் கப்பட்டது.

இந் நடவடிக்கையில் மேலதிக மாகத் தேவைப்படும் தொகை உற்பத்தியாளர்களுக்கு மானியமாக வழங்கப்படுகிறது.

ஒரு கிலோ பனைவெல்லத் திற்கு கிட்டத்தட்ட 83 ரூபா வரை மானியம் வழங்கப்பட்டது. இதன் மூலம் உற்பத்தியாளரும் பயன் பெற்றார்கள்.

இந்த வெல்ல விலை நிர்ணயம், மானியத் தொகை போன்ற விடயங்கள் காலத்திற்குக் காலம் மீள் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் 1994 ஆம் ஆண்டு ஒரு கிலோ பனை வெல்லத்தின் உச்ச சில்லறை விலை 50 ரூபாவாகவும், மொத்த விற்பனை விலை 47 ரூபாவாகவும், மானியத் தொகை சுமார் 55 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தேசிய வளமான பனை வளத்தை அபிவிருத்தி செய்யவும், பனைத் தொழில் வல்லுனர்களதும், பனைவளம் சார்ந்த தொழில் செய்யும் குடும்பங்களினதும் பொரு ளாதார நிலை மேம்பாடடையவும், சுதேசிய உற்பத்திப் பொருட்களை மக்கள் பாவிக்கத் தூண்டும் வகையிலும், உற்பத்தி விற்பனை ஊக்க ஆரம்பகால நடவடிக்கையாக இந்த மானியத் திட்டம் சில காலங்களுக்குத் தற்காலிகமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இந்த வகையில் கடந்த மூன்று வருடங்களில் இரண்டு கோடி ரூபாவுக்கு அதிகமான தொகை மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

இத்தகைய நடவடிக்கையின் பயனாக

பலருக்கு வேலை வாய்ப்பு கிட்டியது.

கரும்புச் சீனிக்குத் தட்டுப்பாடு நிலவிய காலங்களில் மக்களின் தேவை பூர்த்திசெய்யப்பட்டது.

தேசிய மூலவளம் பயன்படுத்தப் பட்டது.

பனைவெல்லத்தில் பிரமிக்கத் தக்க வளர்ச்சி ஏற்பட்டது.

1990 ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட பனைவெல்லம் 3565 கிலோ

1991 97386 கிலோ
1992 100847 கிலோ
1993 220106 கிலோ

கடந்த மூன்று வருடங்களில் பனைவெல்ல உற்பத்திக்காக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் தினால் வழங்கப்பட்ட மானியத் தொகை: 21423664 ரூபா

**நன்றி: காப்பரண், ஆனி 1994**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உறுதியின்
உறைவிடத்தில்
உறங்கிக் கொண்டிருக்கும்
இனிய நண்பர்களே !

உங்களின் மன எழுச்சியை -
விடுதலைத் தாகத்தை -
இலட்சிய வேட்கையை -
தியாக சிந்தையை -
உறுதியின் உரத்தை -
தேசப்பற்றை -


எங்கள்
ஆன்மாக்களில் சுமக்க
உங்கள்
கல்லறைகளின் முன்னால்
உறுதி எடுத்துக் கொள்கிறோம்.

நாங்கள் -
இலட்சியத்திற்காக
உயிரைக் கொடுக்கத்
துணிந்து விட்டவர்கள்
உயிர்களுக்காக
இலட்சியத்தை
விடக்கூடியவர்களல்ல

எனவேதான் -

பாசத்திற்குரிய
தேசத்தின் புதல்வர்களே !
நம்பிக்கையோடு
துயில்கொள்ளுங்கள் -

எமக்கென
ஒரு தேசம்
பிறக்கின்ற வரையில்
துவக்குகளோடு
நாங்கள் எழுவோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாவீரர் நினைவாக...


வாழ்க்கையை
விடுதலைப் போரினாலும்
மரணத்தை அஞ்சாத தியாகத்தாலும்
கடைசி வரைக்கும்
கனப்படுத்தி
பூமி கனக்கப்
புதைந்த புலிகளே!

காலத்தின் செவிகளில்
உமது கர்ச்சனை .......
யுகங்களின் நெற்றியில்
உமது திருப்பெயர் .......

நாளைய தமிழினப்
பிஞ்சு முகங்கள்
முகர்ந்து பார்க்கும்
ஒவ்வொரு பூவிலும்
உங்களின் உயிரின்
வாசம் கமழும் .......

நாளைய விடியலை
ஈழத்தில் எழுத
நீளும் கதிர்கள்
நிச்சயம் உமது
உயிரின் சூடும்
ஒன்றியிருக்கும்.

காலியான சயனைட் குப்பிகளும்
கனன்று கிடக்கும் தோள் துப்பாக்கிகளும்
இன்னும் உலராத இளைய ரத்தமும்
அனைத்திலும் மேலாய்
உம் வாழ்வும் மரணமும்
விடுதலை வரித்த
அடையாளங்களாய்
வரலாற்று வரிகளில்
கனத்துக் கிடக்கும்
ரத்த சாட்சிகளே
வீரவணக்கம்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்









www.tamilarangam.net

# விடியலைத் தேடி

## வீடியோ திரைப்படம்

**- சில குறிப்புகள் -**

இசை: வ. உமா - அ. ஜெயசீலன்
ஒளிப்பதிவு: பா. நிமல்
கதை, வசனம், தயாரிப்பு, நெறியாள்கை:
தி. அருளானந்தராஜா

இது ஒரு நல்ல முயற்சி. இம் முயற்சியில் ஈடுபட்ட டென்மார்க் கலைஞர்களை பாராட்டாமல் இருக்கமுடியாது. இருந்த போதும் அக் கலைஞர்களின் நடிப்பாற்றல் திறன் முழுமையாக வெளிக்கொணரப் படவில்லை. தாய்மண்ணின் போராட்ட வாழ்வினையும் புலம்பெயர்ந்த மண்ணின் வாழ்வினையும் இணைத்துப் பின்னப்பட்ட இவ் வடிவம் அதன் முழுமையை எய்திவிடாது போகிறது. கதை ஓட்டம் இன்மையாலும் ஒருவித தொய்வுநிலை ஏற்பட்டுவிடுகிறது. இருந்த போதும் புலம்பெயர் மண்ணின் வாழ்வியல் யதார்த்த தொடுகைக் காட்சிகள் நன்றாக இருக்கின்றன. தாய்மண்ணின் யதார்த்த நிகழ்வுகள் சிலவும் நெஞ்சை நெகிழ வைக்கின்ற தன்மையோடு இருக்கின்றன. புலம்பெயர்ந்த தமிழீழ மக்களின் இவ்வரிய கலை முயற்சிகள் பாராட்டப்பட வேண்டியதே.

இப் படத்தில் கூறப்படுகின்ற கருத்து அனைத்துத் தமிழ் மக்களிடமும் சில செய்திகளைக் கூறும். புலம்பெயர்ந்து அந்நிய மண்ணில் வாழ்ந்துவரும் ஈழத்தமிழ் மக்கள் போராட்டத்துக்கு ஆற்றவேண்டிய கடமைகள் குறித்தும் பேசுகிறது.

'விடியலைத் தேடி' என்னும் இந்தத் தொலைக்காட்சிப் படம் அவர்களுக்கு புதிய அனுபவங்களை நிறையக் கற்றுக்கொடுத்திருக்கும். இவ் அரிய அனுபவங்கறீடாக மேலும் நல்ல புதிய படைப்புக்களை அவர்கள் தருவார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்